புராணிகர், சாஸ்திரி

திரு. இ. சோமசாமி பாண்டியனார்

அவர்கள்

அம்பாவிப்பு

தத்ஸத்பிரஹ்மணேநம:

# வேகசிந்தாமணியில்

## வேதாந்தபரிச்சேதம்.

இது

தஞ்சைமாநகரம்

ஸ்ரீமத்

வெ. குப்புஸ்வாமிராஜு அவர்களால்

கன்னடபாஷையிலுள்ள பிரதிக்கிணங்க

திருத்தப்பட்டு

தஞ்சை

வீ. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ் அவர்களின்,

“ஸ்ரீவித்தியாவிநோதினி” முத்திராசாலையில்

பதிக்கப்பட்டது.

1906.

Copyright Registered.

இதன் விலை] [அணா 6.

# முகவுரை.

---

பிரஸ்தானத்திரயங்களாகிய உபநிஷத் பிரஹ்மசூத்திர பகவத்கீதைகளும் அவற்றின பாஷிய வியாக்கியானங்களுமாய் விரிந்த பல நூல்களைப் பார்க்கச் சக்தியற்றவர்களின்பொருட்டு அவற்றையெல்லாந் திரட்டி மிக வற்புதமாக நிஜகுணயோகி யென்பவர் கன்னடபாஷையில் **விவேகசிந்தாமணியென்னு நூலில் வேதாந்தபரிச்சேத**மெனப் பெயரிட்டுக் கூறியிருக்கின்றனர். அதனைக் காசிவாசியாகிய நீலகண்டசுவாமிகள் தமிழ்ப்பாஷையில் வசனரூபமாக மொழிபெயர்த்தருளினார். அது சில ஆண்டுகளுக்குமுன் பல வித்வான்கள் முன்னிலையில் பரிசோதிக்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கினும் அதனுள் பெரும்பாலும் வாக்கியநடைகள் பிறழ்ந்து வேதாந்தப்பிரக்கிரியைகள் மாறுபட்டு பல எளிதிற் பொருடெரிந்துகொள்ளுதற் கேதுவின்றி யிருத்தலான் பலருக்கு முபயோகமாவான் கருதி அம்முரண்களை யொழித்து எளிதிற் பொருடோன்றுமாறு முன் எம்மால் திருத்தப்பட்டு மதராஸ்ரிப்பன் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

ஆனால் அப்போது இதற்குமூலமான கன்னடபாஷையிலுள்ள விவேகசிந்தாமணி நூல் எனக்குக் கிடைக்காமையினாலும் நேரில் பார்க்க நேராமையாலும் அப்புத்தகம் பிழைபட்டது. இப்போது ஷை மூலத்திலிருந்து அநேக விஷயங்கள் தமிழுக்குக் கொண்டுவரப்பட்டன.

இனி விரைவில் எம்மால் பதிப்பிக்கப்படும் சாஸ்திர வகராதியில் இதன்கண்ணுள்ள அரும்பதங்களெல்லாம் தெளிவாய் விளக்கப்படுதலின் அவற்றிற்கு இங்கு ஓர் தனியகராதிவடிவ வரும்பதவிளக்கம் எழுதப்படவில்லை.

இது வேதாந்தசூளாமணியெனனும் பெயரால் ஸ்ரீசிவப்பிரகாசசுவாமிகளால் தமிழ்ச்செய்யுள்வடிவாய் மொழிபெயர்க்கப்பட்டுளதாயினும், அஃதோர் தெளிவான உரைனாலன்றி யறிதற்கரியதாயும், கன்னடவிவேகசிந்தாமணியினும் குறைந்த பிரக்கிரியையுள்ளதாயுமிருத்தலின் வசனநடையில் சுலபமாய் எல்லாப்பிரக்கிரியைகளையும் அறிய விரும்புவோர்க் குதவாமை காண்க.

வெ. கு.

# தஞ்சைபுரி சாரதாமந்திரபுத்தகசாலை.

## தஞ்சை ஸ்ரீ வே. குப்புஸ்வாமி ராஜு அவர்கள் இயற்றிய புத்தகங்கள்.

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| விருத்திப்பிரபாகரம் (வேதாந்தம்) | ... | 4— 0— 0 |
| ஸ்ரீ பாலபோதம் ஷை | ... ... | 1— 0— 0 |
| ஸ்ரீ விருத்திரத்நாவலி ஷை | ... ... | 0—12— 0 |
| விசாரசாகரம் ஷை இரண்டாம்பதிப்பு | ... | 3— 0— 0 |
| தத்துவமஸிமகாவாக்கிய உபதேசம் (சாந்தோக்கிய உபநிஷத்திலுள்ளது) | ... | 0— 2— 0 |
| கீதைக்கோத்து முதற்புத்தகம் உத்தரகீதை சம்ஸ்கிருதசுலோகமும் தமிழுரையும் | ... | 0— 4— 0 |
| ஹடயோகப்பிரதீபிகை | ... ... | 1— 8— 0 |
| தர்க்ககௌமுதி | ... ... ... | 0— 4— 0 |
| சங்கரகிரந்தாவலி 1-ம் புத்தகம் அபரோக்ஷாநுபூதி. ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் செய்த சம்ஸ்கிருதசுலோகங்களும் அதன் தமிழுரையும் குறிப்புரையும் கூடியது | ... | 0— 6— 0 |

1. வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ்
ஸ்ரீ வித்தியாவிநோதினி முத்திராசாலை, தஞ்சாவூர்

2. சி. சு. மா. மாணிக்கவாசகம்பிள்ளை, தூத்துகுடி

3. சி. சு. மா. மாணிக்கவாசகம்பிள்ளை,
22—3. இரும்புக்கடைபஜார், கொளும்பு

இந்த மூன்று இடங்களிலும் மேற்கண்ட புஸ்தகங்களும் இதர புஸ்தகங்களும் வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். வேண்டியவர்கள் அரையணு தபால்முத்திரை அனுப்பிப் புத்தகவிளம்பரம் பெற்றுக்கொள்க. வி. பி. செலவு பிரத்தியேகம்.

| | | |
|---|---|---|
| சுந்தரராஜா தமிழ்க்கதை | ... ... | 0—12— 0 |
| திலோத்தமா ஷை ... | ... ... | 0— 0— 6 |
| பிருந்தை ஷை ... | ... ... | 0— 1— 0 |
| சுதேசவைத்தியரத்னம் கலிகாப்பயிண்டு | ... | 1— 0— 0 |
| ஷை ராப்பர் பயிண்டு | ... ... | 0—12— 0 |

உ

# வேதாந்தபரிச்சேதத்தின்விஷய அநுக்கிரமணிகை.

---

## பிரகரணோற்பத்தி.


| | விஷயம். | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசாரியஸ்துதி ... ... ... | 1 |
| 2. | மங்கலாசரணம் ... ... ... | 1 |
| 3. | சாஸ்திரவரலாறு ... ... | 2 |
| 4. | ஜகத்காரணம் ... ... ... | 2 |
| 5. | ஜகத்கர்த்தா ... ... ... | 3 |
| 6. | ஈசுவரன்குணங்கள் ... ... | 3 |
| 7. | நாநாமத சாஸ்திரங்கள் ... ... | 4 |
| 8. | சதுர்வேதம் ... ... ... | 4 |
| 9. | வேதவாக்கியசொரூபம் ... ... | 5 |
| 10. | வேதாங்கம் ... ... ... | 5 |
| 11. | வேதோபாங்கம் ... ... | 6 |
| 12. | உபவேதம் ... ... ... | 6 |
| 13. | உபநிஷத்து ... ... ... | 7 |
| 14. | ஸ்மிருதி ... ... ... | 7 |
| 15. | யுகதர்மம் ... ... ... | 7 |
| 16. | சாதிவருணங்கள் ... ... | 8 |
| 17. | பிராஹ்மணதர்மம் ... ... | 8 |
| 18. | க்ஷத்திரியதர்மம் ... ... ... | 8 |
| 19. | வைசியதர்மம் ... ... ... | 9 |
| 20. | சூத்திரதர்மம் ... ... ... | 10 |
| 21. | ஆச்சிரமம் ... ... ... | 10 |
| 22. | விவகாரபதம் ... ... ... | 10 |
| 23. | அஷ்டாதசபுராணம் ... ... | 11 |
| 24. | சர்க்காதிபஞ்சலக்ஷணம் ... ... | 11 |
| 25. | உபபுராணம் ... ... ... | 11 |

| | | |
|---|---|---|
| 26. | இதிகாசம் ... ... ... | 12 |
| 27. | அவைதிகசாஸ்திரத்திரயம் ... ... | 12 |
| 28. | சாக்தேயபாஞ்சராத்திரங்கள் ... ... | 14 |
| 29. | ஸாதாரணசாஸ்திரபஞ்சகம் ... .. | 14 |
| 30. | இலௌகிகசாஸ்திரம் ... ... | 14 |
| 31. | வைதிகசாஸ்திரம் ... ... | 15 |
| 32. | அத்தியாத்மசாஸ்திரம் ... ... | 15 |
| 33. | அதிமார்க்கிகசாஸ்திரம் ... ... | 16 |
| 34. | மந்திரசாஸ்திரம்... ... ... | 17 |
| 35. | நாநாமதஸ்தர்களுடைய ஆத்மநிரூபணம் ... | 17 |
| 36. | நாநாமதஸ்தர்களுடையமோக்ஷலக்ஷணம் ... | 19 |
| 37. | பதினான்குவித்தை .. ... | 20 |
| 38. | மீமாம்ஸாசாஸ்திரவிவரம் ... ... | 21 |
| 39. | வேதாந்தசாஸ்திரம் ... ... | 21 |


## வேதாந்தவிஷயம்


| | | |
|---|---|---|
| 1. | சூத்திரலக்ஷணம்... ... ... | 22 |
| 2. | பாஷ்யலக்ஷணம் ... ... | 22 |
| 3. | அதிகரணலக்ஷணம் ... ... | 22 |
| 4. | மங்களாசரணத்திரயம் ... ... | 23 |
| 5. | வியாக்யானபஞ்சலக்ஷணம் ... ... | 23 |
| 6. | அந்வயபஞ்சலக்ஷணம் ... ... | 23 |
| 7. | அநுபந்தசதுஷ்டயம் ... ... | 23 |
| 8. | சாதனசதுஷ்டயம் ... ... | 24 |
| 9. | சதுர்விதகுருசேவை ... ... | 25 |
| 10. | அதிகாரத்திரயம் ... ... | 26 |
| 11. | அதிகாரபஞ்சகம் ... ... | 26 |
| 12. | குருலக்ஷணம் ... ... ... | 27 |
| 13. | அஷ்டகுரு ... ... ... | 27 |
| 14. | சிஷ்யன்விதிவதுபசந்நத்துவம் ... | 28 |
| 15. | ஸ்ரீகுருவினுபதேசம் ... ... | 29 |

16. உபதேசக்கிரமம் .. ... ... 29
17. பிராஹ்மணலக்ஷணம் ... . ... 3
18. இதிற் சமயிகள் கொண்டகோட்பாடு ... 32
19. பதார்த்தவிவேகம் ... ... 32
20. பதார்த்தத்துவயம் ... .. 33
21. திருக்குத்திருசியவிவேகம் ... ... 33
22. பேதநிராகரணம் ... ... 33
23. கற்பிதத்துவயம் .. ... ... 34
24. பிரம்மலக்ஷண விவேகம் ... ... 35
25. ஆத்மசொரூபலக்ஷணபஞ்சகம் ... 35
26. சத்துத்திரயம் ... ... ... 36
27. சித்துச்சதுஷ்டயம் .. ... 37
28. ஆநந்தாஷ்டகம் .. ... ... 37
29. அபாவசதுஷ்டயம் ... ... 38
30. பரிச்சேதத்திரயம் ... ... 39
31. ஜீவாதிநாமபேதம் ... ... 39
32. ஆத்மத்திரயம் ... ... ... 40
33. சமுசாரகற்பனை ... ... ... 40
34. ஈச்சுரநாமபேதம் ... ... 41
35. அந்த ஈச்சுரன்தேகதிருஷ்டாந்தம் ... 41
36. தார்ஷ்டாந்தம் ... ... ... 42
37. ஈச்சுரன்முக்கியகுணம் ... ... 43
38. ஈச்சுரன் பஞ்சகிருத்தியம் ... ... 43
39. ஈச்சுரன்பிரபுத்துவசாமர்த்தியகுணத்திரயம் ... 43
40. வியஷ்டிசமஷ்டிரூபத்துவயம் ... ... 44
41. கூடஸ்தன்பரியாயநாமம் ... ... 44
42. பிரஹ்மத்தின்பரியாயநாமம் ... ... 45
43. திருக்குவிவேகசாரம் ... ... 45
44. திருசியவிவேகம்... ... ... 46
45. மாயாலக்ஷணபஞ்சகம் ... ... 46

46. மாயா அநிர்வாச்சியத்வப்பிரகாரம் ... 47
47. மாயாப்பிரதிதித்திரயம் ... ... 47
48. மாயாநாமபஞ்சகம் ... ... 47
49. மாயாதர்மத்துவயம் ... ... 48
50. மாயாகுணத்துவயம் ... ... 48
51. மாயாவிருத்தித்திரயம் ... ... 49
52. மகதாதிசிருஷ்டிக்கிரமம் ... ... 49
53. குணத்திரயசிருஷ்டி ... ... 50
54. அந்தக்கரணசதுஷ்டயம் ... ... 51
55. ஞானேந்திரியபஞ்சகம் ... ... 51
56. கர்மேந்திரியபஞ்சகம் ... ... 51
57. அத்தியாத்மிகமுதலியன ... ... 52
58. இந்திரியமூலசமன்வயம் ... ... 52
59. பிராணபஞ்சகம் ... ... 52
60. உபவாயு ... ... 53
61. பஞ்சபூதங்கள் ... ... 53
62. திரிபுடி ... ... 54
63. தத்துவங்கள் ... ... 55
64. சிருஷ்டி ... ... 55
65. சிருஷ்டிதிருஷ்டாந்தம் ... ... 56
66. மாயாகாரியோதயசதுஷ்டயம் .. ... 57
67. மித்தியாத்துவதிருஷ்டாந்தம் ... ... 57
68. காரணத்துவதோஷபரிகாரம் ... ... 57
69. விஷயத்திரயம் ... ... 58
70. பிரபஞ்சத்துவயம் ... ... 59
71. உபாதித்திரயம் ... ... 60
72. அத்தியாசம் ... ... 60
73. பஞ்சாவஸ்தை ... ... 61
74. அவஸ்தாமித்தியாத்வம் ... ... 65
75. மித்தியாத்துவநிருக்தி ... ... 66
76. ஆத்மசித்தி ... ... 66

77. பஞ்சகோசவிவேகம் .. ... 67

78. அகங்காரத்தின் ஆத்மத்துவகண்டனம் ... 68

79. அகங்காரசைதன்னியவிவேகம் ... 68

80.. அகங்காரசம்பந்தம் ... ... 70

81. பிம்பப்பிரதிபிம்பபாவம் ... ... 70

82. நிராகாரத்தின் பிரதிபிம்பம் ... 71

83. பிரதிபிம்பத்தின் பிரதிபிம்பம் ... 71

84. பிம்பசாம்யபங்கம் ... .. 71

85. உபாதிசாமியம் ... ... 72

86. உபாதேயபின்னத்துவயம் ... ... 72

87. அநாதிஷட்கம் ... ... 73

88. ஜீவசப்தாவஸ்தை ... ... 73

89. சப்தாவஸ்தாஸமன்வயம் ... ... 74

90. வேதவாக்கியத்திரயம் ... ... 75

91. மகாவாக்கியம் ... ... 75

92. வாக்கியார்த்தசம்பந்தத்திரயம் ... 77

93. தத்துவம்பதவாச்சியார்த்தம் ... 77

94. தத்துவம்பதலக்ஷியார்த்தம் ... ... 78

95. இலக்ஷணையின்பேதம் ... ... 78

96. ஜகல்லக்ஷணை ... ... 79

97. அஜகல்லக்ஷணை ... ... 79

98. ஜகதஜகல்லக்ஷணை (பாகத்தியாகலக்ஷணை) 79

99. தத்துவமஸிஅர்த்தம் ... ... 80

100. தத்துவமஸிதிருஷ்டாந்தம் ... ... 82

101. வாக்கியார்த்தப்பிரதிபத்தி நிராகரணம் ... 82

102. தத்துவார்த்தம் ... ... 83

103. மித்யாத்வவிரோதம் ... ... 84

104. மித்தையினின்றும் சத்தியம் சித்தித்தல் ... 85

105. நிரஞ்சனத்துவசித்தி ... ... 85

106. நிர்க்குணசாதனை .. ... ... 86

107. ஞானத்தின் பிரதிபந்தம் ... ... 87

108. முக்திவிக்கினத்திரயம் ... ... 87
109. விக்கினத்திரய பரிகாரம் ... ... 88
110. சஹகாரிகாரணம் ... ... 88
111. சுருதிதாற்பரிய நிர்ணயலிங்கம் ... 89
112. மனனசாமக்கிரி .. ... ... 90
113. நிதித்தியாசனயோகபஞ்சகம் ... ... 92
114. பிரதிபந்தத்திரயம் ... ... 93
115. பிரதிபந்தநிவர்த்தகம் ... ... 94
116. ஞானாதிகளின் அவதி ... ... 94
117. மோக்ஷகாரணம் ... ... ... 95
118. ஞானபூமிசப்தகம் ... ... 95
119. ஷட்சமாதி ... ... ... 96
120. ஞானபலசதுஷ்டயம் ... ... 97
121. முத்தித்துவயம் ... ... ... 99
122. ஞானப்பிரபாவம் ... ... 100
123. ஞானியின்போகசித்தி ... ... 100
125. சீவன்முத்தனுக்குச் சற்குணசதுஷ்டயம் ... 101
126. சீவன்முத்தனுக்குப் பஞ்சப்பிரயோஜனம் 102
127. ஞானிசின்னங்கள் ... ... ... 102
128. குணமிகுதிப்பாடு ... ... ... 103
129. ஞானியினால் இவ்வுலகிற்குண்டாம் பயன்... 103
130. ஜீவன்முக்தர் பிராரத்தம் ... ... 104
131. பிராரத்தத்திரயம் ... ... 105
132. சீவன்முக்தர்களுடைய விசித்திர சரித்திரம் 105
133. அஞ்ஞானிக்கும் ஞானிக்கும் பேதம் ... 106
134. தன்நாசப்பிரயத்தின முண்டாதல் ... 106
135. சீவன்முத்தர் பெருமை ... ... 107
136. விதேககைவல்லியமடையும் கிரமம் ... 108

அநுக்கிரமணிகை

முடிந்தது.

சுபமஸ்து.

ஸ்ரீகுருப்யோநம:

# விவேகசிந்தாமணி.

## (வேதாந்தபரிச்சேதம்.)

## பிரகரணோற்பத்தி.

### ஆசாரியஸ்துதி.

வேதமாங் கடலி னின்று வித்தையாம் வேதாந் தத்தை
யோதினன் வெளிப்ப டுத்தி யுண்மையாச் சங்க ரன்று
ணுதவ னுயர்வே தாந்த வம்புயந் தன்க்கா மிந்த
வேதமில்குரவ னின்றே லெங்ஙனம் விளக்கும் வித்தை.

ஸ்ரீமத் அநேகலோக இதார்த்தமான வேதபுராண சாஸ்திரங்களின் அர்த்தத்தை யாவரும் அபிவியக்தமா (வெளிப்படையா) கக் காணும்படி காட்டுகின்றமையால விவேகசிந்தாமணி யென்று இதற்குப் பெயரிடப்பட்டது. நீ யிதனை யன்புடனே கேட்பாயாக வென்று ஆசாரியர் சிஷ்யனுக்கு அநுக்கிரகிக்கின்றார்.

### மங்கலாசரணம்.

ஸ்ரீமத் அநேக புவனபவனாரம்பமூலஸ்தம்பரூப சமபுலிங்கமாதி நிராபாரிதேசிகோத்தம பரியந்தமான மகாகுருபரம்பரையை மனோ வாக்குக் காயங்களால் நமஸ்காரம் பண்ணுகிறேன். நமஸ்காரலக்ஷண மங்கலாசரணத்தால் நிர்விக்கினமாக இப்பிரகரணம் முடிவுபெறுதல், சிஷ்யப் * பிரசிஷ்யப் பிரவாகப் பிரவர்த்தனை, கேட்

* பிரசிஷ்யன்-மாணாக்கனது மாணாக்கன். † பிரவாகம்-பரம்பரை. ‡ பிரவர்த்தனை-நடத்தல்.

பவர்களுக்குச் சித்தசத்தி என்னும் பலத்திரயசித்தி உண்டாகுமென்று நிச்சயிக்கப்படும்.

## சாஸ்திரவரலாறு

அநாதி நிர்மல சித்துருபனா யிருத்தலால் எல்லாவற்றின் மேலானவனாகிச் சர்வஞ்ஞத்துவாதி குணங்களோடு கூடியிருக்கும் பரமேசுவரனால் சொல்லப்பட்ட பரமப்பிரமாணமும் வேதமூலமுமான ஸ்மிருதி புராண ஆகம இதிகாசானுசாரமாய் அநுபவிகளா மென்னத்தக்கதாகச் சுவக போல கற்பித மில்லாமல் (தனது சொந்தக்கற்பனையின்றி) சாரத்தினும் சாரமான சத்தியார்த்தங்களைச் சங்கிரகித்து, முன்னுள்ள இரத்தினாதிகளை யொப்பமிட்டுத் தரமறிந்து சரமாகக் கோவைசெய்ததனால் நவீனகண்டாபரணமெ(புதிய கழுத்தணியெ),ன்று சொல்லத்தக்கதாய், முமூட்சுக்கள் இச்சகத்தில் நிலையுங் கதியும் எவ்வாறோ வென்று தேடி வருந்தாமல் இதனால் மகாலீலாவிநோதங்களை வெளிப்படையா யறிந்து, கிருதார்த்த ராகவேண்டு மென்று நிசகுணசிவயோகி கன்னடத்திற் சொன்ன வசனங்களாகிய விவேகசிந்தாமணியின் வேதாந்தபரிச்சேதத்தினை யான் தமிழிற் சொல்லுகின்றேன்.

## ஜகத்காரணம்.

முதலில் சக்ஷுஸ் (நேத்திர) முதலிய புறவிந்திரியங்களுக்கு விஷயமாய்க் காணப்படுஞ் சகத்திற்கு வெவ்வேறு புத்தி குண அவயவ ஆகாரங்க ளிருத்தலின் கடம்போலக் காரியமாய், குலாலனைப்போல நிமித்தகாரணனான ஈச்சுரனால் சக்கரதண்டம்போன்ற புண்ணியாபுண்ணியகர்மமான சககாரி (துணைக்) காரணத்தால் மிருத்திகையிற் (மண்ணிற்) போலப் பிந்து மாயை யென்னும் சுத்தாசுத்த மாயாவுபாதானகாரணத்தினின்றும் கமனாகமன (போக்குவரவு) சுகதுக்காதி யநேக விவகார பேதங்களோடு பின்ன

மான ஆத்மாக்கள் போகமோக்ஷத்தின் பொருட்டுச் சனித்தன வென்றறிக.

## ஜகத்கர்த்தா.

பிரகிருதி பரமாணு கால கர்மாதிகளோ சகத்கர்த்தா, ஈச்சுரன் அல்லனென்பையாயின், பிரகிருதிமுதலிய யாவும் சடரூப மாகையால், சைதந்நியாதிஷ்டான மில்லாமல் சகம் தானே உண்டாகமாட்டா தென்பது நிச்சயம். ஆனால் சேதனனான சீவனே சக்த்கர்த்தாவெனின், அவனுக்குக் கிஞ்சிஞ்ஞத்துவ (அற்பவறிவுடைமை) அதிருஷ்டபரதந்திரத்துவ (புண்ணியபாவவசத்தனாதல்) அநீசசுரத்துவாதி (ஈசத்துவமின்மை முதலிய) தோஷமிருத்தலால் அவன் சகத்துக்குக் கர்த்தாவாகமாட்டான். * பாரிசேடநியாயத்தால் ஈச்சுரனே கர்த்தா வென்று நிச்சயிங்கப்படுவன். சகத்துரூபம் பெருங்காரியமாகையால் இரதத்தைச் செய்வாரைப்போல வெகு கர்த்திருத்துவ முண்டெனின் அது இரதாசாரியனென்னும் ஒருவன் சூத்திரந்தாலாவதல்லது, மற்றவர்களாலாவதன்று. தத்தம் அபிமானத்தால் தம்மைத்தாமே இரக்ஷித்துக்கொள்ளுங் காரியமுளதேல் அநேக கர்த்திருத்துவத்தால் ஒரு காரியமுமாகாது. ஆகையால் சகத்துக்கு ஈச்சுரனொருவனே கர்த்தனாகவேண்டும்.

## ஈசுவரன் குணங்கள்.

அவ்வொருவனாகிய ஈச்சுரனுக்கே எக்காலத்திலும் எத்தேசத்திலும் காரியத்தை யுண்டுபண்ணுந்தன்மை யிருத்தலின் நித்தியத்துவ வியாபகத்துவமும், எக்காரியத்தையும் அறிவ

---

* மூவரில் இருவர் செய்யவில்லை யென்றால் மூன்றாமவன் செய்தனன் என்று கொள்ளும் திருஷ்டாந்தத்தினை பாரிசேடநியாய மென்பர்.

தற்கும் செய்வதற்குஞ் சமர்த்தனாகையால் சர்வஞ்ஞத்துவமும் சர்வசத்திமத்துவமும் (எல்லாவல்லமையுடைமையும்) காலமானது தான் அமூர்த்தமாய் (வடிவமில்லாததாய்) இலை பூமுதலியவற்றை யுண்டாக்குமாப்போலச் சகல காரியங்களையும் ஆக்குவோனா யிருத்தலின் நிட்களத்துவமும், சர்வாத்துமாக்க ளிதயத்திலும் அந்தரியாமியாகிப் புறம்பே சுருதி ஸ்மிருதிரூபமான ஆணையால் நியாமக (நடத்துவோ)னா யிருத்தலின் சர்வ பிரேரகத்துவமும், குலாலாதிகர்த்துருத்துவத்தால் அந்நியமான கடபடங்கள் நியமிக்கப்படுதல்போல அந்நிய சரீராதியை நியமித்தலாலும் விசுவமெல்லாம் விச்வேச்சுரனினின்று நியமமானதென்று சுருதியிருத்தலாலும் சர்வாத்துமகத்துவமும் (எல்லாவடிவமாதலும்), தனக்குப் பிதாவும் கர்த்தாவுமின்றி அத்விதீயனா யிருத்தலின் சர்வ சுதந்திரத்துவமும் (தன் வசத்தனாதலும்), ஆத்மாக்கள் செய்த கர்மத்தினையநுசரித்துச் சுகதுக்கங்களைத் தருதலால் இராகத்துவேஷமின்மையும், தன்னால் சிருஷ்டியான ஆகாயாதி ஜகத்தை வேறுவிதமாகச் சிருஷ்டி செய்வதற்கு வேறு சமர்த்தரில்லாமையால் சர்வேசுவரத்துவமும் உண்டென்பது நிச்சயம்.

---

## நாநாமத சாஸ்திரங்கள்.

அவ்வீச்சுரனால் நிர்மிக்கப்பட்ட சேதநாசேதனரூப சகத்தில் போகமோக்ஷார்த்தமாய் வெவ்வேறாகப் பிரவர்த்தித்துள்ள நாநாவாதிகளின் கொள்கைவடிவினவாகிய சாஸ்திரங்களாவன:—

## சதுர்வேதம்.

முதல்முக்கியப்பிரமாணம் இருக்குவேதம், எஜுர் வேதம், சாமவேதம், அதர்வணவேத மென்பனவாம். இவை சுவயம்பூவென்றும், ஈச்சுரனாற் சொல்லப்பட்ட

வைகளென்றுஞ் சொல்லப்படும். அவற்றுள், 1 இருக்கு வேதம் இருபத்தொருபேதம். 2. எசுர்வேதம் நூற்றொரு பேதம். 3. சாமவேதம் சகஸ்ரபேதம், 4. அதர்வண வேதம் நவபேதம்.

## வேதவாக்கிய சொரூபம்.

அவ்வேதம் எதைச் சொல்லுமெனின் விதிவாதம், அர்த்தவாதம், மந்திரவாதம், நாமதேயமென நான்கு பேதத்தால் சகல தர்மங்களையுஞ் சொல்லும். அவற்றினுள்,

1. இராஜன் ஆணையைப்போல மனிதரை நிஷேதகர்மஞ்செய்யாமல் திருப்பிச் சுபகர்மஞ் செய்யவேண்டுமென்று விதிப்பது **விதிவாதம்,**

2. * படர்களைப்போலத் துதிப்பது **அர்த்தவாதம்.**

3. ஆசாரியனைப்போல செய்யத்தக்கவைகளைக்காட்டுவது **மந்திரவாதம்.**

4. மாதாபிதாவைப்போல யாகாதிகளுக்குப் பெயரிடுவது **நாமதேயம்.**

## வேதாங்கம்.

அவ்வேதத்துக்குப் பாதம், அஸ்தம், முகம், கிராணம், நேத்திரம், சுரோத்திர மென்னும் முறையான் சந்தசு, கல்பம், வியாகரணம், சிக்ஷை, சோதிஷம், நிருத்தி யென்னும் ஆறும் அங்கங்களாம். அவற்றுள்,

1. மந்திர சுலோகாதிகளுக்கு அக்ஷரகணிதஞ் செய்வது **சந்தசு.**

2. ஆசுவலாயன போதாயன ஆபஸ்தம்பாதிசூத்திர வடிவத்தான் யாகப்பிரயோகாதிகளைக் கற்பிப்பது **கல்பம்.**

3. சப்தசித்தியைச் சமர்ப்பிப்பது **வியாகரணம்.**

---

* அரசன் சமீபத்திருந்து துதிப்போர் **படர்.**

4. உதாத்த, அநுதாத்த, ஸ்வரித, பிரசயமென்னுஞ் சதுர்விதஸ்வரகரணபூர்வகமான *பதபாளிக்கிரம வேதாத்தியாயனாதிகளைச் சொல்வது சிக்ஷை.

5. லக்கின திதி வார நக்ஷத்திர யோக கரணாதிகளால் வைதிககர்மங்களுக்குக் காலந்தெரிவிப்பது ஜோதிஷம்.

6. வைதிக சப்த நிர்வசனத்தை நியமிப்பது நிருத்தி.

## வேதோபாங்கம்.

அவ்வேதத்துக்கு ஸ்மிருதி, புராணம், நியாயம், மீமாம்ஸை என்னும் நான்கும் உபாங்கமாம். அவற்றினிலக்கணம் மேற் சொல்லுதும்.

## உபவேதம்.

அவ்வேதத்துக்கு ஆயுள்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதமென உபவேதம் நான்குண்டு. அவற்றுள்,

1. **ஆயுள்வேதம்** வியாதிநிதானம், வியாதிச்சின்னம், மந்திரௌஷதசிகிச்சை என்பவற்றால் ஆயுராரோக்கியாதிகளைக் காட்டுவது.

2. **அர்த்தவேதம்** தக்ஷிணை, ஆச்சியம் (நெய்), சரு (அவி) முதலான உபகரணங்களால் தர்மாதிசதுஷ்டயத்துக்குச் சாதனமாம்.

3. **தனுர்வேதம்** சத்துருஜயார்த்தமான மந்திராஸ்திரப் பிரயோகாதிகளைக் கற்பிப்பது.

4. **காந்தருவவேதம்** சாமவேதாதிகளின் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் சத்தஸ்வர கீதப்பிரபந்தங்களை விவரிப்பது.

---

* பதபாளி-சொற்களின் வரிசை.

## உபநிஷத்து.

அவ்வேதத்தில் சீருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினிருத்திரம், கடவல்லி, காத்தியாயனம், பிரஹ்மம்; நாராயணம், ஹம்ஸம், பரமஹம்ஸம், பாஷ்களம், பிரஹ்மபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, சர்ச்சி, பஞ்சப்பிரஹ்மம், ஜாபாலம், தேஜோபிந்து, வாஜசநேயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம்,பாருராயணீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், ஈசாவாஸியம், தலவகாரம், கிராலம்பம், முத்கலம், முண்டகம், மைத்திராயணீயம், தைத்திரீயம், சாந்தோக்கியம் கௌஷீதகிமுதலியன உபநிஷத்துக்கள். இவை ஞானங்கமான விபூதிருத்திராக்ஷாதிகளையும், பிரஹ்மஞானாதிகளையும் விவரிப்பன.

## ஸ்மிருதி.

* மநு, அத்திரி, ஹாரிதம். விஷ்ணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கீரசம், யமம், ஆபஸ்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகஸ்பதி, பராசரம் , வியாசம், சங்கம், லிகிதம், தக்ஷம், கௌதமம், சாதாதபம், வசிஷ்டம் என அந்தந்த நாமதேய முள்ளவர்களால் சொல்லப்பட்ட தர்மசாஸ்திரம் இருபது.

## யுகதர்மம்.

கிரேதாயுகத்தில் மநுஸ்மிருதிதர்மமும், திரேதாயுகத்தில் கௌதமஸ்மிருதிதர்மமும், துவாபரயுகத்தில் சங்கலிகிதஸ்மிருதி தர்மமும், கலியுகத்தில் பராசரஸ்மிருதி தர்மமும் முக்கியமாம். இந்த ஸ்மிருதிகளில் சாதி வருணச்சிரமாசாரங்களும், தாயாதிவிபாகமுதலிய அஷ்

* மநுதர்மசாஸ்திரத்தை நீக்கிச் சங்கத்தையும் லிகிதத்தையும் ஒன்றுபடுத்திப் பதினெட்டென்பர்,

டாதச விவகாரங்களின் பேதங்களும், மகா பாதகங்களுக்குப் பிராயச்சித்தாதி விதிகளும் சொல்லப்படும்.

## சாதிவருணங்கள்.

அவற்றுள், கம்மியம் அல்லது மஹாராஷ்டிரம், கன்னடம், ஆந்திரம், திராவிடம் எனச் சாதி நான்கு. பிராஹ்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரரென வர்ணம் நான்கு.

## பிராஹ்மணதருமம்.

இந்நான்கில் கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், சாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம் உபநயனம், உபாகர்மம், உத்ஸர்ஜனம், வேதவிரதம், கௌதானிகம், ஸ்நாதகம், விவாகம், ஸ்மார்த்தாக்கினி ஹோத்திரம், ஔர்த்துவதேஹிகமென்னும் சோடச சம்ஸ்காரங்களுடனே யஜனம் (வேட்டல்), யாஜனம் (வேட்பித்தல்), அத்தியயனம் (ஓதல்), அத்தியாபனம் (ஓதுவித்தல்), தானம் (இடுதல்), பிரதிக்கிரகம் (ஏற்றல்) என்னுஞ் ஷட்கர்மமும், சிவபத்தியாதி சகல சற்குணங்களுமுடையவன் **பிராஹ்மணன்.**

## க்ஷத்திரியதருமம்.

பிரஜாபாலனம், யஜனம், அத்தியயனம், துஷ்டமிருக பக்ஷி சத்துரு சங்காரம், அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், பூதானம், கோதானம், உபயமுகிதானம், இரண்ணியதானம், மகிஷதானம், அசுவதானம், சுவேதாசுவதானம், காலமுகிதானம், மகாமேருதானம், கற்பகவிருக்ஷதானம், வித்தியாதானம், மகாதானமுதலியவைகளின் பொருட்டுக் காலதேச பாத்திர பரீக்ஷை விஷ்ணுபத்தியாதி கர்மமுடையவன் **க்ஷத்திரியன்.**

## வைசியதருமம்.

ஏகம், தசம், சதம், சகஸ்ரம், தசசகஸ்ரம், லக்ஷம், தச லக்ஷம், கோடி, தசகோடி, சதகோடி, அற்புதம், நிர்ப்புதம், கர்வம், மகாகர்வம், பத்மம், மகாபத்மம், க்ஷோணி, மகாக்ஷோணி, சங்கம், மகாசங்கம், க்ஷிதி, மகாக்ஷிதி, க்ஷோபம், மகாக்ஷோபம், நிதி, மகாநிதி, சாகரம், மகாசாகரம், அரி, மகாஅரி, சங்கை, மகாசங்கை, பணி, மகாபணி, கிருதீ, மகாகிருது என்னும் முதல்ஸ்தானமாதி முப்பத்தாறு ஸ்தானபரியந்தமான இலக்கங்களையும்; (க) ஒன்று என்பதற்கு ஏகம், ரூபம், பூமி, சந்திரன் என்னும் சமிஞ்ஞை (பெயர்); (உ) இரண்டென்பதற்கு துவ, துவே, துவி, துவித, துவய, துவிதிய, யுக்கும, யுகள, யுக, உபய, பாகு, பாத, பக்ஷ, நயனுதி சமிஞ்ஞை; (ந) மூன்றிற்குத் திரி:, திரய, திருதிய, ஹரநயன, அக்கினி, வர்க்க குண, புராதி சமிஞ்ஞை; (ச) நான்கிற்குச் சது:, சௌ, சதுர்த்தி, சமுத்திர, வேத, வர்ண, ஆச்சிரமாதி சமிஞ்ஞை; (ரு) ஐந்திற்குப் பஞ்ச:, ஹரவக்த்ர, விரத, இந்திரிய: விஷய, கஷாய, பாண, பாண்டவ, பூதாதி சமிஞ்ஞை; (சு) ஆறினுக்கு ஷடு:, ராசாங்க, இருது, ரச, ஸ்கந்தமுக, வேதாங்க, வர்ணகர்ம, தரிசனுதிசமிஞ்ஞை; (எ) ஏழிற்குச் சப்த:, முனி, கிரி, தானுங்க, ராசாங்க, துரக, தாது, சபாங்க, ஸ்வர, சாகராதி சமிஞ்ஞை; (அ) எட்டிற்கு அஷ்டவசு, திக்கு, கஜ, மத, கர்மாதி சமிஞ்ஞை; (கூ) ஒன்பதிற்கு நவ:, திரவிய, நாத, நிதி, கிரக, ரஸ, பக்தி, ரத்நாதி சமிஞ்ஞை; (க0) பத்திற்கு தச:, பிந்து, குன்னிய, நாஸ்தி, அவதார, ககனுதி சமிஞ்ஞை என்னும் இவை முதலான சமிஞ்ஞைகளையு மறிந்தும், கிரமுகாதி (பாக்குமுதலிய) வஸ்துக்களை எண்ணியறிந்தும், பத்தரைப் பணத்தினிறை கழஞ்சு, கழஞ்சு ச கூடினது கரிஷம், கரிஷம் ச கூடினது பலம், பலம் ச0 கூடினது வீசை, வீசை ரு

கூடினது துலாம், துலாம் ௨௰ கூடினது பாரம், பாரம் ௪௦ கூடினது அஸ்தமென்று கர்ப்பூராதிகளைத் தூக்கி அறிந்தும; ஒரு சிட்டி விகுஞ்சம்; விகுஞ்சம் ௪ கூடினது குடுவம், குடுவம் ௪ கூடினது பிரஸ்தம், பிரஸ்தம் ௨ கூடினது வாகம், வாகம் ௨ கூடினது ஆடகம், ஆடகம் ௪ கூடினது துரோணம், துரோணம் ௫ கூடினது கரி என்று தான்னியாதிகளை யளந்தறிந்தும்; சுவர்ணத்தின மாற்று, பிரவாளத்தின் கழஞ்சு, மணியின் சவ்வு, ரத்தினத்தின் சூத்திரபரீக்ஷை, வச்சிரத்தின மஞ்சாடி, பச்சையின் ரதியமாதிகளை யறிந்தும்; கிரயம், வட்டம், வட்டி முதலியவற்றை யறிந்தும் செய்கிற வாணிச்சிய, கிருஷி, பிராஹ்மணக்ஷத்திரிய சேவை, கௌபாலிக (கோரக்ஷணை), யசன, அத்தியயன, தானங்களோடு சூரியாதி பூஜைகள் என்னும் கர்மமுடையவன் **வைசியன்.**

## சூத்திரதருமம்.

பிராஹ்மணாதிவர்ணத்திரய சேவை, சகல தேவதா பத்தி முதலான கர்மங்களுடையவனும் பிராஹ்மணாநுக்கிரகம், க்ஷத்திரியனது பாதுகாப்பு, வைசியசகாயம் என்பவற்றை யுடையவன் **சூத்திரன்.**

## ஆச்சிரமம்.

பிரஹ்மசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்யாசமென ஆச்சிரமம் நான்கு.

## விவகாரபதம்.

கடன்கோடல், உபநிதி (ஒருவனிடத்துக் காக்கும்படி வைத்த பொருள்), கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்

டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடுகெடத்தல், நிலவழக்கு, மாதராடவர்தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற் கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு என விவகார பதங்கள் பதினெட்டாம்.

## அஷ்டாதசபுராணம்.

பிரஹ்மம், பதுமம், விஷ்ணு, சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பௌஷ்யத், பிரஹ்மவைவர்த்தம், இலிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மச்சியம், காருடம், பிரஹ்மாண்டம் எனச் சிவப்பிரசாதத்தால் வியாசரிஷியாற் சொல்லப்பட்ட வேதத்திலுள்ள சாரார்த்தத்தைச் சொல்லும் நான்கிலக்ஷம் * கிரந்தசங்கியையுள்ள அஷ்டாதசபுராணங்களில் சைவம், ஸ்காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌஷ்யத், மச்சியம், மார்க்கண்டேயம், பிரஹ்மாண்டமென்னும் பத்தும் சிவபுராணமும்; நாரதீயம், பாகவதம், காருடம், விஷ்ணுவென்னும் நான்கும் விஷ்ணுபுராணமும்; பிரஹ்மம், பதுமம் என்னும் இரண்டும் பிரஹ்மபுராணமும்; பிரஹ்மவைவர்த்தம் சூரியபுராணமும்; ஆக்கினேயம் அக்கினிபுராணமுமாம். இந்த ஏற்றத்தாழ்விலேயே தேவதா தாரதம்மியங்களையும் அறிந்துகொள்க.

## சர்க்காதி பஞ்சலக்ஷணம்.

இப்புராணங்களில் சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மனுவந்தரம், வம்சானுசரிதம் என்னும் பஞ்ச லக்ஷணங்களும், சகலவைதிக தாந்திரிக கர்மங்களுஞ் சொல்லப்படும்.

## உபபுராணம்.

சனற்குமாரம், நாரசிங்கம், நந்தி, சிவதருமம், தூர்வாசம், நாரதீயம், கபிலம், மானவம், உசனம், பிரஹ்மாண்

* முப்பத்திரண்டு எழுத்துக்களுள்ள ஒரு சுலோகம் ஒருகிரந்தமெனப்படும்.

டம், வாருணம், காளி, வாசிஷ்ட லைங்கம், சாம்பவம், சௌரம், பராசரம், மாரீச்சியம், பார்க்கவம் என்னும் அவ்வப்பெயருள்ளவர்களால் செய்யப்பட்ட அஷ்டாதச உபபுராணமும் வைதிகதர்மத்தையே சொல்லும்.

## இதிகாசம்.

பாரதஇராமாயணாதிகள் வியாசவான்மீகிகளாலுண்டான இதிகாசங்கள். அவை சத்துவாதி குணபேதங்களையும், தேவத்திரய லக்ஷணங்களையும், தேவதானவாதிகள் சனனக்கிரமத்தையும், யுதிஷ்டிர ராமசந்திராதிகள் சரித்திரங்களையும், வைதிகாதி தர்மங்களையும் திடப்படுத்திச் சொல்லும்.

## அவைதிக சாஸ்திரத்திரயம்.

இதற்குமேல் பிரகஸ்பதி, ஆருகதர், சுகதரென்னும இவர்களால் முறையே சொல்லப்பட்ட சாருவாகம் ஜைநம் பௌத்தமென அவைதிக சாஸ்திரத்திரய முண்டு. அவற்றுள்,

**சார்வாகமாவது** பிருதிவியாதி நால்வகைப் பூதவிகாரமான சகத்தில் சுகமே சுவர்க்கம், துக்கமே நரகம், இவையன்றி வேறு சுவர்க்கநரக மில்லையென்று பிரதிபாதிப்பது.

**ஜைநமாவது** சித்த பத்த நாரகிக ளென்னும் புருஷத்திரய லக்ஷணங்களையும், ஒட்டீச, ஒட்டாமரேச, சுவாலினகல்ப, பதுமாவதிகல்ப, சாரதாகல்ப, குச்குடநாதாதி கல்பாதிகளையும், மந்திரௌஷதாதிப் பிரயோகஞ் செய்பவர்களான பரமசித்தர்களையும், லூனகேச (முண்டித) திகம்பர (நிர்வாண) பாணி பாத்திர (கமண்டல) மயூரபிச்ச (மயிற்றோகை) *பஞ்சபல தாரணாதிகளின் கொலை,

* பஞ்சபலங்களாவன :—மனத்தின் அங்கங்களாகுள்ள ஆற்றல் (க) சிரத்தை, (உ) சாமர்த்தியம், (௩) ஞாபகம், (௪) மனனம், (௫) ஊகித்தல்.

களவு, பரதாரகமனம், பொய்களின்றிய பஞ்சாணுவிரதங்க
ளில் மது, பலாண்டு(உள்ளி)முதலான நிஷேதத்திரவியங்
களை விட்டு, தப்தசிலாசயனாதி (சூடேறிய கல்லில்படுத்
தல் முதலிய) உக்கிரதபசினை யாசரிக்கிற முனிவிருத்திக
ளையும், ஏமசந்திர, நாகசந்திர, நேமிசந்திர, மேகசந்திர,
மாகசந்திர, அருகத, ஆதிநாத, அங்கள, பாரிசுவநாத,
சௌகத, சுருதிகீர்த்தி, ஸ்ரீமத் காமரகித முனிசுவாமி
முதலான இருபத்துநான்கு தீர்த்தகரருடைய சரித்திரங்க
ளையும், ஸ்யாதஸ்தி (என்றுமிருத்தல்), ஸ்யாந்நாஸ்தி
(என்றுமின்மை) முதலான சத்தபங்கிகளையும், சீவ, சசீவ,,
நிர்சசீவ, நிர்ச்சர, ஆசிரம, பந்த, மோக்ஷமென்றும் சத்த
பதார்த்தங்களையும் பிரதிபாதிப்பது.

**பௌத்தமாவது** சௌத்திராந்திகம், வைபாடிகம
யோகாசாரம், மாத்தியமிகமென நான்கு பிரகாரமாய்ப
பிருதிவியாதி புத்தியந்தமான இருபத்துமூன்று தத்துவ
வடிவப் பிரபஞ்சம் தீபசுவாலையைப்போல க்ஷணிகமாத்
திர மென்று பிரதிபாதிப்பது.

இதற்குமேல் நிஷேதகாமசாஸ்திரங்க ளுண்டு
அவை சத்தியநாதர், சலோகநாதர், ஆதிநாதர், அநாதிநா
தர், அகுளிதநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்
திரநாதர், கோரக்கநாதர் என்னும் நவநாத சித்தர்களால்
கற்பிதமான கௌளயாமளாதி இம்சைமைதுனாதி நிஷேத
கர்மமுள்ள சாஸ்திரங்கள் இவை அபிசார கர்மசனி
த வியாதியாதியால் அகாலமிருத்துருபமான மரண சுழு
த்தி விஷமூர்ச்சாதிரூப மோகனமும், அக்கினிஸ்தம்
பனம், ஜலஸ்தம்பனம், இந்திரியஸ்தம்பனம், கடகஸ்தம்ப
னம், சிங்குவைஸ்தம்பனம் கதிஸ்தம்பனமுதலிய ஸ்தம்பன
மும், பூர்வசங்காசிரய விரசனாத்மகமான உச்சாடனமும்,
வஸ்திராபரண வாகன வனிதாதி வஸ்துக்களை நிஜஸ்தா

னத்திலிருந்து அழைப்பிக்கும் ஆகருஷணமும், பிராண சிநேகிதமானவிடத்தில் அந்நியோந்நியவிரோதமுண்டாக்குகிற வித்வேஷணமும், இராஜவசியாதி வசியங்களுமான ஷட்கர்மங்களுமாகிய இவைகளேயும், சுராசுர பூதக்கிரகாவேசங்களேயும், பாதுகாசித்தி, அஞ்சனசித்தி, குடிகாசித்தி, மூலிகாசித்தி, ரசவாத மென்பவற்றையும் பிரதிபாதிக்கும்.

## சாக்தேய பாஞ்சராத்திரங்கள்.

இதற்குமேல் சத்திதத்துவவாசி யென்னும் ஒரு ஆத்மாவினாலும், வாசுதேவனாலும் கிரமத்தில் பிரதிபாதிக்கப்பட்ட சாக்தேயம், பாஞ்சராத்திரமென வேறு சாஸ்திரமிரண்டுள. அவற்றுள்,

க. **சாக்தேயம்** சடாசடப்பிரபஞ்ச மெல்லாம் சததிபரிணாமமென்றல் முதலிய மதவிஸ்தாரஞ்செய்வது.

உ. **பாஞ்சராத்திரம்** பிருதிவியாதிமானசமீறான இருபத்துநான்கு தத்துவங்கட்குமேல் குணமூலதத்வவடிவவாசுதேவனால் சகத்தினது இதத்தின்பொருட்டுண்டான சங்கருஷண அநிருத்த பிரத்தியும்ன கிருஷ்ணரென்னும் நபல்வரா லுற்பத்திமுதலிய தொழில்களாமென்று பிரதிபாதிப்பது.

## சாதாரண சாஸ்திரபஞ்சகம்.

இதற்குமேல் இலௌகிகம், வைதிகம், அத்தியாத்மம, அதிமார்க்கிகம், மந்திரமெனப் பஞ்சவித சாஸ்திரங்களுள. அவற்றுள்,

### க. இலௌகிகசாஸ்திரம்.

தன்வந்திரிமுதலியோராற் சொல்லப்பட்ட ஆயுள்வேதம், தண்டம், நீதி, சிற்பம் முதலான சாஸ்திரம். அது திருஷ்டபலன்களேப் பிரதிபாதிப்பது.

## உ. வைதிகசாஸ்திரம்.

*ஜைமினி, அக்ஷபாதர், கணாதரென்னும் இருஷிக ளால் கிரமத்திற் சொல்லப்பட்ட பூர்வமீமாம்ஸை, நியா யம், வைசேடிகமெனத் திருஷ்டாதிருஷ்டபலன்களைப் பிரதிபாதிக்கும் சாஸ்திரத்திரய முண்டு. அவற்றுள்,*

க. **பூர்வமீமாம்ஸையென்பது** உபக்கிரமஉபசங்கா *ரமுதலான ஷட்விதலிங்கதாற்பரியத்தால் வேதவாக்கிய விசாரபூர்வகமாய்ச் சோதிஷ்டோமயாகாதி கர்மங்களை விதிக்கிரமமாகச் சொல்லுவது.*

உ. **நியாயமாவது** *கௌதமராற் செய்யப்பட்டுப் பிர மாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசனம், திருஷ்டாந் தம், சிந்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், ஜல் பம், விதண்டை, ஏத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரக ஸ்தானமென்னும் சோடசபதார்த்தங்களையுஞ் சொல்லிப் பிரபஞ்சத்துக்கு ஈச்சுரனே கர்த்தாவென்று நிச்சயிப்பது.*

ங. **வைசேடிகமாவது** *கணாதராற் செய்யப்பட்டுத் திரவியம், குணம், கர்மம், சாமானியம், விசேஷம், சமவா யம், அபாவமென்னும் சத்தபதார்த்தத்தைச் சொல்லுவத னால் பிரபஞ்சசொரூபத்தை விவகரிப்பது.*

## ங. அத்தியாத்மசாஸ்திரம்.

*கபிலர் பதஞ்சலி வியாசரென்னு முனிவர்களால் கிர மத்திற் சொல்லப்பட்ட சாங்கியம், பாதஞ்சலம், வேதாந் தமென ஆத்மஞானபலன்களுள்ள மோக்ஷப்பிரதிபாதக* **அத்தியாத்மசாஸ்திரத்திரய** *முண்டு. அவை பாஷிய வியாக்கியானாதிகளோடுகூடிய சாங்கியசூத்திரம், யோக சூத்திரம், பிரஹ்மசூத்திர மென்பவாம். அவற்றுள்,*

க. **சாங்கியம்** *நித்தியநிர்மலமான ஆத்மசந்நிதானத் தில் குணத்திரயவடிவமான பிரகிருதியே மகதத்துவாதி*

இருபத்தைந்து தத்துவசொரூப ஜகத்தாமென்று விவகரிப்பதே சம்சாரபந்த மென்றும், சத்துவாதி குணத்திரயக்கிரமத்தால் சிலேட்டுமப்பிரகிருதி பித்தப்பிரகிருதி வாதப்பிரகிருதியிலுள்ள சாந்த குரோத மூடாதி குணங்களோடுகூடிய உத்தம மத்திம அதம புருஷத்திரயமும், வர்ணக்கிரம முதலானவைக ளுண்டா மென்று சொல்லுவது.

௨. **பாதஞ்சலம்** இயமநியமாதி அஷ்டாங்கயோகத்தால் மனோநிச்சல முண்டாய் மோக்ஷசித்தியா மென்று சொல்லுவது.

௩. **உத்தரமீமாம்ஸை** சகல உபநிஷதர்த்தத்தையும் சொல்லும் வேதாந்தம். அது பிரபஞ்சத்துக்கு மித்தியாத்துவஞ் சாதித்தலால் பிரஹ்மாத்தும ஐக்கியத்தை வர்ணிப்பதாய் ஞானிகளா லங்கீகரிப்பட்டதாகும். அத்யாத்மமதம் பாஸ்கரீயம், மாயாவாதம், சத்தப்பிரஹ்மவாதம், கிரீடாப்பிரஹ்மவாதமென நான்கு பேதமாம். இவற்றின்கண் அநுகதமாய் இவற்றிற்கு மேலாயுள்ளது *அநிர்வசநீயக்கியாதி.

## அதிமார்க்கிகசாஸ்திரம்.

மாயாதத்துவ வித்தியாதத்துவ காலதத்துவ வாசிகளான ருத்திரராற் சொல்லப்பட்ட பாசுபத காபாலிக

---

* **அநிர்வசநீயக்கியாதி** யென்பது ரஜ்ஜுசர்ப்பம் சத்தென்றாவது அசத்தென்றாவது சொல்லத்தகாதது போல அவித்தையும் அதன் காரியமான பிரபஞ்சமும் சத்தென்றாவது அசத்தென்றாவது உறுதியாய்ச் சொல்லத்தகாத தென்றறிந்து சொல்லுதல். இதன்விரிவை விருத்திப்பிரபாகரம் விசாரசாகரம் விசாரசந்திரோதயமுதலியவற்றிற் காண்க.

மாவிரதமென அதிமார்க்கிக சாஸ்திரத்திரய முண்டு. அவற்றுள்,

பாசுபதம் மாயைகர்மமென்னும் பாசமிரண்டையும் சொல்வது.

காபாலிகம் நரகபாலபிக்ஷாடனாதிகளைச் (தலையோட்டில் பிச்சைவாங்குதல் முதலியவற்றைச்) சொல்வது.

மாவிரதம் அஸ்திதாரணாதிகளை (எலும்புதரித்தல்முதலியவற்றை)ச்சொல்வது.

## மந்திரசாஸ்திரம்.

பரமேசுவரனாற் செய்யப்பட்ட மந்திரமே மோக்ஷாங்கமான சரியை கிரியை யோக ஞான முதலியவற்றைத் தருவதா மென்பது.

## நாநாமதஸ்தர்களுடைய ஆத்துமநிருபணம்.

இவ்வாறு சொல்லப்பட்ட மதங்க ளெல்லாவற்றிலும் நிருபிக்கப்படும் ஆத்மசொரூபமாவது :—

சார்வாகர் ஆத்மா தேகமே யென்பர்.

சார்வாக ஏகதேசிகள் ஆத்மா இந்திரியமே யென்பர்.

இரணியகர்ப்பரென்னுஞ் சார்வாக ஏகதேசிகள் ஆத்மா பிராணனே யென்பர்.

ஜைநர் ஆத்மா தேகாதிவிலக்ஷணமாய்த் தேகபரிமிதமாய் (உடல் அளவினதாய்) சங்கோச விகாசதர்மமுடையதா யிருப்ப தென்பர்.

பௌத்தர் ஆத்மா புத்தியே யென்பர்.

கௌளயாமள சாக்தேயகுருக்கள் ஆத்துமா ஆநந்த மே யென்பர்.

பாஞ்சராத்திரிகள் ஆத்மா நாடிமத்தியி லுள்ள தாய் அணுபரிமாணமாகவே யிருக்கு மென்பர்.

இலௌகிகர் ஆத்மா தேக புத்திர களத்திராதி வடிவின தென்பர்.

மீமாம்ஸாபேதரான பாட்டப் பிரபாகரர் ஆத்மா ஸ்வதப்பிரமாணமான (தானே பிரமாணமாவதாகிய)ஞான சொரூப மென்பர்.

நியாயவைசேடிகர் ஆத்மா ககனம்போலப் பரம மகத்பரிமாணமாய்ப், பாஷாணம்போலச் சடரூபமானு லும், மனோசையோகத்தால் ஞானாதி சொற்பதர்மமுடை யதா மென்பர்.

சாங்கிய பாதஞ்சலிகர் ஆத்மா அசங்க சின்மாத்திர மென்பர்.

வேதாந்திகள் ஆத்மா ஸைப்திசத்தாமாத்திர அத் விதீய மென்பர்.

பாசுபத காபாலிக மாவிரதிகள் ஆத்மா நித்திய வியாபக சைதந்நிய மென்பர்.

மாந்திரசமிஞ்ஞக (மாந்திரிகரென்னும் பெயருடைய) சித்தாந்திகள் ஆத்துமா நித்திய வியாபக ஞானக்கிரியா சொரூப மென்பர்.

## நாநாமதஸ்தர்களுடைய

## மோக்ஷலக்ஷணம்.

இனி இவ்வெல்லாச் சமயவாதிகளாலும் பிரதிபாதிக்கப்படும் மோக்ஷலக்ஷணமாவது :—

**சார்வாகர்** மரணமே மோக்ஷ மென்பர்.

**ஜைநர்** ஆகாசமத்தியில் உத்தரோத்தரகமனமே (மேன்மேற்செல்லுதலே) மோக்ஷ மென்பர்.

**பௌத்தர்** சுகதுக்காதிகளால் மயக்கப்படாம லிருக்கும் சுத்தபுத்திசந்ததியே மோக்ஷ மென்பர்.

**கௌளயாமளர்** ஆகாசகமனாதி சித்திப்பிராப்தியே மோக்ஷ மென்பர்.

**சாக்தேயர்** ஆநந்தப்பிராப்தியே மோக்ஷ மென்பர்.

**பாஞ்சராத்திரிகள்** வாசுதேவாத்மகப் பிரகிருதியில் சொரூபக்கேடின்றி அடங்குவதே மோக்ஷ மென்பர்.

**இலௌகிகர்** இகலோகத்தில் புத்திரதாராதிகளுடன் கூடி வியாதியாதி துக்கமில்லாமல் சுகத்திலிருப்பதே மோக்ஷ மென்பர்.

**பூர்வமீமாம்ஸகர்** சுவர்க்காதி லோகப்பிராப்தியே மோக்ஷ மென்பர்.

**நியாய வைசேடிகர்** ஆத்மா சரீரேந்திரியாதி இருபத்தொரு துக்கத்தின் அத்தியந்த நாசத்தால் பாஷாணம் போலிருப்பதே மோக்ஷ மென்பர்.

**சாங்கியர்** பிரகிருதி புருஷவிவேகத்தால் அவித்தை நாசமாவதே மோக்ஷ மென்பர்.

**பாதஞ்சலிகர்** *யோகாப்பியாச பலத்தால் மனோலய வாயிலாக அஞ்ஞான மழிவதே மோக்ஷ மென்பர்.*

**வேதாந்திகள்** *பிரஹ்மாத்துமவைக்கிய ஞானத்தால் விவகாராதி சம்சாரபந்தநிவிருத்தியே மோக்ஷ மென்பர்.*

**பாசுபதர்** *பிரவாகேசுவரத்துவத்தால் ஈச்சுரத்துவம் அந்நியருக்குக் கொடுத்து ஆத்மா ஞெப்திமாத்திரமா யிருப்பதே மோக்ஷ மென்பர்.*

**காபாலிக மாவிரதிகள்** *கர்த்திருத்வமான சம்சாரபா வத்தை விட்டு ஞெப்திமாத்திரமா யிருப்பதே மோக்ஷ மென்பர்.*

**மாந்திரசமிஞ்ஞக சித்தாந்திகள்** *ஆத்மா * சடத்து வாதீத (ஆறத்துவாக்களுக்கப்பாற்பட்ட) சிவசமானத் துவமாவதே மோக்ஷ மென்பர்.*

*இவ்வாதிகளில் சார்வாகர், ஜைநர், பௌத்தர், மீமாம்ஸகர், சாங்கியராகிய இவர்கள் நிரீச்சுரவாதிகள்; மற்றையர் சேசுரவாதிகள். இம்மகாவாதிகளில் சார்வா காதிக ளனைவரும் பேதவாதிகள்; வேதாந்தி யொருவனே அபேதவாதி.*

## பதினான்குவித்தை.

*இப்படிச் சொல்லப்பட்ட சாஸ்திரங்களுள் வேதம்-ச, வேதாங்கம்-சு, நியாயமீமாம்ஸைகள்-உ, ஸ்மிருதிபுரா ணங்கள்-உ,* **ஆக இவை சதுர்த்தச (பதினாறு) வித்தை** *யெனப்படும்.*

---

** மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என அத்துவா (வழி) ஆறும். இதனை சிவஞானசித்தி யார் எட்டாம் சூத்திரத்தில் விரிவாய்க் காணலாம்.*

## மீமாம்ஸாசாஸ்திர விவரம்.

இச்சதுர்த்தசவித்தையுள், மீமாம்ஸையானது மிகவும் விசேஷமாய் இருபது அத்தியாயமாய் அர்த்தத்தைச் சொல்லுந்தன்மையால் இரண்டு பாகமாம். அவற்றுள், முதற்பாகம் ஜைமினிசூத்திரரூபமாய், பன்னிரண்டு அத்தியாயமாய், கர்மகர்த்திருப் பிரதிபாதகமாய், லோக வேதாதிகரண மென்றல் முதலிய ஆயிரம் ந்யாயங்களால் **பூர்வமீமாம்ஸை** யென்னப்படும். அந்த ஜைமினிசூத்திரத்துக்குச் சபரரால் சாபரமென்னும் பாஷியஞ்செய்யப்பட்டது. அதற்கே பட்டாசாரியரால் வார்த்திகரூபத்தில் பாட்டமென் றொருமதாந்தரஞ் செய்யப்பட்டது. அந்தப்பட்டருடைய சிஷ்யரான பிரபாகரரால் அந்தச் சாபர பாஷியத்துக்கே பிரபாகரமென் றொருமதாந்தரஞ் செய்யப்பட்டது.

இரண்டாம்பாகம் வியாசசூத்திரரூபமாய் எட்டத்தியாயமாய்ப் பிரஹ்மாத்மைக்கப் பிரதிபாதகத்தால் **உத்தர மீமாம்ஸை** யெனப்படும். அதனுள், பூர்வம் நான்கத்தியாயமும் **தேவதாகாண்டமாம்.** அதில் மந்திரவாதத்தைப்போல் தேவதாலக்ஷணங்கள் பலபத்திரராமரால் பிரதிபாதிக்கப்பட்டுள்ளன.

## வேதாந்தசாஸ்திரம்.

உத்தரமான நான்கத்தியாயமும் **பிரஹ்மகாண்டமாம்.** அது பிரஹ்மாத்துமவைக்கியப் பிரதிபாதகமாய்ச் சங்கராசாரியரால் பாஷியஞ் செய்யப்பட்டுள்ளது. அந்தப் பாஷியத்துக்குப் பஞ்சபாதிகையென்னும் உரை செய்யப்பட்டு அதற்கே விவரணாசாரியரால் விவரணஞ் செய்யப்பட்டது. அன்றியும் அச்சங்கரபாஷியத்திற்கே வார்த்திகம் ராமாநந்தீயம் பிரஹ்மவித்தியாபரண முத

லிய அநேக வியாக்கியானங்களும் வாசஸ்பதிமிசிரரால் பாமதிநிபந்தனமென்னும் ஓர் உரையும், அவ்வுரைக்குக் கல்பதருவென்னும் வியாக்கியானமும், அதற்குப் பரிமள மென்னும் உரையு முளது. இவ்வாறு விரிந்த சித்தாந்த மாகிய நூல்களே வேதாந்தசாஸ்திரமாம்.

பிரகரணோற்பத்திமுற்றிற்று.

---

## வேதாந்தவிஷயம்.

### சூத்திரலக்ஷணம்.

சொற்ப எழுத்துக்களையுடையதாய்ச் சந்தேகமின்றிய சாரமுடையதாய் எல்லாவிடத்தும் பிரவிருத்திக்கப்படுவ தாய் எதனாலும் தடுக்கக்கூடாத தோஷமின்றிய வாக்கியம் சூத்திர மெனப்படும். இத்தன்மைய சூத்திரங்களின் சமுதா யவடிவமாய்ச் சகலவுபநிடதங்களின் அர்த்தங்களையும் நிர் ணயிப்பது ஸ்ரீ வியாஸாசாரியராற் செய்யப்பட்ட பிரஹ்ம சூத்திரம்.

### பாஷியலக்ஷணம்.

அச்சூத்திராதிவடிவ முதல்நூலிலுள்ள பதங்களைக் கொண்டு அதன் தாற்பரியவடிவத் தன்பதங்களைக் கூறிப் பின் முதனூலிலுள்ள பதங்களையநுசரித்த பதங்களால் தன்பதங்களை விவரித்தல் பாஷிய மெனப்படும். அத்தன் மையபாஷியம் அநேகமிருக்கினும், இங்கு ஸ்ரீ சங்கராசா ரியஸ்வாமிகளால் செய்யப்பட்ட பாஷியமே அங்கீகாரம்.

### அதிகரணலக்ஷணம்.

அந்தப்பாஷியத்திலுள்ள விஷயம், சம்சயம், பூர்வப க்ஷம், சித்தாந்தம், சங்கதியென்னும் ஐந்தவயவங்களோடு

கூடிய நியாயமே **அதிகரணமாம்.** இதனை மேற்காட்டிய பிரஹ்மசூத்திரங்களுக்கு ஸ்ரீ வித்தியாரணியஸ்வாமிகளி யற்றிய "வையாசிகநியாயாதிகரணமாலை" யிற்காண்க.

## மங்களாசரணத்திரயம்.

ஆசீர்வாதம் (வாழ்த்து) நமஸ்காரம் (வணக்கம்) வஸ்துநிர்த்தேசமெ(பொருளியல்புரைத்தலெ)னு மிவை சாஸ்திராரம்பத்திற் செய்யப்படும் **மங்களாசரணத்திரயமாம்.**

## வியாக்கியானபஞ்சலக்ஷணம்.

மூலகிரந்தந்திலுள்ள பதம், பதார்த்தம், வாக்கியயோசனை, வினா, விடையெனு மிவை **வியாக்கியானபஞ்சலக்ஷணமாம்.**

## அந்வயபஞ்சலக்ஷணம்.

அவ்வியாக்கியானங்களிலுள்ள விசேஷணம், விசேஷியம், கர்த்தா, கர்மம், கிரியை யெனுமிவற்றின் சம்பந்தமே **அந்வயபஞ்சலக்ஷணமாம்.**

## அநுபந்தசதுஷ்டயம்.

விஷயம், சம்பந்தம், பிரயோசனம், அதிகாரமெனு மிவை **அநுபந்தசதுஷ்டயமாம்.** அவற்றுள்,

க. ஜீவப்பிரஹ்ம வைக்கியமே நூலின் **விஷயம்.**

உ. பிரஹ்மத்திற்கும் நூலிற்குமுள்ள பிரதிபாத்தியப் பிரதிபாதக பாவமே (சொல்லப்படல் சொல்வதெனுந் தன்மையே) **சம்பந்தம்.**

ந. சகல துக்கநிவிருத்தியின் வேறாகாத சுவசொரூபத்தில் நிலைத்தலாகிய நித்தியாநந்தவடிவ மோக்ஷமே **பிரயோஜனம்.**

௪. சாதனசதுஷ்டய சம்பன்னனே அதிகாரி. வேதாந்த சிரவண மனன நிதித்தியாசனங்களுக்குத் தர்மஜிஞ்ஞாஸாபூர்வகமாய்க் கர்மகாண்ட சித்தனான சற்சுரோத்திரியனே அதிகாரியென்று சொல்லப்படுவதோடு பிரஹ்மஞான சாத்தியமான மோக்ஷம் சாதிமுதலிய நிர்ப்பந்தங்களில்லாமல் பரிபக்குவாந்தக்கரண மொன்றினாலேயே அடையப்படுவதாயிருத்தலால் சாதனசதுஷ்டயசம்பன்னனே பிரஹ்மவித்தைக்கு **அதிகாரி** யென்பது சித்தாந்தம்.

## சாதனசதுஷ்டயம்.

நித்தியாநித்தியவஸ்துவிவேகம், இகாமுத்திரார்த்த பலபோக விராகம், சமாதிஷட்கசம்பத்தி, முமுக்ஷுத்துவமெனும் நான்கும் **சாதனசதுஷ்டயமாம்.** அவற்றுள்,

க. சச்சிதானந்தரூபமான ஆத்மாவே நித்தியம், மற்ற அநிருத (அசத்து) ஜடதுக்கவடிவ துவைதப்பிரபஞ்சமெல்லாம் மித்தையென்று விசாரித்துத திடமாய்த் தெளிவதே **நித்தியாநித்தியவஸ்துவிவேகம்.**

உ. இகபரங்களிலுள்ள மாலைசந்தனவனிதாதி விஷயங்களெல்லாம் கர்மஜந்நியமாகையால அநித்தியமும், ஈட்டுங்காலத்துக் கஷ்டசாத்தியமும், அநுபவாந்தத்தில் விரஸத்தன்மைக்குக் காரணமுமாய் அநுபவிப்பவனை யடுத்து ஞானப்பிரதிபந்தகமா யிருப்பதனால் நித்தியாநந்தபதப் பிரதிபந்தகமான இச்சம்சாரம் துக்கரூபமுமா மென்று தெரிந்து, அவற்றை நாய்வாந்திசெய்த அன்ன மூத்திர புரீஷங்களைப்போல மனதிற் பற்றாமையே **இகாமுத்திரார்த்த பலபோகவிராகம்.**

ங. சமாதிசட்குணசித்தியே (ஆறு குணங்களைப் பெறுதலே) **சமாதிசட்கசம்பத்தி.**

சமாதி ஆறு குணங்களாவன :—சமம், தமம், திதிக்ஷை, உபரதி, சிரத்தை, சமாதான மென்பனவாம். அவற்றுள்,

(க) அந்தக்கரண நிக்கிரகமே (உட்கரணமடக்கலே) சமம்.

(உ) பாகியகரண (இந்திரிய) நிக்கிரகமே(புறக்கரண மடக்கலே) தமம்.

(ங) பிராரப்தத்தாற் கிடைத்த தாபத்திரயத்தைச் சகித்தலே திதிக்ஷை.

(ச) சகலகர்மபரித்தியாகமே உபரதி.

(ரு) சுருதியிலும், குருவாக்கியத்திலும் வைக்கும * மிகத்திடமான விசுவாசமே சிரத்தை.

(சா) குருவுபதேசத்தைச் சித்தத்தில் நிடமாகக் கொள்வதே சமாதானம்.

ச. சகஜசாயுச்சிய மோக்ஷாபேட்சையே முமுக்ஷுத் துவம்.

## சதுர்விதகுருசேவை

அச்சாதனசதுஷ்டயசம்பன்னனான அதிகாரி செய்

---

* பரமேசுவரனிடத்தில் ஆராத்தியத்துவமும் தன்னிடத்தில் ஆராதகத்துவமும், குருவினிடத்துச் சேவியத்துவமும் தன்னிடத்துச்சேவகத்துவமும், வேதாந்தசாஸ்திரத்தில் சாசனத்துவமும் தன்னிடத்தில் சாசியத்துவமு முள தென்று மிக நம்பியிருப்பதே பக்தி யெனப்படும். இந்தப் பக்தி திடமாயிருந்தாற்றான் அவர்கள்வாக்கியத்தில் மிகத்திடமான விசுவாச முண்டாகும். (ஆராத்தியத்துவம் = ஆராதிக்கப்படுந்தன்மை. ஆராதகத்துவம் = ஆராதிக்குந் தன்மை. சேவியத்துவம் = சேவிக்கப்படுந்தன்மை. சேவகத்துவம் = சேவிக்குந்தன்மை. சாசனத்துவம் = ஏவுந்தன்மை. சாசியத்துவம் = ஏவப்படுந்தன்மை.)

யுஞ் சற்குருசேவையாவது ஆப்தம், அங்கம், ஸ்தானம், சத்பாவ மென்பனவாம். அவற்றுள்,

க. குருவுக்கு அநுகூலவிருத்தியே **ஆப்தம்.**

உ. குருபாதபிரக்ஷாளனுதியே **அங்கம்.** (பிரக்ஷாளனம்-கழுவுதல்.)

௩. குருவின் கிரகக்ஷேத்திராதிரக்ஷணையே ஸ்தானம்.

௪. ஸ்ரீகுருவை ஸாக்ஷாத் பரமசிவனெனக் கருதும் விசுவாசமே சத்பாவம்.

## அதிகாரத்திரயம்.

கர்மகாண்டி, பக்திகாண்டி, ஞானகாண்டியென வேறு மூன்றதிகாரிக ளுளர். அவர்களுள்,

க. தேகக்கிரகக்கிருத்யாதிகளில் கிரமமாக நானெனதென்னும் அகந்தைமமதைக ளுள்ளவனே **கர்மகாண்டி.**

உ. சகலக் கிரியைகளையும் ஈச்சுரரார்ப்பணஞ் செய்பவனே **பக்திகாண்டி.**

௩. சகல கர்மத்துக்குந் தான் சாட்சி யென்பவனே **ஞானகாண்டி.**

## அதிகாரபஞ்சகம்.

கர்மி, முமுக்ஷு, அப்பியாசி, அநுபவி, ஆரூடனென வேறு ஐந்ததிகாரிக ளுளர். அவர்களுள்,

க. மூடத்தனத்தால் தன்ஜாதிகர்மமாத்திரம் பிடித்து நூறு சன்மத்தில் முத்தனுகிறவனே **கர்மி.**

உ. ஜகம் அசத்தென்று தெளிந்து ஆத்மகர்மநிஷ்டனாய் மூன்று ஜன்மத்தில் முத்தனுகிறவனே **முமுக்ஷு.**

௩. சொப்பனம்போலப் பிரபஞ்சம் மித்தையென்று அறிந்து அப்பியந்தரத்தில் (உள்ளே) தியானுதி கர்

மயுக்தனய் இரண்டுஜென்மத்தில் முத்தனுகிறவனே **அப்பியாசி.**

விவகாராபேட்சையை விட்டு விவேகதற்பரனய் ஏகஜன்மத்தில் முத்தனுகிறவனே **அநுபவி.**

௩. விசுவவிகிருதி (உலகவிலே) தோன்றுமல் ஆத்மஞானத்தால் சத்தியோமுத்தி யடைபவனே **ஆரூடன்.**

இவ்வைவரும் முறையே ஒருவரினெருவர் ஏற்றமுடையராவர். மற்றும்,

(க) ஜகமென்னும் தாமரைக்கொடிக்கு மூலம் யாதோ வென்னும் விசாரமுகத்தால் ஸ்ரீகுருவை யடைந்து பிரஹ்மஞானியாய் மோக்ஷம்பெறு மவனெருவன்.

(உ) தேகாதிகள் அநித்தியமென் றறிந்து போகாபேட்சை தோன்றுமல் ஸ்ரீகுருவை யடைந்து பிரஹ்மஞானியாய் முத்திபெறு மவனெருவன்.

(௩) ஓர்குருவானவர் தம் சிஷ்யனுக்கு உபதேசஞ்செய்வதைக் கேட்டு அகஸ்மாத்தாக ஆத்மஞானியாய் நிருவாணபதம்பெறு மவனெருவன்.

இப்படி விவேக விரக்தி தெய்வகதிகளால் ஞானம் பெற்று முத்தராவோர் மூவருளர்.

## குருலக்ஷணம்.

விதிப்படி அத்தியயனஞ்செய்து. வேதாந்தநிஷ்டனுகிச் சரணுகதியடைந்த சிஷ்யனுக்கு மறுபடியும் சம்சயம் வாராதபடி தத்துவோபதேசஞ்செய்து அஞ்ஞானத்தைப் பரிகரிப்பவனே **குரு** வென்று தெரிந்துகொள்ளப்படுவன்.

## அஷ்டகுரு.

குரவர் சாதகரான சிஷ்யருக்கு உபதேசஞ்செய்யும் அதிகாரபேதத்தால் போதககுரு, வேதககுரு, நிஷித்த

குரு, காமியகுரு, சூசககுரு, வாசககுரு, காரணகுரு, விகிதகுரு வென எண்வகையாவர். அவர்களுள்,

(க) சாஸ்திரார்த்தம் போதிப்பவனே **போதககுரு**.

(உ) தத்துவதரிசகனே **வேதககுரு**.

(ங) வசியாகருஷ்ணாதிகளால் இகலோகத்திற் சுகமும், பரலோகத்திற் றுக்கமுங் கொடுக்கிறவனே **நிஷித்தகுரு**.

(ச) புண்ணியகர்மோபதேசத்தால் இகபரங்களில் சுகமெய்தப் பண்ணுமவனே **காமியகுரு**.

(ரு) விவேகமுகத்தால் சமதமாதி ஷட்குணப்பிரதாயகனே **சூசககுரு**.

(சு) விஷயமித்தியாதரிசனத்தால் ஆத்மாநுராகப் பிரதாயகனே (ஆத்மாவினிடத்துப் பிரியத்தையுண்டு பண்ணுவபனே) **வாசககுரு**.

(எ) ஆத்மப்பிரஹ்ம ஐக்கியஞானப் பிரதாயகனே **காரணகுரு**.

(அ) சம்சயத்தைப் போக்கும்வாயிலாக நித்தியமுத்திப்பிரதாயகனே **விகிதகுரு**. (பிரதாயகன்-தருவோன்.)

## சிஷ்யன்விதிவதுபசந்நத்துவம்.

முன் அதிகாரிக ளென்னப்பட்ட பேடருள் ளொருவன் தாபத்திரயாக்கினியால் வெதும்பி வியாகூலசித்தனாய் நான் யார்? எனக்கு இச்சமுசாரம் எப்படி வந்தது? இது எவரால் நிவர்த்தியாகு மென்று விசாரித்து,சகல பிரபுத்துவமும் விட்டுப்,பத்திரம், புஷ்பம்,பழமுதலியவற்றை யேந்தியகரத்தனாய் வித்தை (கல்வியறிவு) விநயம் (அடக்கம்) வைராக்கியமுதலிய நற்குணங்களுடன் ஷட்குண ஐசுவரிய சம்பன்ன சுரோத்திரியப்பிரஹ்மநிஷ்டரான குருவை யடைந்து,

" चैतन्यं शाश्वतं शान्तं व्योमातीतं निरञ्जनं ।
नादबिन्दुकलातीतं तस्मै श्रीगुरवे नमः ॥

சைதன்னியமும், சாசுவதமும், சாந்தமும் ஆகாயத்திற் கப்பாற்பட்டதும், நிரஞ்சனமும், நாதபிந்துக்களுக் கப்பாற்பட்டதுமாகிய அந்த ஸ்ரீகுருவிற்கு நமஸ்காரம் "

என்னும் அஷ்டமந்திரபூர்வகமாய் இருபதம், இருகை, இருதோள், மார்பு, நெற்றி என்னும் அஷ்டாங்கமுமிலத்திற்படப்பணிந்து, பின்னெழுந்து, பயபத்தியினாலே அடிமைத்தன்மை மிகுந்து, கரகமலங் கூப்பித் தனது கீழ்மையுங்காட்டி, குருமகிமையுங் கொண்டாடி, ஞானம், வைராக்கியம், பலம், ஐசுவரியம், கீர்த்தி, ஸ்ரீயென்னும் சட்குணசாமக்கிரியால் பகவானாகிய சற்குருவே! எவவாறு எனக் கிந்தப் பவபந்தம் விடுபடு மென்று விண்ணப்பஞ் செய்வதே சிஷ்யனது விதிவதுபசந்நத்துவமாம். (விதிப்படி சரணமடையுந்தன்மையாம்.)

## ஸ்ரீகுருவினுபதேசம்.

இப்படி உபசந்நனான சிஷ்யனுடைய அதிகாரத்தைப் பரீக்ஷித்துக் கிருபாநோக்கத்தாற் பார்த்து அஞ்சேலென்று அபயகரஞ் சிரசில் வைத்து, சுருதியுத்தியநுபவங்களால் அவன் தேகாதி அநாத்துமபுத்தியை நேதித்து, நீயே பரப்பிரஹ்மமென்று உள்ளபடி யறிவிப்பதே ஸ்ரீகுருவினுபதேசமாம்.

## உபதேசக்கிரமம்.

அவ்வுபதேசக்கிரமத்தில் உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷை யென்னும் மூன்றும் உபதேசக்கிரமமாம் (போதப்பிரகாரமாம்). அவற்றுள்,

க. தானறுசரித்திருக்கிற இஷ்டமான வஸ்துவினுடைய நாமமாத்திரங் கீர்த்திக்கிறதே உத்தேசம்.

உ. ஆடுதோலுள்ளது ஆவென்பதுபோல அந்தவஸ்துவின் அசாதாரணநாமஞ்சொல்லுவதே (சிறந்த குறியுரைப்பதே) இலக்ஷணம்.

ரு. இலக்கியவஸ்துவிற்கு அவ்விலக்கண முண்டோ வில்லையோ வென்று விசாரித்துப்பார்ப்பதே பரீக்ஷை.

## பிரமாணலக்ஷணம்.

ஓர் வஸ்துசித்திக்குப் பிரமாணம் வேண்டும்.

பிரமேயங்களின் யதார்த்தஞானத்திற்குக் காரணங்களான ஈசுவர அதிருஷ்ட கால கர்த்திரு காரணாதிகளோடு ஞானோற்பத்திவியாபாராசிரயமான அசாதாரணஹேதுவே பிரமாண மெனப்படும்.

அது பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உபமானம், அநுபலப்தி, சம்பவம், ஐதீக மென்று எட்டுவகைப்படும்.

அவற்றுள்,

க. கடமுதலியவற்றைக் காண்டலாகிய சாக்ஷாத்காரத்திற்கு முக்கியகாரணங்களான நேத்திரமுதலியனவே பிரத்தியக்ஷப்பிரமாணம்.

உ. அக்கினியுடைமைஞானத்தைச் சம்பாதிப்பதான தூமமுடைமைஞானமே அநுமானப்பிரமாணம்.

அது பிரதிஞ்ஞை, ஏது, திருஷ்டாந்த மென்று மூன்று அவயவமுடையதாம். பிறருக் கறிவித்தற்பொருட்டான அம்மூனறனுள், பர்வதம் அக்கினியுடைய தென்பது பிரதிஞ்ஞை. புகையுடைமையால் என்பது ஏது. மடைப்பள்ளிபோலென்பது சபக்ஷதிருஷ்டாந்தம்.

மற்றும் இதற்கு * நிகமனமுதலியனவும், சவ்வியபிசாரம், விருத்தம், சற்பிரதிபக்ஷம், அஸித்தி, பாதிதம் என்னும் ஹேத்வாபாசதோஷங்க ளில்லாதிருத்தலும், அநுகூலதர்க்கவியாப்தியாதிக ளிருத்தலும் பிராமாணியத்திற்குப் பரம்பரைச்சாதகங்களா யிருப்பனவாம், (பிராமாணியம் = பிரமாணமாந்தன்மை).

௩. யதார்த்தத்தினைக் கூறும் பரமேசுவரன் ஜகத்தின் ஜீவகோடிகளுக்கு ஆப்தனுயிருப்பதால் வேதங்களும், அதனை மூலமாகவுடைய ஸ்மிருதிபுராணேதிகாசங்களும், உலகத்தில் கண்டதைக் கூறும் சற்புருஷர் தத்தம் ஆப்தர்களுக்குக் கூறுவனவும், ஆற்றங்கரையில் இரண்டு பழங்களுளவெனப் பரோக்ஷ அர்த்தங்களை யறிவிப்பனவுமாகிய சத்தங்கள் **ஆகமப்பிரமாண** மெனப்படும்.

இதற்குப் பதம், பதார்த்தம், அந்வயம், ஆகாங்க்ஷை, யோக்கியதை, சாகசரியம், தாற்பரியஞானமுதலியன சககாரிகாரணங்களா யிருக்கும்.

௪. (க) பகலுண்ணுத தேவதத்தனது தேகபீனத்துவம் (உடற்பருமை) கண்டு காணப்படும் பருமைக்குக் காரணமான இராத்திரிபோஜனத்தைக் கற்பிப்பதே **திருஷ்டார்த்தாபத்தி** (காட்சியருத்தாபத்தி) யாகும்.

(உ) தேவதத்தன் கிரகத்திலில்லை யென்பதைக் கேட்டு, கேட்ட அவ்வசனத்திற்கு வேறிடத்திலிருப்பனென்று நிச்சயிப்பதே **சுருதார்த்தாபத்தி** (கேள்வியருத்தாபத்தி).

௫. ஆவை யொக்கும் ஆமா வென்னும் வாக்கியத்தைச் சிரவணத்திற் கேட்டவன், வனமெய்திக் கண்டகா

---

* நிகமனுதிகளின் லக்ஷணங்களையும், எதுப்போலிமுதலியவற்றி னிலக்கங்களையும் தர்க்ககௌமுதி, தர்க்கசங்கிரகவுரை ஸ்ரீவிசாரசந்திரோதயமுதலியவற்றிற் காண்க.

லத் துண்டாகும் ஆவொப்புமையோடு கூடியபிண்டஞா னமே **உபமானம்.**

ரு. ஈண்டுக் கடமில்லை யென்னும் நிச்சயத்தையுண்டு பண்ணும் கடத்தோற்றமின்மையே **அநுபலப்தி.**

சா. ஆயிரமென்னும் எண்ணில் நூறென்னும் எண் ணுண்டென்னும் உணர்வே **சம்பவம்.**

அ. இவ்வாலவிருக்ஷத்தில் இயக்கனுள னென்னும் உலகவார்த்தையால் வரும் இயக்கவிடயஞானமே **ஐதீகம்.**

இந்தப்பிரத்தியக்ஷாதிப் பிரமாணங்களுள் துருவாதி விடயதேசங்களில் பரவி அவ்வவ்வாகாரமாகப் பரிண மித்த அந்தக்கரணவிருத்தியாதி வைசித்திரியங்களும் அவ் வவ்வதிஷ்டான வுபாதியாதிகளும் சம்பிரதாயமான அத் தியயன மனனாதிகளாலும், அநுபவங்களாலும் அறியத்தக் கனவா யிருக்கும்.

## இதிற் சமயிகள்கொண்ட கோட்பாடு.

இப்பிரமாணங்களில் சார்வாகனுக்குப் பிரத்தியக்ஷம் ஒன்றும், பௌத்தவைசேடிகருக்கு அநுமானத்தோடு இரண்டும், சாங்கியருக்கு ஆகமத்தோடு மூன்றும், ஜைந ருக்கும், நியாய ஏகதேசிகளுக்கும் உபமானத்தோடு நான் கும், பிரபாகரர்க்கு அர்த்தாபத்தியோடு ஐந்தும், பாட்ட வேதாந்திகளுக்கு அநுபலப்தியோடு ஆறும், பௌராணிக ருக்குச் சம்பவ ஐதீகங்களோடு எட்டும் பிரமாணமாம்.

## பதார்த்தவிவேகம்.

பாரமார்த்திகம், வியாவகாரிகம், பிராதிபாஸிகம், துச்ச மென்று பதார்த்தம் நால்வகையாம். அவற்றுள்,

க. சுத்தசிவசைதன்னியம் ஒன்றே **பாரமார்த்திகம்.**

உ. ஆகாயாதிப்பிரபஞ்சங்க ளெல்லாம் **வியாவகா ரிகம்.**

௩. பழுதையிற்பாம்பு இப்பிவெள்ளி கானற்சல முதலியனவே பிராதிபாஸிகம்.

௪. மலடிமகன் முயற்கொம்புமுதலியனவே அசத்தெனப்படும் துச்சம்.

## பதார்த்தத்துவயம்.

மற்றும் அப்பதார்த்தங்களெல்லாம் சிவசக்திக ளென்றும், பிரஹ்மமாயைக ளென்றும், சத்தியமித்தைக ளென்றும், நித்தியாநித்தியங்க ளென்றும் இருவகையாகப் பிரித்துச் சொல்லப்படும்.

## திருக்குத்திருசிய விவேகம்.

திருக்கென்பது யுக்தியுள்ள திருஷ்டாந்தத்தாற் பொருந்திய விசாரத்தினால் பிரமாணமுடையதாய் உண்மைப்பொருளை விசாரித்துத் தெளிவதே. இதனோடு திருசியமாகிய பிரபஞ்சத்துள்ள சுவகதபேதம் ஸஜாதீயபேதம் விஜாதீயபேத மெனனும் மூவகைப்பேதங்களில்லாததாம.

அதற்குதாரணம் வருமாறு:—

௧. உலகத்தில் ஒரு விருக்ஷத்திற்குப் பத்திரபுஷ்பாதிகள் வேறாயிருப்பது சுவகதபேத மெனப்படும்.

௨. தன்னைப்போன்ற ஒரு விருக்ஷம் வேறாயிருப்பது ஸஜாதீயபேத மெனப்படும்.

௩ தன்னினும் விலக்ஷணமான பாஷாணாதிகள் வேறுபட்டிருப்பதுவே விஜாதீயபேத மெனப்படும்.

## பேதநிராகரணம்

பேதமுழுவதும் கற்பிக்கப்பட்டதா யிருத்தலின் சொன்ன பேதத்திரயம் அத்வைதப்பிரஹ்மமாகிய சுத்த சைதன்னியததின்கண் எவ்வளவு மில்லை யென்று திருக்

கில் நிராகரித்த லொக்கும். சத்துரூபப் பிரஹ்மம் ஆகாயம் போல் நிரவயவமாதலின் சத்திற்கு வேருக ஒரு சத்தேயில்லாததாகியும் மற்றைய அசத்வஸ்து அகண்டமாயும் ஒப்பில்லாததாயும் அத்விதீயமா (இரண்டாவதில்லாததா) கியும் சுருதி குருவாக்கிய சத்யுக்தி யநுபவங்களின் சித்தாந்தமாவதாய்ப் பிரஹ்மத்தின்கண் பேத முற்றுமில்லாததாகும். ஜகத்காரணமான மாயை யுளதாய் விஜாதீயபேத மொப்ப வேண்டியதா மெனின் உலகத்தில் சித்திரிகனிடத்துள்ள சித்திரசக்தி வேருகத் தோற்றுததுபோலச் சன்மாத்திரப்பிரஹ்மத்தில் பிரஹ்மத்திற்கு வேருகாத சத்தையுடையதான மாயையின் விலக்ஷணத்துவமே யில்லாமையால் பிரஹ்மத்திற்கு விஜாதிய பேத மில்லை யென்று சித்தமாகும்.

இந்த அர்த்தத்தில் பிரமாணமான "ஏகமேவாத்துவிதீய" மென்னும் மிகப்பிரபலமான சித்தாந்த சுருதிவாக்கியத்துள்ள ஏகம், ஏவ, அத்விதீயம் என்னும் பதம் மூன்றற்கும் ஜீவப்பிரஹ்ம ஐக்கியம், அவதாரணை (நிச்சயம்), துவைதநிஷேதமென மூன்று பொருளாதலால் அம்முறையே பிரஹ்மத்தின்கண் சுவகதபேதம் சஜாதீயபேதம், விஜாதீயபேத மென்னும் மூன்று பேதங்களு மில்லை யென்பதே பிரமாணம்.

## கற்பிதத்துவயம்.

அத்தியாரோபம் அபவாதமெனக் கற்பிதத்துவய முண்டு. அவற்றுள்,

க. இருப்பதான இரச்சு, சுத்தி, ஸ்தாணுவாதியில் முறையே இல்லாத சர்ப்பம், இரசிதம், சோரன் முதலியவை கற்பித மாதல்போலச் சத்ரூபப்பிரஹ்மத்தில் இல்லாத மாயாப்பிரபஞ்சம் கற்பிதமாதலே **அத்தியாரோபமாம்.**

உ. இது சர்ப்ப மல்ல, இரச்சுவே; இது இரசித மல்ல, சுத்தியே; இது சோரனல்ல, ஸ்தாணுவே யென்பதுபோல விசாரமுகத்தால் இப்பிரபஞ்சமெல்லாம் மித்தை, பிரஹ்மமே சத்திய மென்பதே அபவாதமாம்.

## பிரஹ்மலக்ஷண விவேகம்.

அதத்வியாவிருத்திலக்ஷணம், தடஸ்தலக்ஷணம், சொரூபலக்ஷணமெனத் திருக்குரூபவஸ்துவின் சாக்ஷாத்காரத்துக்கு உபாயத்திரய முண்டு. அவற்றுள்,

க. தேகாதி அநாத்மவர்க்கங்களை யுத்தியால் பேதித்து நின்ற ஆத்மாவை அறிவிப்பதே அதத்வியாவிருத்திலக்ஷணமாம்.

உ. விருக்ஷத்தின் நுனியில் சந்திர னிருப்பதாகக் காட்டுவதுபோலப் பூதாதி ஜகத்காரணமாயிருக்கும் ஆத்மாவை அறிவிப்பதே தடஸ்தலக்ஷணமாம்.

ங. மிகுந்த உஷ்ணப் பிரகாசரூபமே சூரிய னென்பதுபோல ஆத்துமாவின் சச்சிதாநந்தாதி சொரூப மறிவிப்பதே சொரூபலக்ஷணமாம்.

## ஆத்மசொரூபலக்ஷணபஞ்சகம்.

சத்து, சித்து, ஆநந்தம், நித்தியம், பரிபூரண மென ஆத்மாவின் சொரூபலக்ஷணபஞ்சகமுண்டு. அவற்றுள்,

க. அறிவேன் அறியேன் அறிந்தே னென்பதிலும், காமாதி விருத்திகள் தோன்றுமிடத்திலும், தோன்றாவிடத்திலும், ஜாக்கிராதி அவஸ்தைகயிலும் தனக்கொருவாதையுமில்லாம லிருப்பதே சத்துரூபமாம்.

உ. சர்வாவஸ்தைகளிலும் விஷயங்களை இடைவிடாதறிவதே சித்துரூபமாம்.

ங. பரமப்பிரீதிக்கு விஷயமாவதே ஆநந்தரூபமாம்.

ச. சதோதிதமாவதே (என்றும் நிலேத்துள்ளதே) நித்தியரூபமாம்.

ரு. சர்வார்த்த சாதகமானையால் சர்வசம்பந்தத்துவமே பூரணரூபமாம்.

சச்சிதாநந்தமே ஆத்மசொரூபமானுல், சத்துஞ் சித்தும்போலச் சர்வபுத்திவிருத்தியிலும் ஆநந்தரூபத்துக்கு அபிவியக்தி (வெளிப்படுதல்) உண்டாகவேண்டும்; அங்கு இல்லாமையால் ஆநந்தம் ஆத்மசொரூப மல்லவெனின், அதற்குத் திருஷ்டாந்தம் வருமாறு:—உஷ்ணப்பிரகாசமான தீபத்தின் பிரகாசமே கிரகத்தில் வியாபித்திருக்கும்; அதன் உஷ்ணம் வியாப்தமாகாது; ஜலத்தில் உஷ்ணமே பிரகடித்தி (வெளிப்பட்டி) ருக்கும்; பிரகாசம் பிரகடிதமாகாது; காஷ்டத்தில் உஷ்ணமும், பிரகாசமுமாகிய இரண்டும் பிரகடமாயிருக்கும். அப்படியே பிரமமத்தின் சத்து பாஷாணுதிகளில் அபிவியக்கியாகுமன்றிச் சிதாநந்தங்கள் பிரகாசியா. புத்தியின் தமோகுணத்தால் அஞ்ஞானமயமான மூடவிருத்தியிலும், இரஜோகுணத்தால இராகமயமான குரோதவிருத்தியிலும் சத்துச் சித் திரண்டும் பிரகாசிக்குமே யன்றி ஆநந்தம் பிரகாசியாது. சத்துவ குணத்தால் வைராக்கியமயமான சாந்தவிருத்தியில் சச்சிதாநந்த மென்னும் மூன்றற்கும் விளக்கம் காணப்படும். ஆகையா லாநந்தம் ஆத்மசொரூபமாம்.

இந்தப் பஞ்சரூபத்துக்கும் உபாதிபேதம் வருமாறு:—

## சத்துத்திரயம்.

வியாவகாரிகசத்து, பிராதிபாஸிகசத்து, பாரமார்த்திகசத்து எனச் சத்து மூன்றும். அவற்றுள்,

க. சாக்கிரத்திலுள்ள கடாதி சத்தே விதேககை வல்லியபரியந்தம் சுழுத்திமூர்ச்சைமுதலான அவஸ்தையிற் றோன்றாமல் எழுந்தபொழுது முன்போலத் தோன்றுதலால் **வியாவகாரிகசத்தாம்.**

உ. சுத்திகாரசித சொப்பனவிஷயாதிசந்துத் தோன்றுங்காலத்தல்லாமல் விழித்தகாலத்தில் இல்லாமையால் **பிராதிபாஸிகசத்தாம்.**

ங. எல்லாக் கற்பனைக்கும் அதிஷ்டானமாய்ந் தேன்று தடங்கா திருக்கிற பிரஹ்மசத்தே **பாரமார்த்திக சத்தாம்.**

## சித்துச் சதுஷ்டயம்.

ஜீவன், ஈச்சுரன், கூடஸ்தன், பிரஹ்மமென்னு நான்கும் சித்துச்சதுஷ்டயமாம். இவற்றிற்குச் சலப்பிரதிபிம்பாகாசம், மேகாகாசம், கடாவச்சின்னாகாசம், மகாகாசமெனக் கிரமத்தில் * திருஷ்டாந்தம் நான்குண்டு.

## ஆநந்தாஷ்டகம்.

விஷயாநந்தம், பிரஹ்மாநந்தம், வாசனாநந்தம், முக்கியாநந்தம், நிஜாநந்தம், ஆத்மாநந்தம், அத்துவைதாநந்தம், வித்தியாநந்தமென ஆநந்தம் அஷ்டவிதபேதமாம் அவற்றுள்,

க. வனிதாதி விஷயலாபத்திற் றோன்றுவதே **விஷயாநந்தம்.**

உ. நித்திராகாலத்திற் றோன்றுவதே **பிரஹ்மாநந்தம்.**

---

* இவற்றின் இலக்கணங்களை ஸ்ரீவிசாரசாகரத்தின் நான்காவது தரங்கத்திலும் ஸ்ரீபஞ்சதசியின் சித்திரதீபத்தினும் விரிவாய்க் காணலாம்.

௩. சித்திரை தெளிந்துந் தெளியாவிடத்திற் றோன்றுவதே வாசனாநந்தம்.

௪. ஸ்தாணுஸ்தான மில்லாத வபேக்ஷாபுத்தி (விருப்பு வெறுப்பின்றிய வுணர்ச்சி)யிற் றோன்றுவதே முக்கியாநந்தம்.

௫. யோகாப்பியாசபலத்தால் மனோலயமானவிடத்திற் றோன்றுவதே நிஜாநந்தம்.

௬. பிரியமான வனிதாதி விஷயமதநியில் தானே பிரியசொரூபனென் றறிந்தவிடத்திற் றோன்றுவதே ஆத்மாநந்தம்.

௭ நாமரூபப் பிரபஞ்சமெல்லா மித்தை, தானே சத்திய மென்னும் விவேகத்திற் றோன்றுவதே அத்வைதாநந்தம்.

௮. ததுவமஸியாதிமகாவாக்கியஜந்யமான அபரோக்ஷஞானத்திற் றோன்றுவதே வித்தியாநந்தம்.

அபாவசதுஷ்டயம்.

பிராகபாவம், பிரதத்துவமசாபாவம், அந்நியோந்நியாபாவம், அத்தியந்தாபாவமெனப் பிரஹ்மநித்திய பததநுட்புகாத * அபாவம் நான்கு. அவற்றுள்,

---

* க. பிராகபாவம் = உற்பத்திக்கு முன்னில்லாமை
உ. பிரத்துவம்ஸாபாவம் = அழிவின்பின்னில்லாமை
௩. அந்நியோந்நியாபாவம் = ஒன்றிலொன்றின்மை = ஒன்றுமற்றொன்றன்றெனல். ௪. அத்தியந்தாபாவம் = முற்றுமின்மை = எத்தேசத்தும் எக்காலத்துமில்லாமை. இந்நான்கல்லாது ஒரு சமயதிருந்து மற்றொரு சமயத்தில்லாமையாகிய சாமயிகாபாவமும் ஒன்றுண்டு. இது முற்கூறிய அபாவங்களிலடங்குதலால் நான்கென்றார். இதனை விருத்திப்பிரபாகர நூலிற் காண்க.

க. மிருத்திகை முதலியவற்றில் கடாதி முன்னில்லாததே **பிராகபாவம்.**

உ. உண்டானகடம் பின்னில்லாததே **பிரத்துவம்சாபாவம்.**

ஙு. கடம் படமல்ல, படம் கடமல்ல வென்பதே **அந்நியோந்நியாபாவம்.**

ச. ஆகாயததாமரை மலடிமைந்தன் முயற்கொம்பு முதலியன இல்லவே இல்லை யென்பதுவே **அத்தியந்தாபாவம்.**

## பரிச்சேதத்திரயம்.

காலபரிச்சேதம், தேசபரிச்சேதம், வஸ்துபரிச்சேதமென்பன பிரமஸ்மத்தின் பூரண பதத்துள் கிராகரிக்கத்தக்க பரிச்சேதத்திரயமாம். அவற்றுள்,

க. ஒரு காலத்துண்டு ஒரு காலததில்லை யென்பதே **காலபரிச்சேதம்.**

உ. ஒருதேசத்துண்டு ஒருதேசத்தில்லை யென்பதே **தேசபரிச்சேதம்.**

ஙு. ஒருவஸ்து இதுவாகும், ஒருவஸ்து இதுவல்ல வென்பதே **வஸ்துபரிச்சேதம்.**

## ஜீவாதிநாம பேதம்.

முற்கூறிய சித்தின்பேதமான ஜீவ ஈச்சுராதிகளுக்கு நாமரூப விவகார கற்பனையாவது ஜீவனே விசுவன் தைஜசன் பிராஞ்ஞனென மூன்றும். அவற்றுள்

க. தூலசரீர வியஷ்டியபிமானி, **வியாவகாரிகஜீவன்,** புத்திபிரதிபலித சைதந்நியன், சிதாபாசன், விக்ஷேப

ரூபன், க்ஷேத்திரஞ்ஞன், சரீரி, பிரமாத்துரு, கர்த்திரு, போக்திரு, சமுசாரி, விஷயி, பாவாத்மா, விஞ்ஞானமயன், துவம்பதமுக்கியார்த்தன் முதலியன ஜாக்கிராவஸ்தையபிமானியான **விசுவனுக்குப் பரியாயநாமம்.**

உ. சூக்ஷ்மசரீரவியஷ்டியபிமானி, **பிராதிபாசிக ஜீவன்,** சொப்பனகற்பிதன் முதலியன சொப்பனாவஸ்தாபிமானியான **தைஜசனுக்குப் பரியாயநாமம்.**

ங. காரணசரீரவியஷ்டியபிமானி, * **அவித்தியோபகிதன்,** காரியோபாதிகன் என்பன முதலியன சுழுத்தியவஸ்தாபிமானியான **பிராஞ்ஞனுக்குப் பரியாயநாமம்.**

## ஆத்மத்திரயம்.

ஜீவாத்மா, அந்தராத்மா, பரமாத்மாவென ஆத்மத்திரய முண்டு. அவற்றுள்,

† க. தப்தாயப்பிண்டம்போலத் தேகங்கட்குள்ளே சம்பந்தித்துச் சகலசமுசார விவகாரமு முள்ளவனே **ஜீவாத்மா.**

‡ உ. கமலபத்திரோதகம்போலச் சமுசாரம் பொருந்தியும் பொருந்தாதவனே **அந்தராத்மா.**

ங. உலக விவகாரத்துக்குச் சாக்ஷி சூரியனைதல்போல ஜீவாந்தராத்ம விவகாரங்களின் சாக்ஷியே **பரமாத்மா.**

## சமுசார கற்பனை.

ஜலத்தின் அசைவைச் சூரியனது அசை வென்றல் போலும், மேகமோடச் சந்திர னோடுகின்றதெனல்போ

---

* அவித்தியோபகிதன் = அவித்தையையுபாதியாகவுவுடையவன்.

† தப்தாயப்பிண்டம்=காய்ச்சிய இருப்புத்துண்டாம்.

‡ கமலபத்திரோதகம்=தாமரையிலையிற்றங்கிய நீர்.

லும் நதியிலே ஓடமோடத் தீரத்தின் விருக்ஷமோடுகின்றன வென்றல்போலும், மனையின்துவாரத்திற் பிரகாசிக்கின்ற சூரியகிரணம் கையசைக்கும்போது அசைதல்போலும், தேகத்தின் ஜனனமரணம் ஆத்மாவுக்கென்றல்போலும் நிர்விகாரமாகிய சைதன்னிய ஆத்மாவுக்கு தேகாதியுபாதியாலான ஜீவாவஸ்தை சமுசாரவிவகாரமா மென்று சொல்லப்படும்.

### அச்சுரநாமபேதம்.

ஈசுரனே விராட்புருஷன், இரணியகர்ப்பன், அந்தரியாமியென மூவகையாவர். அவருள்,

தூலசரீரசமஷ்டியபிமானி வைராஜனென முதலியன விராட்புருஷனுக்குப் பரியாயநாமம்.

இலிங்கசரீரசமஷ்டியபிமானி, மகாப்பிராணன், சூத்திராத்மா முதலியன இரணியகர்ப்பனுக்குப் பரியாயநாமம்.

காரணசரீரசமஷ்டியபிமானி, அஞ்ஞான உபகிதர் (அஞ்ஞானத்தை யுபாதியாக வுடைய) சைதந்நியன், காரணோபாதிகன், மாயோபாதிகன், மாயாபாசகன், மாயி, மாயாவி, ஜகதபிமானி, ஆநந்தமயன், அக்ஷரன் அவ்வியக்தன், சபளபிரஹ்மம் (மாயையோடுகூடிய பிரஹ்மம்), சகுணப்பிரஹ்மம், பரன், பரமன், மகேசுவரன், பரதேவதை, தத்பதமுக்கியார்த்தன் என்பன முதலிய அந்தரியாமிக்குப் பரியாயநாமம்.

### அந்த ஈச்சுரன் தேகதிருஷ்டாந்தம்.

* ஒரு சித்திரபடமானது நாநாவர்ணங் கூடுமுன் தௌதம் (வெள்ளை வஸ்திரம்) என்றும், மேற்கஞ்சிப்

---

* இதன்விரிவை ஸ்ரீபஞ்சதசியின் சித்திரதீபத்திற் காண்க.

பூசசால் கட்டித மென்றும், மேல்நீலமயமான ஆகாரத்தால் இலாஞ்சித மென்றும், மேல்தக்கவர்ணங்களை விரப்புதலால் ஓரஞ்சித மென்றும் சொல்லப்படும். அப்படியே பிரஹ்மமுதல் மாயாதற்காரியாதிரமானதே சித்தென்றும், சர்வ காரணமான மாயோபாதியினால் அந்தரியாமி யென்றும், அவ்வியக்தமான அபஞ்சீகிருத பூதகாரியமாகிய சூக்ஷமசரீர சமஷ்டியுபாதியினால் சூத்ராத்மா வென்றும், வியக்தமான பஞ்சீகிருத பூதகாரியரூப தூல சமஷ்டியுபாதியினால் விராட் புருஷ னென்றுஞ் சொல்லப்படும்.

## தாஷ்டாந்தம்.

அதுபோல பிரஹ்மத்துக்குச சித்திரபடம் திருஷ்டாந்தமாகுககால் அதில் சித்திரம் யாதெனின், விரிஞ்சனாதி திரணாந்தமான சேதனப் பிராணிகளும், கிரிநதியாதி அசேதன விஷயஙகளுமான ஜடாஜடரூப சகஞ் சித்திரமென்றறி. பாரமார்த்திகமான சித்ரூப மொன்றில் மித்தியா வடிவமான வெகு சேதனாசேதனரூப சகமிருத்த லெங்ஙனமெனின், சித்திரபடத்தி லெழுதப்பட்டு நாநாவர்ணமுடையதாய்ச சீதாதிகளை நிவிருத்திசெய்ய முடியாதனவாயிருக்கும் வஸ்திராபாசங் (வஸ்திரப்போலி)களும், சீதாதிகளைப் பரிகாரஞ் செய்கிற சத்தியமான ஆதாரபடமும் ஒருவடிவா யிருந்தபோதிலும் சித்திரபடத்திலுள்ள கிரிநதியாதிகள் அச்சித்திராதார படத்துடன் சமானமாகாததுபோலச் சித்ரூபப் பிரஹ்மத்தில் வெவ்வேறாகத் தோன்றப்பட்ட சிதாபாச சைதந்யரான வியாவகாரிக ஜீவர்கள் சித்துடனே சமானமாய்த் தோற்றினும், மிருத்திகைமுதலான சடரூபங்கள் சமான மாகாமையால் சேதனாசேதனமான சகத்து சித்ரூபப்பிரஹ்மத்தில் கற்பித மென்றே நிச்சயிக்கப்படும்.

## ஈச்சுரன் முக்கிய குணம்.

* சர்வஞ்ஞத்துவம், சர்வேச்சுரத்துவம், சர்வநியந்திருத்துவம், சர்வாந்தரியாமித்துவம், சர்வகர்த்திருத்துவம், சர்வசக்தித்துவாதிகளே ஈச்சுரனுடைய முக்கியகுணமாம்.

## ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்திய குணத்திரயம்.

† கர்த்திருத்துவம், அகர்த்திருத்துவம், அந்நியதாகர்த்திருத்துவமென ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்தியகுணத்திரயமுண்டு.

## ஈச்சுரன் பஞ்சகிருத்தியம்.

சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமென ஈச்சுரனுக்குப் பஞ்சகிருத்தியம் உண்டு. ஆனால் நிர்விகாராத்துவிதீயப் பிரஹ்ம சொரூபனான ஈச்சுரனிடத்தில் சிருஷ்டியாதி வியாபாரமாகிய வெகு தொழில்கள் எவ்வாறுறுமெனின், சூரியன் இச்சையத்தனமின்றித் தன் வருஷ (மழைக்)கிரணத்தால் விருஷ்டிரூப (மழைவடிவ)மான ஜலத்தைவிட்டு, பின்னந்தஜலத்திற்றானே பிரதிபிம்பித்து, மேகாதிகளால் அதனை மறைத்து, இம(பனிக்)கிரணத்தால் அதனைத் தடுத்து, உஷ்ணகிரணத்தால் அந்தச் ஜலத்தைத் திரும்ப வாங்கிக்கொண்டு அப்பிரதிபிம்பத்தைத் தன்னுடன் கூட்டிக்கொள்ளுவன். அதுபோல ஈச்சுரனுந் தன் மாயாசத்தியுடன் கூடிச் சித்துப்பிரதானத்

* முற்றறிவுடைமை, எல்லாமாளுந்தன்மை, எல்லாவற்றையும நியமிக்குந்தன்மை, எல்லாவற்றினுள்ளிருந்தியக்குந்தன்மை, எல்லாஞ்செய்தற்றன்மை, எல்லாவல்லமை முதலியவைகளே.

† செய்தற்றன்மை, செய்யாமை, வேறுவகையாகச் செய்தற்றன்மையென.

தால் நிமித்தகாரணனும், ஜடப்பிரதானத்தால் உபாதானகாரணனும் நின்று புத்தியாதிகாரியங்களைச் சிருஷ்டித்துச் ஜீவரூபத்தாற் றானே பிரவேசித்துக் கர்மத்தால் போக்திருவாய் நின்று,*நியாமகசத்தியால் போக்கிய போகதிருக்களை நியமித்து, உருத்திர ரூபத்தால் அக்காரியரூபங்களைச் சங்கரித்துப் பின் சுருதி குருரூபத்தால் அச்சீவனைத் தன்னுடன் ஐக்கியஞ்செய்துகொள்ளுவன்.

## வியஷ்டி சமஷ்டி ரூபத்துவயம்

சமஷ்டி வியஷ்டி யென ஜீவ ஈச்சுரரூபத்துவயமுண்டு. அவற்றுள்,

க. அநேக விருக்ஷமுள்ளதை ஒரு வனமென்றாற்போல அநேகமான சீவர்கள் யாவரையும் தன்னாத்மாவென்னும் அபிமானமே ஈச்சுரனுடைய சமஷ்டிரூபமாம்.

உ. அவ்வனத்தில் தனித்தனி இஃதொரு விருக்ஷம், இஃதொரு விருக்ஷமென்று வெவ்வேறாக் குறியிடுவதுபோலப் பின்னமான உடல்தோறும் வேறு வேறா யுண்டாகும் அபிமானமே ஜீவனுடைய வியஷ்டிரூபமாம்.

## கூடஸ்தன்பரியாயநாமம்.

விசுவாதி சீவத்திரயாதிஷ்டான சைதந்நியன், துரியன், சுவயஞ்சத்தார்த்தன், சாக்ஷிகன், பாரமார்த்திக சீவன், பிரத்தியகாத்மா, அந்தரியாமி, அநுசந்தாத்திரு, அவச்சின்னசீவன், துவம்பதலக்ஷியார்த்தன் முதலியன கூடஸ்தன் பரியாயநாமம்.

---

* நியமிக்கும் வல்லமையால். போக்கியம்=புசிக்கப்படுபொருள். போக்திரு=புசிப்பவன்.

## பிரஹ்மத்தின்பரியாயநாமம்.

அந்தரியாமியாதிசச்சுரத்திரயாதிஷ்டாத்திரு, பரமாத்மா, பரதத்துவம், பரப்பிரஹ்மம், சர்வாதிஷ்டாத்திரு, விசுத்தசித்து, நிர்க்குணன், நிர்விசேஷன், நிஷ்களன், நிரவத்தியன், நிரஞ்சனன், அசங்கன், நிருபப்பிலவாநந்தன், நிர்மாயி, நிருபத்திரவன், சத்தாமாத்திரன், சத்தியன், தத்பதலக்ஷியார்த்தன் முதலியன பிரஹ்மத்தின் பரியாய நாமம்.

## திருக்குவிவேகசாரம்.

மிருத்திகையொன்றே நாமரூபத்தால் கடாதிவெகுபேதமானாற்போலும், சுவர்ணமொன்றே வாசாரம்பண (வாக்கின்காரிய) த்தால் கடக மகுடாதியாபரண மானாற்போலும், சலமொன்றே வாயுவசத்தால் நுரை குமிழி அலைமுதலிய சமுதாய மானாற்போலும், தீபமொன்றே கடத்தின் துவாரபேதத்தால் வெகுரூப மானாற்போலும், மாருத மொன்றே வேணுரந்திரத்தால் மந்தர மத்திம தாரமானாற்போலும், சுரமொன்றே பாடுவான் குறிப்பால் நாநாராகமானாற்போலும், ககன மொன்றே கிரகாதி யுபாதியால் அநேகமானாற் போலும், தொனியொன்றே வாத்தியாதி பேதத்தால் அநேகமானாற்போலும், ஆகாய மொன்றே வாழையிலையைத்துண்டித்தலால் கரிதுரகாதிநாநா பேதமானாற் போலும், இரவியொன்றே சலகும்பாதிவசத்தால் நாநாவித மானாற்போலும் முகமொன்றே கண்ணாடி பேதத்தால் பலவானாற்போலும், இலக்கமொன்றே பிந்து பேதத்தால் பத்து, நூறு, ஆயிரமுதலிய வானாற்போலும், சித்தொன்றே உபாதிபேதகற்பனையால் முற்கூறிய சீவேச்சுராதி சகல பேதவிகாரகற் பனையாய்ச் சொல்லப்படும். இவையெல்லாம் திருக்குவிவேகம்.

## * திருசியவிவேகம்.

சந்திரனிடத்தில் அநாதி களங்கமானது எப்படிச் சந்திரனை யாசிரயித்து அவனை மறையாமல் அவனால் விளங்குகிறதோ அப்படியே அநாதியானபாவரூப அஞ்ஞானம் நான் என்னை அறியேனென்னும் உலகப் பிரசித்த விவகாரத்தால் ஆத்மாவை யடுத்து அதனை மறையாமல் அதனாலறியப்படுவதாய் அக்கினியின் சுடுந்தொழில் மணி மந்திராதிப் பிரயோகத்தால் பந்திக்கப்பட்டுத் தான் அக்கினிரூபமு மல்லாமல் அக்கினியைவிட வேறாகவுந் தோன்றாமல் ஸ்போடகாதி (கொப்புள முதலிய) காரியத்தை யுண்டாக்குவதுபோலப் பிரஹ்மசொரூபமு மாகாமல், பிரஹ்மத்தின் வேறாகவுந் தோன்றாமல் ஆகாசாதி காரியத்தாலறியத்தக்கதாயும், அகடிதகடனா சமாத்தையா (நிகழாததை நிகழ்த்துவிக்கும் வல்லமையுள்ளதா)யாகியும், சர்வ அநர்த்தங்களுக்குங் காரணமாயு முள்ள திருசியரூப மாயாசக்தியாம்.

### மாயாலக்ஷணபஞ்சகம்.

அசத்து, சடம், துக்கம், அநித்தியம், கண்டித (பரிச்சின்ன)மென மாயாலக்ஷண பஞ்சக முண்டு. அவற்றுள்,

க. இல்லாத சசசிருங்க (முயற்கொம்பு) முதலானவை அசத்துரூபமாம்.

உ. மூடமான பாஷாணாதிகளே (கல் முதலியனவே) சடரூபமாம்.

ங. இரஜ தமோமயமான புத்தியின் கோரமுதலிய சகிக்கமுடியாத விருத்தியே துக்கரூபமாம்.

---

* திருசியம்=காணப்படுவது.

௫. தோன்றிக்கெடுகிற தேகமுதலியனவே அநித்தி யரூபமாம்.

௬. காலபரிச்சேத முதலியனவே கண்டிதரூபமாம்.

## மாயா அநிர்வாச்சியநவப்பிரகாரம்.

பின்னம், அபின்னம், பின்னாபின்னம், சத்து, அசத்து, சதசத்து, சாவயவம், நிரவயம், சாவயவநிரவயவம் என்னும் இவையல்லாததன்றே மாயையின் * அநிர்வாச்சியநவப்பிரகாரமாம்.

## மாயாப்பிரதீதித்திரயம்.

அந்தமாயையே † சுருதிசம்பந்திஞானம் யுக்திசம்பந்திஞானம், லோக சம்பந்திஞானமென்னும் மூன்று ஞானங்களால் கிரமத்தில் ககனகுசுமம்போலத் துச்சமென்றும், சுத்திகாரசிதம்போல அநிர்வாச்சியமென்றும், ஆத்மாவைப்போல நித்தியமென்றுஞ் சொல்லப்படும்.

## மாயாநாமபஞ்சகம்.

தமசு, மாயை, மோகம், அவித்தை, அநிருதம் (பொய்) என மாயாநாமபஞ்சகமுண்டு. அதற்குச்

க சீவசைதந்நியத்தை மறைத்தலால் தமசென்றும்,

---

* அநிர்வாச்சியம் வாக்கினுல் இன்னதென்று சொல்ல முடியாதது. அநிர்வசனீயம் என்பதுவும் இதுவே.

† இம்மூவகைச் சம்பந்தவுணர்ச்சியினையும் அதனுல் மாயையடையும் மூவகைப்பெயரையும் ஸ்ரீபாலபோதத்தின் அஅ-வது பிரசங்கத்திற் காண்க.

உ. சகத்ரூபமான தன்னின் வேறாகிய தோற்றத்துக்குக் காரணமாதலால் மாயையென்றும்,

ஙு. அப்படித் தோற்றிய சகத்தில் சுத்திவெள்ளி முதலிய விபரீத முண்டாக்குதலால் மோகமென்றும்,

ச. வித்தையினாற் கெடுதலால் அவித்தை யென்றும்,

ரு. சத்ரூபத்துக்கு அந்நியமாதலால் அநிருத மெ (பொய்யெ)ன்றும் பெயராம்,

## மாயாதர்மத்துவயம்.

சங்கோச விகாசமென மாயாதர்மத்துவய முண்டு. அவையெப்படி யெனின், சித்திர படமானது தன் பிரசாரணையால் (விரிவால்) நாநாவித சித்திரங் காண்பித்துச சங்கோச (சுருக்க)த்தால் அந்த நாநா சித்திரங்களையும் மறைக்கும். அதுபோல மாயை தன் விகாச(விரிதல்) தர்மத்தால் சகலப் பிரபஞ்சத்தையுந் தோற்றுவித்துச் சங்கோச தர்மத்தா லடங்கச்செய்யும்.

## மாயாகுணத்துவயம்.

அசுவதந்திரத்தன்மை சுவதந்திரத்தன்மையென மாயாகுணத்துவயமுண்டு. அவற்றுள்,

க. மாயை மித்தையாதலாற் றன் சத்ரூப சைதந்நியத்தின் வேறாகத் தோன்றாமையே அசுவதந்திரத்தன்மை (சுதந்திரமின்மை)யாம்.

உ. சாக்ஷியும் அசங்கமுமாகிய ஆத்துமாவைச் சீவாதிப் பிரபஞ்சமயமாகச் செய்விப்பதே சுவதந்திரத்தன்மையாம்.

## மாயாவிருத்தித்திரயம்.

*விசுத்தசத்துவரூப மாயை, மலினசத்துவரூப அவித்தை, தமப்பிரதானரூபப் பிரகிருதியென மாயாவிருத்தித்திரயமுண்டு. அவற்றுள்*

க. **மாயை** சுழுத்தி இலயங்களிலே பிரஹ்மத்துடனே அத்தியாசவைக்கியமாயிருந்து, பின் சாக்கிரசொப்பனங்களில் சிறிது பேதாவஸ்தையை யடையுங்கால் அப்பிரஹ்மசைதந்நியம் தன்னிடத்திற் பிரதிபிம்பிக்க அதனை சர்வஞ்ஞத்துவாதி குணவிசிஷ்டசைதந்நியனென ஈச்சுரனென்றும், தத்பதார்த்தனென்றும், பிரேரிப்பவனென்றும், பதிபதார்த்த மென்றும், இறையென்றுங் கொள்வதினல் அது அந்த ஈச்சுரனுக்கு உபாதியாகி அமோககாரணியென்று சொல்லப்படும்.

உ. **அவித்தை** தன்னிடத்திற் பிரதிபிம்பித்து நாநாத்வத்தால் போக்திருக்களான பசுபதார்த்த சீவருக்கு உபாதியாகி மோககாரணியென்று சொல்லப்படும்.

ங. **பிரகிருதி** போக்கியவடிவத்தன்மையாற் பாசபதார்த்தமெனப்பட்டுக் குணத்திரயசாமியாவஸ்தையாயிருந்து அவ்வவித்தையிற் பிரதிபிம்பித்த சீவருடைய போகார்த்தமாய்ச் சகல காரியமு மாகவேண்டி ஈச்சுரனது சந்நிதானலக்ஷண வீக்ஷணமாத்திரத்தால் விரிந்து பிரபஞ்சத்தைக் கற்பிக்கும்.

## மகதாதி சிருஷ்டிக்கிரமம்.

**அந்தப்பிரகிருதியும்** முதலிற் காலதத்துவமாய், மேற் காலவசத்தாற் பரிணமித்து மகத்தத்துவமாம். அம்மகத்தத்துவமானது விதைத்துத் தண்ணீர் வார்க்க அங்குரமுமாகாமல், பீசவியாயமுங் காட்டாமல் உற்பின்னவஸ்தையை யடைந்த பீசம்போலக் காரணப்பிரகிருதியுமாகாமல்

காரியவகங்காரமும் மாகாமல் மித்தியாஞானமுற்ற விர்வி கற்ப சொரூபத்தால் மத்தியாவஸ்தையாம். பின்னும் அம் மகத்தத்துவத்திற் குணபேதமாய் மித்தியா ஞானமுற்ற சவிகற்ப சொரூபமான பிரதமாத்தியாச மெனப்படும் மூலாகங்கார முற்பத்தியாம்.

## குணத்திரயசிருஷ்டி.

சத்துவம், ரஜசு, தமசெனக் குணத்திரய மூண்டு. பிரகாசம், பிரவிருத்தி, மோகமென்பன முறையே சத்துவாதிகுணங்களின் வடிவம். தைஜசம், வைகாரிகம், பூதாதிகமெனபன சத்துவாதி குணங்களுக்குப் பரியாயநாமமாம். அவற்றுள்,

சத்துவகுணத்தில் மனமுதலிய அந்தக்கரணம் நானகும், சுரோத்திராதி ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றும்.

இரஜோகுணத்தில் வாக்காதி கர்மேந்திரியபஞ்சகமும், பிராணாதி வாயுபஞ்சகமும் உண்டாம்.

தமோகுணத்தில் ஆகாசாதி பூதபஞ்சக முற்பத்தியாம்.

பின் பூதபஞ்சகங்களின் * பஞ்சீகரணக்கலப்பால் பிரஹ்மாண்ட புவன சரீர கடாதிவிஷயங்களுண்டாம்.

---

* ஆகாயாதி பூதங்களைந்தினையும் இருகூறாக்க அவை பத்தாயின. முதல் ஐந்துகூறையும் விறுத்திப் பின் ஐந்து கூறுகளில் ஒவ்வொன்றையும் நந்நான்காக்கி அவற்றை ஒவ்வொரு பூதத்தின் தன்னரை அம்சத்தைவிட்டு மற்றைய நான்கு பூதங்களின் அரை அரை அம்சங்களோடு சேர்க்கும்போது அவை தம் அரைப்பங்கும் மற்ற நான்கின் அரைக்காலரைக்கால் பங்கும் சேரும்போது பஞ்சீகிருதம்(அவ்வைந்தாக்கப்பட்டவை) ஆகின்றன. இவ்வாறு அவ்வைந்தாக்கலைப் பஞ்சீகரணமென்பர். இப்பஞ்சீகரணத்தினிலக்கணத்தை ஸ்ரீ விசாரசந்திரோதயம் பாலபோதம் விசாரசாகர முதலிய நூல்களில் தெளிவாய்க் காண்க.

## அந்தக்கரணசதுஷ்டயம்.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பன அந்தக்கரணசதுஷ்டயமாம்.

அம்மனமுதலிய அந்தக்கரணங்களுக்குக் கிரமத்தில் விஷயங்களை யினைத்தல், நிச்சயித்தல், அபிமானித்தல், சிந்தித்தல் என்பன வியாபாரமாம். அவற்றிற்குச் சந்திரன், சதுர்முகன், க்ஷேத்திரஞ்ஞன், திரிபுராந்தகன அதிதேவதைகளாம். இதயகோளகம் ஸ்தானம்.

## ஞானேந்திரிய பஞ்சகம்.

சுரோத்திரம், துவக்கு, சக்ஷுசு, சிங்ஙுவை, கிராண மென்பன ஞானேந்திரியபஞ்சகமாம்.

அந்தச்சுரோத்திராதி ஞானேந்திரியங்களுக்குக் கிரமத்தில் சத்தத்தினைக் கேட்டல், பரிசத்தையறிதல், ரூபத்தைப் பார்த்தல், இரசத்தை உருசித்தல், மணங்கொள்ளுதல் வியாபாரமாம்; அவற்றிற்குத் திக்கு, மாருதம், சூரியன், வருணன், அசுவினிகுமாரர் அதிதேவதைகளாம். காதுமுதலிய கோளகங்கள் ஸ்தானம்.

சுரோத்திராதி ஞானேந்திரியங்களுக்குப் பாகிய சதாதி விஷயங்களை யறிவதுபோல, செவியை யங்குலியான் மூடுங்கால் பிராணவாயு சாடராக்கினிகளாலுண்டாம் சத்தக்கிரகணமும், அன்னபானாதிகளை யுட்கொள்ளுங்காலுண்டாம் உஷ்ணசீதாதி ஸ்பரிச கிரகணமும், நேத்திரத்தை மூடுங்கால் உள்ளிருளைக் கிரகித்தலும் ஏப்பமிடுங்கால் உள்ளிரசத்தைக் கிரகித்தலும், வாந்தியாகுங்கால் உள்நாற்றத்தைக் கவர்தலுமாகிய உட்சத்தமுதலிய விஷயக்கிரகணமு முண்டு.

## கர்மேந்திரிய பஞ்சகம்.

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் என்பன கர்மேந்திரிய பஞ்சகமாம்.

அவ்வாக்காதி கர்மேந்திரியங்களுக்குக் கிரமத்தில் வசனித்தல், நடத்தல், இடுதலேற்றல், மலத்தை நீககல், ஆநந்தித்தல் வியாபாரமாம்; இவற்றிற்கு அக்கினி, இந்திரன், இரவி, மிருத்தியு, பிரஜாபதி என்போர் அதிதேவதைகளாம். வாய்முதலிய கோளகங்கள் ஸ்தானம்

## அத்தியாத்மிகமுதலியன.

ச அந்தக்கரணம், ரு ஞானேந்திரியம், ரு கர்மேந்திரியமென்னும் பதிஞன்கும் அத்தியாத்மிகம்.

அவற்றின் விஷயமே ஆதிபௌதிகம்.

அவற்றின் அதிதேவதைகளே ஆதிதெய்வீகம்.

## இந்திரியமூலசமன்வயம்.

அச்சந்திராதி தேவதைகளே விராட்புருஷனுக்கு இந்திரியம். அந்தக்கரணேந்திரியாதிகளே இரணியகர்ப்பனுக்குச் சரீரம். அச்சரீரமே தமோரூபத்தால் அந்தரியாமிக்கு ஆவரணம்.

## பிராணபஞ்சகம்.

பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்பன பிராணபஞ்சகம்.

க. பிராணவாயு இதயஸ்தானத்திலிருந்து உசுவாசநிசுவாசம் பண்ணும்.

உ. அபானவாயு குதஸ்தானத்திலிருந்து மலமூத்திரத்தைக் கழிப்பிக்கும்.

ரு. சமானவாயு நாபிஸ்தானத்திலிருந்து உண்ட அன்னசாரத்தைச் சர்வாங்கத்துக்கும் பகுத்துக்கொடுக்கும்.

ச. உதானவாயு கண்டஸ்தானத்திலிருந்து வாந்தி பண்ணுவிக்கும்.

ரு. வியானவாயு சர்வாங்கத்திலு மிருந்து தேகத்தை நிறுத்துவிக்கும்.

## உபவாயு.

நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சய னென்னும் ஐந்தும் உபவாயு.

க. பிராணவாயுவிற் றோன்றின நாகவாயு மெய்யை முறுக்கிக் கொட்டாவி விடுவிக்கும்.

உ. கூர்மவாயு விக்கலேப்ப மிடுவிக்கும்.

ங. கிருகரவாயு தும்ம லிருமலுண்டாக்கும்.

ச. தேவதத்தவாயு சிரிக்கும், வசனிக்கும்.

ரு. தனஞ்சயவாயு சோகமோகங்களைச் செய்யும்; பிராணன் நீங்கியபின்னும் ஐந்துநாளிருந்து தேகத்தை வீங்கச்செய்து தலை வெடிக்கப் பண்ணிப்போம்.

நாகாதிவாயு வைந்தும் பாகியவாயுவென்று சொல்லப்பட்டு வாக்காதி கர்மேந்திரியங்களைச் சேஷ்டித்தற் கேதுவாம்.

பிராணாதிவாயு வைந்தும் அப்பியந்தர (உள்) வாயுவென்று சொல்லப்பட்டுச் சுரோத்திராதி ஞானேந்திரியங்களைச் சேஷ்டிக்கிறதற் கேதுவாம்.

வைரம்பன், முக்கியன், பிரபஞ்சனன், அந்தரியாமி யென்னு மிந்நான்குஞ் சீவசம்பந்த வாயுக்களாய் மனமுதலிய வந்தக்கரணங்களைச் சேஷ்டிப்பிக்கும்.

## பஞ்சபூதங்கள்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்பன பஞ்ச பூதங்கள்.

பூமியாதி பஞ்சபூதங்களுக்குக் கிரமத்தில் தாரணை (தாங்கல்), பிண்டீகரணம் (திரட்டுதல்), பாகஞ்செய்தல், உலாவல், அவகாசிப்பித்தல் (இடங்கொடுத்தல்), என்பன வியாபாரமாம். இவற்றிற்குப் பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், மகேச்சுரன், சதாசிவன் என்போர் அதிதேவதைகளாம். கந்தாதியே குணங்கள். அஃதெப்படி யெனின்,

ஆகாசத்துக்குப் பிரதித்தொனிரூபமான சத்தகுணம் ஒன்று.

வாயுவுக்கு விஸ்ஸென்னும் சத்தம், வெம்மையுங் குளிர்ச்சியுமின்றிய பரிசமென குண மிரண்டாம்.

அக்கினிக்குப் புகுபுகென்னும் சத்தம், உஷ்ணஸ்பரிசம், விளக்கவெண்மையென மூன்றும்.

சலத்துக்குப் புளுபுளு வென்னும் சத்தம், சீதஸ்பரிசம், விளக்கமின்றிய வெண்மை, மதுரரச மென நான்காம்.

பூமிக்குக் கடகடவென்னும் சத்தம், கடினஸ்பரிசம், நீலாதிசித்திரரூபம், மதுராதி நாநாரசம், இருவகை நாற்றமென ஐந்தாம்.

இவற்றுள், சப்தம் ஆகாயத்திற்கும், ஸ்பரிசம் வாயுவிற்கும், உருவம் தேயுவிற்கும், ரஸம் ஜலத்திற்கும், கந்தம் பிருதிவிக்கும் பிரதானகுணங்களாம்.

## திரிபுடி.

ஞாதுரு, ஞானம், ஞேயமெனத் * திரிபுடி யுண்டு. அவற்றுள்,

க. மூலவகங்காரத்தில் பிரதிபிம்பிக்குஞ் சிவசைதந்நியமே ஞாதுரு.

---

* திரிபுடி மூன்றுபுறமுடையது.

௨. மனதிற் பிரதிபிம்பிக்குஞ் சைதந்யமே ஞானம்.

௩. பூதாதி விஷய அவச்சின்ன சைதந்யமே ஞேயம்.

இம்மூன்றும் சோபாதிகமாய் இதற்கதிஷ்டான சேதனமே தானாயிருக்கும்.

## தத்துவங்கள்

பூதபஞ்சகம், ஞானேந்திரியபஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சகம், பிராணாதிபஞ்சகம், அந்தக்கரணசதுஷ்டய மென்னு மிவை-௨௪ தத்துவம். மூல அகங்காரமே ௨௫ ஆம் தத்துவம் அகங்காரகத சிதாபாச சீவனே ௨௬-ஆம் தத்துவம். மாயோபாதியே ௨௭-ம் தத்துவம். மாயாவச்சின்ன ஈச்சுரனே-௨௮ ஆம் தத்துவம். அகங்கார சீவர்கட்கு அதிஷ்டானமான கூடஸ்தனே-௨௯ ஆம் தத்துவம். மாயா ஈச்சுரருக்கு அதிஷ்டானமான பிரஹ்மமே ௩௰-ஆம் தத்துவம். அநந்நிய மாயிகமான மாயோபஹித பிரஹ்ம சைதந்நியமே ௩௧-ம் தத்துவம். சச்சிதாநந்த ஏகரஸஸ் பூர்த்தியான மேல் தத்துவமே ௩௨-ம் தத்துவம் மற்றும் விசார லக்ஷிய பேதத்தினால் தத்துவசங்கை வெகுவிதமா யிருப்பதோடு அவை சொல்லப்பட்ட தத்துவங்களுள் அடங்குவனவாம். இம் முப்பத்திரண்டு தத்துவங்களுக் கசங்கமான நிர்க்குண சத்தாமாத்திரமான மாயோபலக்ஷித பாரற்பரசிவசைதன்னியமே நித்தியமுக்த பிரஹ்ம மென்றும் ஸ்வஸ்வரூபமென்று சொல்லப்படும்.

## சிருஷ்டி.

அப்பிரகிருதியின் காரியோதயத்தில் கிரமசிருஷ்டியென்றும் யுகபூத் சிருஷ்டியென்று மிரண்டுண்டு. அவற்றுள்.

க. மூலப்பிரகிருதியில் மகத் தத்துவமும், அகங்காரமும், தன்மாத்திராபஞ்சகமுமெனச் * சத்தப்பிரகிருதியுண்டு. அவற்றுள், தன்மாத்திரையாலாய பஞ்சபூதத்தினின்று பிரஹ்மாண்ட புவன சரீர கடாதிப் பிரபஞ்ச முற்பத்தியாதலே ** **கிரமசிருஷ்டியாம்.**

உ. விஸ்தரங்க சமுத்திரத்துள் ஏககாலத்தில் வாயுவசத்தால் விசித்திரமான பேன தரங்க புற்புதாதிகளுதயமாதல்போலச் சச்சிதாநந்தப்பிரஹ்மத்தில் ஏககாலத்தில் மாயாமய நாமரூபம் விரிதலே ****யுகபந்சிருஷ்டியாம்.**

இவ்விருவகையும் சுருதிசித்தமாகையால் அங்கீகரிக்கத்தக்கனவாம்.

## சிருஷ்டி திருஷ்டாந்தம்.

அதிரோகித (மறைபடாத) பிரஹ்மசொரூபமான விகாரமில்லாத ஈச்சுரனால் சடப்பிரகிருதியினின்று காரியங்களுண்டாதல் எங்ஙனமெனின், இச்சையாதிகளின்றிய சூரியனால் முயற்சியாதிகள் இல்லாச்சூரியகாந்தத்தினின்று அக்கினிவெளிப்படுதல்போல ஈச்சுரனால் பிரகிருதியினின்று மகதாதி காரியமுண்டாதற்கு விரோதமில்லை.

---

* மகதத்துவம், அகங்காரதத்துவம், தன்மாத்திராபஞ்சகமென்னும் ஏழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகிருதியாதலும் தங்கட்டோன்றுவனவற்றை நோக்கப் பிரகிருதியாதலுமுடையனவாம்.

** **கிரமசிருஷ்டி** காரணகாரிய முறையாக ஒன்றன்பின் ஒன்றாய்த் தோற்றுவது.

**யுகபத்சிருஷ்டி** காரணகாரிய [illegible] எல்லாம் ஏககாலத்தில் தோற்றுவது.

## மாயாகாரியோதயசதுஷ்டயம்.

† விருத்தி, பரிணாமம், ஆரம்பம், விவர்த்தமென மாயாகாரியோதய சதுஷ்டய முண்டு. அவற்றிற்குப் படங் குடிலாதல், பால் தயிராதல், நூல் படமாதல், கயிற்றி லரவுதோன்றல் எனக் கிரமத்தில் திருஷ்டாந்த சதுஷ் டய முண்டு.

## மித்தியாத்துவ திருஷ்டாந்தம்.

சத்ரூபப்பிரஹ்மத்தில் மித்தியாவஸ்து கற்பிதமா தற்கு இரச்சுசர்ப்பம், ஸ்தாணுசோரன், சொப்பனபுரம், இந்திரசாலநகர், கந்தர்வநகரம், சுத்திவெள்ளி, நீலவாகா யம், கானற்சலம், சங்கிற்பொன்மை, செம்பரத்தம்பூவ டுத்தபடிகச்செம்மை முதலியவை திருஷ்டாந்தங் களாம்.

## காரணத்துவதோஷ பரிகாரம்.

நிர்விகாரசொரூபாத்வயமான ஆத்மாவினிடத்தில் மித்தியாவஸ்து கற்பிதமாயின், அப்பிராந்தி யாருக்குத் தோற்றினதெனின், ஓர் யோகீச்சுரனிடத்தில் தலைவனும் தலைவியும், அவனோடு கூடும் விருப்பும், அவனோடுகூடிய வின்பமுமாகிய மூவகையும் சொப்பனத்தில் ஏககாலத்திற் றோன்றினும், அதனால் அவனுக்கு யாதொரு கேடுமில்லா ததுபோலச் சாக்ஷியாகிய ஆத்மாவினிடத்தில் முக்குண வடிவமான பிரகிருதியினால் பிராந்திஞாதுரு, பிராந்திஞா னம், பிராந்திஞேயமென்னுந் திரிபுடியைப் பிரபஞ்சம் ஏககாலத்திற் கற்பிதமானாலும் அவ்வாத்மாவுக்கு யாதொரு

† வஸ்திரம் கூடாரமாதல் விருத்தியெனப்படும். மற்றையபரிணாமமுதலியவற்றின் லக்ஷணம் விசாரசந்தி ரோதயமுதலியவற்றிற் செவ்வையாய் நிரூபிக்கப்பட் டிருக்கிறது.

கெடுதியும் இல்லை. ஈச்சுரனால் சிருஷ்டியான மாயாமய வியோமாதி பிரபஞ்சமானது சொரூபத்தில ஏகப்பிரகாரமாம்.

## விஷயத்திரயம்.

அதனிடத்தில் சீவபுத்திகற்பிதமான போக்கியவடிவமானது பிரீதிவிஷயம், துவேஷவிஷயம், உபேக்ஷாவிஷய மென மூவகையாம். அவற்றுள்,

க. வனிதாதி விஷயமே பிரீதிவிஷயமாம்.

உ. வியாக்கிராதி விஷயமே துவேஷவிஷயமாம்.

ங. தெருவிற் கிடக்கும் துரும்பு உபேக்ஷாவிஷயமாம்.

அந்த விஷய மொன்றில் ஈச்சுர நிர்மிதமான ஏகாகாரமும், சீவ கற்பிதமான அநேகாகாரமுமானதற்குத் திருஷ்டாந்தம்.

ஈச்சுரனால் நிர்மிதமான இரத்தினாதி வஸ்துக்கள் ஓர் விதமாயிருக்கினும் போக்தாக்களின் புத்திகற்பித நானாவிதத்தால அவை தம்மைப் பெற்றவர்களுக்குப் பிரீதி விஷயமும், பெறாதவர்களுக்குத் துவேஷவிஷயமும், விரத்தனுக்கு உபேக்ஷாவிஷயமுமாம்.

இதனை விளக்குதற்பொருட்டு மற்றுமொரு திருஷ்டாந்தம் வருமாறு:—

ஒருஸ்திரீயின் மாம்சமயமான வடிவம் ஒரே விதமாயிருக்க அந்த ஸ்திரீ போக்துருக்களின் புத்தி கற்பிதாகாரத்தால் பிதாவுக்குப் புத்திரியென்றும், கணவனுக்கு மனைவியென்றும், மகனுக்கு மாதாவென்றும் வெகுவிதமானாற் போல, ஏகாநேகப் பிரகாரமாகிய விடய மெல்லாம் ஈசுவரநிர்மிதம், சீவகற்பிதமென இருவகையாம். ஈச்சுர

ர்மிதமான பிரபஞ்சம் பாதகமில்லாததும், குரு சாஸ்திர ரூபத்தால் மோக்ஷசாதனமும், தன்னால் நீக்கக்கூடாதது மாயிருத்தலால் அது அங்ஙனமே நிற்க, ஜீவகற்பிதப்பிர பஞ்சமே அநேகாகாரமாயிருத்தலால் மோக்ஷவிருப்புடையோரால் நீக்கத்தக்கதாம்.

## பிரபஞ்சத்துவயம்.

சாஸ்திரப்பிரபஞ்சம், அசாஸ்திரப்பிரபஞ்சமெனப் பிரபஞ்சத்துவய முண்டு. அவற்றுள்,

க. ஆத்மப்பிரஹ்மவிசாரமே **சாஸ்திரப்பிரபஞ்சமாம்.** அது ஞானசாதனங்களால் ஆத்மசாக்ஷாத்காரமானபின்னர் விடத்தக்கது.

உ. **அசாஸ்திரப் பிரபஞ்சம்** தீவிரமென்றும் மந்தமென்றும் இருவகைப்படும். அவற்றுள்,

(க) **தீவிரப்பிரபஞ்சமாவது** காமக்குரோதாதிகளாம்.

(உ) **மந்தப்பிரபஞ்சமாவது** மனோகற்பித சாதிகர்மாதிகளாம்.

இந்த அசாஸ்திரப்பிரபஞ்சம் ஆத்மசாக்ஷாத்காரத்துக்கு விரோதமாதலால் ஞானாப்பியாசத்துக்கு முன் விடத்தக்கது. இந்த உபயப்பிரபஞ்சமும் ஆத்மசாக்ஷாத்காரமானதற்குமேல் மோக்ஷசித்தியாய் முற்றும் விடத்தக்கன. கஸ்தூரியிருந்த கரண்டகத்தில் வாசனைமாத்திரம் மிஞ்சியிருப்பதுபோல் பிரபஞ்சாகாரத் தோற்றமென்னும் சிதாபாஸப்பிராந்திவாஸனைமாத்திரம் ஜீவன்முக்தனை போது விடாது விதேககைவல்யபரியந்தம் நீக்கக்கூடாததாயிருந்து பின் தானே நாசமாவதோடு தன்னின் வேறுயவற்றின் அறிவின்றிய சுவ அறிவாகிய சுத்தாநந்த

நித்திய பூர்ணத்துவமே நிர்வாணமா மென்பது இரகசி யார்த்தம்.

## உபாதித்திரயம்

அவச்சின்னோபாதி, பிரதிபிம்போபாதி, அத்தியா சோபாதியென உபாதித்திரய முண்டு. அவற்றுள்,

௧. பிரத்தியகாத்மாவிற்குச் சுழுத்திரூபாவித்தையே **அவச்சின்னோபாதியாம்.**

௨. அதன் காரியமான புத்தியில அவ்வாத்மா பிரதி பிம்பித்திருப்பதே **பிரதிபிம்போபாதியாம்.**

௩. அந்தப் புத்தியிலிருக்கும் சுகதுக்காதிகளை அவ் வாத்மா புசிப்பதுபோனறிருப்பதே **அத்தியாசோபாதி யாம்.**

## அத்தியாசம்

இப்பியில் வெள்ளியைப்போல அதுவல்லாததன்கண் அதனைக் காண்டல அத்தியாசலக்ஷணமாம். அந்த அத்தி யாசமே மித்தியாத்தியாசம், இதராத்தியாசம், இதரே தராத்தியாசம், சத்தியாத்தியாசமெனச் சதுர்விதமாம். அவற்றுள்,

௧. அக்கினிசம்பந்தத்தாற் சலத்துக்கு உஷ்ணமுண் டாவதுபோலப் பிரத்தியகாத்மசந்நிதியிற் கிரமத்தில் நடத்தல், பார்த்தல், நினைத்தல், அறிதலாகிய சத்திகளை யுடைய தூலசரீரமே **மித்தியாத்தியாசம்.**

௨. இந்திரியவர்க்கமே **இதராத்தியாசம்.**

௩. அந்தக்கரணமே **இதரேதராத்தியாசம்.**

௪. மூலாகங்காரமே **சத்தியாத்தியாசம்.**

அகமெனபதிற் பிரத்தியகாத்மவகங்காரமே இரச்சு சர்ப்ப மென்பதுபோல நிருபாதிகாத்தியாசம்.

அகம் கர்த்தா (யான் செய்பவன்) என்பதில் படிக மணிக்கொத்த அகங்காரதர்மவாத்மாவிற்கே சோபாதி காத்தியாசம்.

இச்சாம்யகமெ(யான் இச்சிக்கின்றேனெ)ன்பதில் அந்தக்கரணதர்மவாத்மாவிற்கே பிரவாகசலத்திற் படிந்த சூரியப்பிரதிபிம்பம்போலத் தத் (அதன்) தருமாத்தியாசம்.

குடும்பியானென்பதில் புத்திரகளத்திராதிகளுக்கு மாத்மாவிற்கும் ஒட்டத்திலிருப்போர் விவகாரம்போலச் சம்பந்தமாத்திராந்தியாசம்.

இவ்வத்தியாசத்தால் ஆத்மா நிர்விகார மென்பது பெற்றும்.

## பஞ்சாவஸ்தை.

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமெனப் பஞ்சாவஸ்தை யுண்டு. அவற்றுள்,

க. சாக்கிரம் ஸ்தூலபஞ்சபூதம், தசேந்திரியம், பிராணாதிவாயுபஞ்சகம், அந்தக்கரணசதுஷ்டய மென்னும் இருபத்துநான்கு தத்துவவடிவ ஸ்தூலசரீரத்திற் பொருந்தும். அதற்குச் சத்துவம் குணம்; அகாரம் அக்ஷரம்; விஷ்ணு அதிதேவதை; நேத்திரம் ஸ்தானம். * இதயகமல அஷ்டதளாதிகளில் விசுவசேனும், விராட்டென்னும் ஈச்சுரனும் ஏகமாய் வனிதாதி விஷயபோகந்த

* இருதயஸ்தானத்தில் எட்டிதட்கமல மிருக்கின்றது. அதன்மத்தியில் இரேகாவலயத்தைச் செய்து ஜீவாத்மவடிவம் ஜோதிரூபமாய் அணுமாத்திரமா யிருக்கின்றது. அதன் கண் யாவும் நிலைபெற்றனவாகின்றன. எல்லா

ளெல்லாவற்றையும் கரணங்களாகிய எல்லாச் சாமக்கிரி களாலும் அநுபவிப்பதே சாக்கிராவஸ்தை.

உ. சொப்பனம் இருபத்துநான்கு தத்துவங்களுள் ஸ்தூலபூதம் ஐந்தும் சித்தமும் புத்தியு மொழிந்த கலைசத்

மறிகின்றது, எல்லாஞ் செய்கின்றது. இவ்வெல்லாம் செய்யப்பட்டதாம், நான் கர்த்தா, நான் போக்தா, சுகி, துக்கி, குருடன், மூக்கரையன், செவிடன், ஊமை, இளைத்தவன், பருத்தவன் என்றிவ்வாறு சுதந்திரத்தன் மையாக விருக்கின்றான் ஜீவன்.

க. சுவேதவர்ணமான கிழக்குத்தளத்தில் இளைக் பாறுங்கால் பக்தியை முன்னிட்ட தர்மபுத்தி யுண்டாகின் றது.

உ. இரக்தவர்ணமான அக்கினேயதளத்தில் இளைப் பாறுங்கால் நித்திரை சோம்பற்புத்தி யுண்டாகின்றது.

ங. கிருஷ்ணவர்ணமான தக்ஷிணதளத்தில் இளைப் பாறுங்கால் துவேஷ கோபமதி யுண்டாகின்றது.

ச. நீலவர்ணமான நைருதிதளத்தில் இளைப்பாறுங் காலத்தில் பாபகர்மமும் ஹிம்ஸையு முண்டாகின்றன.

ரு. ஸ்படிகவர்ண மேற்குத்தளத்தில் இளைப்பாறுங் கால் கிரீடையிலும் விநோதத்திலும் புத்தி யுண்டாகின் றது.

சா. மாணிக்கவர்ண வாயுதளத்தில் இளைப்பாறுங் கால் நடத்தல் சஞ்சலம் வைராக்கிய மென்பவற்றில் புத்தி யுண்டாகின்றது.

எ. பீதவர்ண வடக்குத்தளத்தில இளைப்பாறுங்கால் சுக சிங்கார மதி யுண்டாகின்றது.

அ. வைடூரியவர்ண ஈசானதளத்தில் இளைப்பாறுங் கால் கிருபைமதி யுண்டாகின்றது.

துவவடிவாய்ச் சூக்ஷ்மதனுவி லிருப்பது. அதற்கு இரஜசு குணம்; உகாரம் அக்ஷரம்; பிரஹ்மா அதிதேவதை; கண்டம் ஸ்தானம். இதயகமலகர்ணிகையின் கதிகளில் தை

சந்திசந்திகளில் மதியிருக்குங்கால் வாதபித்த சிலேட்டும மகாவியாதியின் பிரகோப முண்டாகின்றது.

மத்தியிலிருக்கும்போது எல்லா மறிகிறான், பாடுகிறான், ஆடுகிறான்; பேசுகிறான், ஆநந்திக்கிறான்.

நேத்திரசிரம முண்டாகும்போது அச்சிரமத்தை நீக்குதற்பொருட்டு முதல் இரேகாவலயம் செய்து நடுவில் மூழ்குகின்றான்.

அம்முதல்ரேகை விச்சிப்புஷ்ப வர்ணமாம். அப்போது நித்திராவஸ்தை யுண்டாகின்றது. நித்திராவஸ்தையினிடையில் சொப்பனவஸ்தை யுண்டாகின்றது. சொப்பனவஸ்தையினிடையில் பார்க்கப்பட்டது கேட்கப்பட்டது அநுமானம் சம்பவம் வார்த்தை யென்றால் முதலிய கற்பனையைச் செய்கிறான்.

அப்போது அதிக சிரம முண்டாகின்றது. சிரமத்தை நீக்குதற்பொருட்டு இரண்டாவது இரேகாவலயத்தைச் செய்து மத்தியில் மூழ்குகின்றான்.

அவ்விரண்டாவது ரேகை இந்திரகோபவர்ணமாம். அப்போது சுழுத்தியவஸ்தை யுண்டாகின்றது. சுழுத்தியில் கேவலம் பரமேசுவர சம்பந்தமுள்ள புத்தி யுண்டாகின்றது. நித்தியபோத சொரூப மாகின்றான். பின் பரமேசுவர சொரூபமாகப் பிராப்தி (அடைவு) உண்டாகின்றது. மூன்றாவது இரேகாவலயஞ் செய்து மத்தியில் மூழ்குகின்றான்.

அம்மூன்றாவது இரேகை பதுமராகவர்ணம். அப்போது துரியாவஸ்தை யுண்டாகின்றது. துரியத்தில் கேவலம் பரமாத்மசம்பந்தமுடையவ னாகின்றான். நித்தி

ஜசசீவனும், சூத்திராத்மா வென்னும் ஈச்சுரனும் ஏகமாய்ச் சாக்கிரவாசனைவிஷயபோகத்தை மனமென்னுங் கரணத்தால் அநுபவிப்பதே சொப்பனவவஸ்தை.

௩. பறந்துமேயப்பட்ட குஞ்சுகளெல்லாவற்றையுந் தன்பக்ஷத்துள் அடக்கிக்கொண்டு நித்திரைசெய்யும் கோழியைப்போலக் காரியங்களெல்லாவற்றையும் உட்கொண்டு அவற்றின் சம்ஸ்காரத்துடன் கூடியதாய், ஆத்மாசிரயத்தில் நிரவஸ்தையா யிருக்கப்பட்ட பிரகிருதிரூபமான காரணதேகத்தி லிருப்பது சுழுத்தி. அதற்குத் தமசுகுணம்; மகாரம் அக்ஷரம்; உருத்திரன் அதிதேவதை; இதயம் ஸ்தானம். அக்கமலகர்ணிகையின் மத்தியகதிகளில் பிராஞ்ஞ னென்னும் சீவனும், அந்தரியாமி யென்னும் ஈச்சுரனும் ஏகமாய்ப் பிரஹ்மாநந்த விஷயபோகத்தை மாயாவிருத்தி யென்னுஞ் சூக்ஷ்மகரணத்தால் அநுபவிப்பதே சுழுத்தியவஸ்தை.

---

போதசொரூப மாகின்றான். அப்போது மெல்ல மெல்ல தைரியத்தைக் கொண்ட புத்தியினால் உபரதியடைகின்றான். மனமாத ஆத்மாவினிடத்துச் செவ்வையாய் நிற்பதாக்கி எதனையும் சிந்தியான். அப்போது பிராணபானன்களின் ஐக்கியத்தைச் செய்து எல்லா ஜகத்தையும் ஆத்மவடிவமாக இலக்ஷியம் வைக்கின்றான். அப்போது துரியாதீதாவஸ்தையாம். அப்போது எல்லோரது ஆநந்த சொரூபமாகின்றான். துவந்துவாதீத (இருமைக்கப்பாற்பட்டவ) னாகின்றான். எதுவரையில் தேகதாரணை யிருக்கின்றதோ அதுவரையில் நிற்கின்றான். பின் பரமாத்ம சொரூபமாக அடைவுண்டாகின்றது. இவ்விதத்தால் மோக்ஷமுண்டாகின்றது. இவ்வாறு இருதயகமலத்தின் லக்ஷணத்தையும் அதில் ஜீவன் அடையும் கதியினையும் சாமவேததீயானபிந்தூபநிஷத்தானது கூறுகின்றது.

இந்தச் சாக்கிராதி அவஸ்தைகளுக்கு அவஸ்தாத்திரயம், தாமத்திரயம், புரத்திரயம், ஸ்தானத்திரய மெனப் பரியாயநாமங்க ளுண்டு.

௪. அந்தச் சாக்கிரத்தில் அக்கமலமழிந்து, மனோ வியாபாரமழிந்து, பரமாத்மசிந்தனைசெய்வதே துரியாவஸ்தை.

௫. அந்தத் துரியாவஸ்தையிலுள்ள ஆத்மாவினிடத்தில் மனமொடுங்கியிருப்பதே துரியாதீதாவஸ்தை.

இவ்வவஸ்தைகளில் ஸ்தாவரங்களுக்குச் சுழுத்தியும், பசுக்களுக்குச் சொப்பனம் சுழுத்தி யிரண்டும், தேவர்களுக்குச் சாக்கிரமும், மனிதருக்கு அவஸ்தாத்திரயமும் உன்மத்தருக்குத் துரியமும், யோகிகளுக்குத் துரியாதீதமுமாம். அவற்றுள், முதல் மூன்றவஸ்தையும் மனிதருக்குத் தம்மிற்றாமே தோன்றிப் பந்தமாம். மற்றைய விரண்டவஸ்தையும் யோகாப்பியாசபலத்தா லுண்டாய் மோக்ஷசாதனமாம்.

## அவஸ்தாமித்தியாத்வம்.

அவ்வவஸ்தைகளுள், ஜாக்கிராவஸ்தையும் அதன் விஷயங்களும் சொப்பனகாலத்திலும், சொப்பனவஸ்தையும் அதன் விஷயங்களும் ஜாக்கிரகாலத்திலும், இவ்விரண்டவஸ்தைகளும் இவ்விரண்டின் விஷயங்களும் சுழுத்திகாலத்திலு மில்லாதிருத்தலாலும், காலதேச வஸ்து நியமத்தி யில்லாமையாலும், அதிகாரி பேதத்தால் பலவகையாகித் தோற்றுதலாலும், அபிசந்தி (சேர்க்கைப்) பலாநுகுணமாகிக் காரியவைசித்திரியம் தோற்றுதலாலும், திரிகாலாபாத்தியம் (மூன்று காலத்தும் வாதிக்கப்படாதது) அல்லாததாய்ச் சத்தியமல்ல வெனப்பட்டுப் பிரஹ்ம ஞானத்தினால் மூலத்தோடழிவதனாலும் மித்தை யென்றறியப்படும்.

இவ்வவஸ்தைகளெல்லாவற்றுள்ளும் அநுசூதனும், அவிநாசியும், சாக்ஷியும், அசங்கமும், இவற்றை இடைவிடாதறிகின்ற நிஜதுரியனுமாகிய ஆத்மா வொருவனே சத்திய மென்றறிவது.

## மித்தியாத்துவ நிருக்தி.

வஸ்துகதியாகப் பரமார்த்தவிசாரத்தினால் மாயையென்பது இல்லாததாய்த் தானில்லாதவிடத்துத் தோற்றுவதே மித்தை. பிரஹ்மஞானமாத்திரத்தா லழிந்துபோவதே மித்தை. காலத்திரயத்திலும் நிஷேதிக்கப்படத்தக்கதே மித்தை. சத்தியத்திற்கு வேறாய்த் தோற்றுவதே மித்தை.

இந்த மித்தைரூபமான மாயை அதன் காரியமான பிரபஞ்சம் அதன்கணுள்ள மித்தியாத்துவம் அதன் ஞானமென்று மெல்லாம் சொரூபமாக மித்தையாயிருக்கும். பிரஹ்மத்திற்கு வேறாய மாயை முற்றும் சூனியமாய்ப் பிரஹ்மஞானபரியந்தம் சொப்பனயானை முதலியவற்றைப் போலத் தோற்றி விசாரிக்கப் பொய் யென்று நிச்சயிக்கப்படுவதே அதன் மித்தியாத்வமா மென்று முமுக்ஷுக்கள் கூறுவர்.

## ஆத்மசித்தி.

அந்த ஜாக்கிரசொப்பனங்களில் அறிவுண்டென்பது பிரசித்தம். சுழுத்தியில் அறிவுண்டென்பதற்குச் சுழுத்தியினின் றெழுந்தகாலத்து நான் ஒன்றுமறியாமல் சுகமாய்த் தூங்கினே னென்னும் நினைவு அநுபவமின்றி யுண்டாகாது என்னும் அர்த்தாபத்திப்பிரமாணத்தினால் சுழுத்தியில் ஆத்மா சகல கடாதிகளும் தோற்றாமையால் அவித்தையினையும், அவித்தியாசூக்ஷ்மவிருத்திகளின் கதி

* இம்மித்தியாத்வ நிருக்தி 49 வது பக்கத்தின் முதலில் இருக்கவேண்டியது.

களில் அசைகின்ற மரத்தினிலைகளினிடையில் தோற்றும் சந்திரிகாம்சங்களைப்போலப் பிரகாசிக்கும் நிஜசொரூபமான ஆநந்தாம்சங்களையும் வேறு கரணங்களின் அபேக்ஷையின்றி அநுபவித்துக்கொண்டிருப்பதால் • உண்டென்றே சித்திக்கின்றது.

யான் ஒன்றும் தெரியாது சுகமாய்த் தூங்கினேன் என்பதற்குக் கிரமமாய்ச் சகலவிஷய ஞான மில்லாமலும், சம்சாரதுக்கநிவிருத்தி யில்லாமலும், துக்காநுபவந் தோற்றாமலும் எப்போதும் சுழுத்தியில் அவித்தைக்குச் சாக்ஷிகளான ஆநந்தமய ஆத்மா வுண்டு அங்ஙன மிருக்க ஏன் அறியப்படவில்லை யெனின், ஒருவஸ்துவை யெடுக்கக் கூபத்திலமிழ்ந்தினவனுக்கு அவ்வஸ்து உண்டெல்லையென்பதை அங்கிருந்துவெளியே புறப்பட்டாலல்லது சொல்லக் கூடாததுபோலச் சுழுத்தியில் அறிவிருந்தாலும், காலகர்மவசத்தால் எழுந்து, ஜீணையாகிய கரணங்களோடு கூடினாலல்லது தானறிந்ததைச் சொல்லுதற்குக் கூடாது. ஆகையால் சர்வாவஸ்தைக்குஞ் சாக்ஷியாகிய ஆத்மாவிற்கே சச்சிதானந்த சுவயம்பிரகாசரூபத்துவம் அநுபவசித்தமாம்.

## பஞ்சகோசவிவேகம்.

அந்நமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயமெனப் பஞ்சகோச முண்டு. அவற்றுள்,

க. பிதாமாதாக்களின் சுக்கில சோணிதத்தாலாகிய தூலசரீரமே அந்நமயகோசமாம்.

உ. சூக்ஷ்மதனுவில் பிராணவாயு கர்மேந்திரியங்கள் கூடிப் பிராணமயகோசமாம்.

ங. மனமும் ஞானேந்திரியமுங்கூடி மனோமய கோசமாம்.

ச. பிரத்தியகாத்மசைதந்நியச்சாயையுடனே லோ காந்தகுந்தம்போ லிருக்கும் அகங்காரமும், ஞானேந்திரி யங்களுங்கூடி விஞ்ஞானமயகோசமாம்.

ரு. காரணதேகரூபமான அவித்தையும், சாக்கிரத் தில் வனிதாதி விஷயங்களைக் காண்டல், அடைதல், அநு பவித்த லென்பவற்றால் கிரமத்திலுண்டாகும் பிரியம், மோதம், பிரமோதமென்னுந் திரிவித சுகவிருத்தியுங்கூடி ஆநந்தமயகோசமாம்.

## அகங்காரத்தின் ஆத்மத்துவகண்டநம்.

விஞ்ஞானமயகோசரூபமான அகங்காரத்தினையே ஆத்மாநாத்மவிவேகசூனியர் அகமென்னுந் தம்மநுபவத் தால் ஆத்மா வென்பர். நீலோற்பல மென்னுமிடத்தில் நீல குண விசேஷணத்துடனே விசேஷியமான வுற்பலமும் அறியப்படுவதுபோலக் கிருசோஹம் (மெலிந்தவன்யான்) என்னுமிடத்தில் ஸ்தூலசரீரத்துடனும், திருஷ்டாஹம் (காண்பவன்யான்) என்னுமிடத்தில் நேத்திரேந்திரியத் துடனும், ஸ்மர்த்தாஹம் (நினைக்கின்றவன் யான்) என்னுமி டத்தில் ஸ்மரணமென்னும் அந்தக்கரணவிருத்தியுடனும் கூடி பிரத்தியகாத்மாவுக்கு விஷயமாதலாலும், அகங்காரத் திற்குச் சாசுநியாகிய அஹங்கார்யஹம் (அகங்காரியான்) என் னுமிடத்தில் அகங்காரத்தோடுகூடி அகமென்பதில் அகமா கார அந்தக்கரணவிருத்தி விசிஷ்டனுய்ப் பிரத்தியபிஞ் ஞையி லறிதலாலும், விசேஷணம்ச மெல்லாம் ஜடமா யிருத்தலாலும் சேதனனுன ஆத்மாவிற்கு இவ்வாறு வில க்ஷணமாயிருக்க அகங்காரமே ஆத்மாவென்பது அசித்த மாம்.

## அகங்காரசைதன்னிய விவேகம்.

ஆனால் அசேதனுகங்காரம் பாகியாப்பியந்தர விஷ யங்களை யறிவதெப்படியெனின், காந்தக்கல்லின் சன்னிதா

னத்தில் ஊசி சேஷ்டிப்பது போலும், வெயிலிற் பிடித்த கண்ணாடியினால் உள்மனையிருள் நீங்குவதுபோலும் பிரத்தியகாத்மசந்நிதானத்தில் அச்சைதந்நியப் பிரதிபிம்பந் தன்னிடத்தி லிருக்கப்பெறுதலால் அச்சடமான அகங்காரமே பாகியவிஷய வறிவுடன்கூடிச் சாக்கிரசொப்பனங்களில் சஞ்சரித்துச் சுழுத்தியில் அடங்கும்.

அவ்வாறாதற்கு உபமானம்:— அகங்காரமொடுங்கும் அவஸ்தையாகிய சுழுத்தியிலுள்ள அவித்தையென்னும் உள்மனைச்சுவரையும், நித்திரையென்னுங் கபாடத்தையும், நிஷ்களரூபமான தன்னையுந் தானே பிரகாசிப்பிப்பதே பிரத்தியகாத்மசோதி யெனப்படும். பின் காலகர்மாதி சமீரணப் பிரேரகத்துவத்தால் தாமசமான நித்திராகபாடந்திறக்கப் பின் அந்த அவித்தையின் முதலவஸ்தையாகிய மகத்தத்துவமென்னும் வாயிற்படியிலிருந்த சாத்துவிகமான அகங்கார மென்னும் படிகமணி, அந்தப் பிரத்தியகாத்மப் பிரதீபப் பிரதிபிம்பத்தைப் பெற்று முன்போலச் சீவனெனப்பட்டுச் சொப்பனமான நடுமனையை விளக்கி, பின் இந்திரியங்களென்னும் பலகணிவாயில்களாற் புறப்பட்டுச் சாக்கிராவஸ்தையான பாகியமுற்றத்தையும் பிரகாசிப்பிக்கும். பின் காலகர்மசமீரணப் பிரேரகத்துவத்தால் நித்திராகபாட மூடினவுடனே, அந்த அகங்காரமென்னும் படிகமணி தனக்குக் காரணமான அவித்தையு ளடங்கலால் சாக்கிரசொப்பனமென்னும் பாகியமுற்றம் நடுமனை யிரண்டும் அந்தகாரமயமாக அவ்வகங்காரமணியிற் பிரதிபிம்பித்திருந்த சிற்பிரகாசம் தனக்கு மூலபூதமான பிரத்தியகாத்மப் பிரதீபத்தில் ஐக்கியமாம்.

இவ்வாற்றான் சாக்கிராதி அவஸ்தாத்திரயங்களில் அகங்காரத்தின் பாவாபாவங்களை அவிகாரனாய் அறியுமாத்மா வொருவன் வேறிருத்தலால் அகம்பாவம் ஆத்மசொரூபமல்ல வென்பது பெறப்பட்டது.

## அகங்காரசம்பந்தம்

பாகிய விஷயத்துக்கு ஆத்மாவாய், உள்ளில் பிரத்தியகாத்துமாவிற்கு வேத்திய மாதலால், சடாசடரூபமாய்த் தர்ப்பணத்தின் பின்புறமும், முன்புறமும்போலப் பிரகாசாப்பிரகாசவடிவினதான அகங்காரத்துக்குத் தேகம், சிற்சாயை, பிரத்தியகாத்மா வென்னும் இம்மூன்றுடனும் சம்பந்தமுளது. அவற்றுள்,

க. அகம் ஜ்வராமி (நான்தபிக்கிறேன்) என்பதனால் சிற்பிரதிபிம்ப யுக்தமான அகங்கார சம்பந்தத்தால் தூலதேகத்துக்கும் உஷ்ணாதிகளை யறிதலே கர்மஜநிதமாகிய கர்மஜ மெனப்படும்.

உ. அகஞ்சானாமி (யானறிகிறேன்) என்பதனால் சிற்சாயைக்கும் அகங்காரத்திற்குமுள்ள சம்பந்தமே சிருஷ்டி தொடங்கி மோக்ஷபரியந்தம் கெடாதிருத்தலால் சகஜ மெனப்படும்.

ங. அகங்கரோமியெ (யான்செய்கிறேனெ) ன்பதனால் அசங்கனான பிரத்தியகாத்மாவிற்கும் அகங்காரத்திற்குமுள்ள சம்பந்தமே பிராந்திஜந்நிய மெனப்படும்.

## பிம்பப்பிரதிபிம்பபாவம்.

நிர்க்குண அகண்ட சின்மாத்திரப்பிரஹ்ம மென்னும் பரசிவமே பிம்பம். மூலவடிவமாயையே கண்ணாடி. சகுணப்பிரஹ்ம மென்னும் ஈசுவரலிங்கமே பிரதிபிம்பம்.

மற்றும் அப்பரசிவனே பிம்பம். அவித்தையே கண்ணாடி. ஜீவலிங்கமே பிரதிபிம்பம்.

மற்றும் அவ்வீசுவரனே பிம்பம். குணசாமியமென்

னும் மாயோபாதியே கண்ணாடி. பிரஹ்மாண்டப் பிரபஞ்சமே பிரதிபிம்பம்.

ஜீவலிங்கமே பிம்பம். அந்தக்கரணமே கண்ணாடி. சுகாதிவிஷயங்களே பிரதிபிம்பமென்று தெளி. ஜீவசாக்ஷி ஈசுவரசாக்ஷிகளே நிருபாதிக மூலபிம்பங்களாம். அவர்களுள் ஐக்கியம் பொருத்தமுடையதாகும்.

## நிராகாரத்தின் பிரதிபிம்பம்.

உலகநியாய விருத்தமாய் நிராகாரவஸ்து எதில் பிரதிபலித்துப் பிரதிபிம்பமாமெனின், ஆகாயம் உருவமில்லாததாயிருந்து ஜலத்தில் பிரதிபிம்பிப்பதுபோல வேறு பிரதிபிம்பநியாயமும் அரியதமாய்ச் சித்து பிரதிபிம்பித்தலிலும் விருத்தமாகாது.

## பிரதிபிம்பத்தின் பிரதிபிம்பம்.

அந்தப் பிம்பம் பிரதிபிம்பிப்பது நியாய சம்மதமானாலும் பிரதிபிம்பமான ஈசுவரன் ஜீவத்துவடிவமாய்ப் பிரதிபிம்பிப்பது எப்படியெனின், ஒருகண்ணாடியில் பிரதிபிம்பித்துக் காணப்படும் கண்ணாடியினுட் சுவர், விளக்கு, சூரியன் முதலியன மற்றோர் கண்ணாடியிற் பிரதிபிம்பிக்கின்றன. யாவும் பான (தோற்ற)மாத்திர மென்னுமிடத்து எவ்வாறாயினும் விரோதமில்லாதிருக்கும்.

## பிம்பசாம்மியபங்கம்.

நிஷ்களத்தினைச் சகளசிதாபாஸ னென்பது எப்படியெனின், சின்னமில்லாத முகம் சின்னபட்ட கண்ணாடியில் பிரதிபிம்பித்துச் சின்னமுடையதாகத் தோற்றுவதுபோல உபாதிகளாகிய மாயையவித்தைகளின் களங்கத்தோடுகூடிய தன்மையே சிதாபாஸாதிகாரணமாவதாய்ப் பிரதிபிம்பமாவதெல்லாம் பிம்பசமானமாயிருக்குமென்பது நிராகரிக்கப்பட்டதாம்.

## உபாதிசாமியம்.

அந்தக்கரணத்தோடு பிரதிபிம்பத்திற்குச் சமவியதத்துவ முண்டு. அதாவது உபாதியாகிய கண்ணாடியிருந்தா லிருந்து, கண்ணாடி தூஷிக்கப்பட்டதானால் தூஷிக்கப்பட்டதாய்க் கண்ணாடி அசைந்தால் அசைந்து கண்ணாடி நசித்தபோது தானும் நசித்துப் பிம்பத்துள் ஐக்கியமாதலால் பிரதிபிம்பமும் அதன் உபாதியும் சமவியதமாம். அந்தக்கரணமென்னும் அவித்தியோபாதி காமக்குரோதாதி மலத்தோடுகூடியதான ஜீவலிங்கஸ்வரூபம் களங்கமுடையதாய் அந்தக்கரணம் மைத்திரியாதி பரிகற்பிதத்தன்மையால் வைராக்கியவிவேகாதி பரிசுத்தமாகும்போது அச்சீவலிங்க சொரூபம் சிவலிங்கம்போல் நிஷ்களங்கமாகி அந்தக்கரணம் நாசமாகும்போது ஜீவத்துவத்திற்கு நாசமுண்டாகச் சிவலிங்கத்தில் ஐக்கியமா மென்பதே நிச்சயக்கப்பட்டதாகும்.

## உபாதேயபின்னத்துவம்.

அச்சைதன்னிய மொன்றேயாய் அதன் சந்நிதிமாத்திரத்தில் மாயாதியுபாதிகள் சேஷ்டிக்கின்றன. சைதன்னியமென்பது சர்வதிக்காலவியாபகமாயிருக்க உபாதிகாரியம் எல்லாவற்றின் வேறாயும் எல்லாக்காலத்து மிருப்பதாயு மிருப்பதெப்படி யெனின், ஒன்றாகிய அகண்டாகாசத்தில் கண்டங்களான வீணைவேணு மிருதங்க முதலிய வாத்தியங்களுள் பின்னங்களாகிய சப்தவைசித்திரியங்களாயிருத்தலால் விகிருதமான ஆகாசத்திற்கு வீணாகாசம் வேணுவாகாசம் மிருதங்காகாசம் என்று பேதம் கற்பிப்பது போல் அவ்வவ்வந்தக்கரணாதி சரிரோபாதிகளால் அந்தந்த ஜீவாதிசைதன்னிய பின்னத்துவமும் பந்தமோக்ஷபோதமும் வியவகார சித்தமாயிருக்கும்.

## அநாதிஷட்கம்.

சுத்தசித்தென்னும் பரசிவம், ஜகத்காரணனான பரமேசுவரன், சம்ஸாரியாகிய ஜீவன், சம்ஸாரத்திற்கு மூலமான அஞ்ஞானம், அவற்றின் சம்பந்தம், அவற்றின் பேதம் என்னும் ஆறும் அநாதியாய்ச் சித்தித்துள்ளன. இவற்றிற்குக் காரணமில்லாதிருக்க இவற்றோடுகூடிய பிரபஞ்சத்தினைப் பரமேசுவரன் எப்படிச் சிருஷ்டித்தானெனின், முற்கூறிப் அநாதி பதார்த்தங்களெல்லாம் முயற்கோடுமுதலியவற்றினைப் போலத் துச்சமாம். ஜீவகற்பிதமான சுத்திரஜதத்தினைப்போல அநிர்வசனீயமான ஆகாயாதிப் பிரபஞ்சங்கள் பிறந்தன. பரமேசுவரகற்பிதத்துவமும் பாதிதமாகும்,

## ஜீவசப்தாவஸ்தை.

அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷஞானம், அபரோக்ஷஞானம், சோகநிவிருத்தி, நிரங்குசத்திருப்தி யென ஜீவசப்தாவஸ்தை யுண்டு. அவற்றுள்,

க. சமுசாரப்பற்றுள்ளவனான சிதாபாசஜீவன் சுருதிவிசாரத்துக்குமுன் தன் நிஜரூபமான சுவயம்பிரகாசப்பிரத்தியகாத்மாவை அறியாதிருப்பதே **அஞ்ஞான**மாம்.

உ. பின் ஒவ்வொருவேளை சிதாத்மப்பிரசங்கம் வந்தவிடத்தில் "பிரத்தியகாத்மா இல்லை, அஃதிருந்தால தோன்றாது" வென்னும் இவ்விருவகையான மறைப்பே அவ்வஞ்ஞான காரியமான **ஆவரண**மாம்.

ங. பின் தானே கர்மத்தைச்செய்பவன், தானே கர்மபலத்தைப் புசிப்பவன் என்று எண்ணுவதே **விக்ஷேப**மாம்.

ச. பின் ஆத்மாவின் இருப்பைச்சொல்லுஞ் சுருதி குருவாக்கிய விசுவாசத்தால் பிரத்தியகாத்மா உண்டு

என்று தெளிவதே முதலாவதான அசத்தாவரணத்தை நிவர்த்திக்கும் (சத்தையின் மறைப்பைக்கெடுக்கும்,) பரோக்ஷஞானமாம்.

ரு. பின் நீயே பிரஹ்மமென்று சொல்லும் வேத வாக்கியவிசாரப்பிரவாகவசத்தால் பிரத்தியகாத்மா நானென்றறிவதே இரண்டாவதாகிய அபானுவரணத்தை நிவர்த்திக்கும் (விளக்கத்தின் மறைப்பைக் கெடுக்கும்) அபரோக்ஷஞானமாம்.

சா. பிரத்தியகாதமா சாக்ஷாத்காரமானதற்குமேல் நான் கர்மகர்த்திரு (நான் கர்மத்தைச் செய்வோன்) கர்மபலபோக்திருவெ (கர்மபலத்தைப்புசிப்பவனெ) ன்னுஞ் ஜீவத்துவரூப துக்கத்தின் பரித்தியாகமே சோகநிவிருத்தியாம்.

எ. செய்யத்தக்க கிருத்தியமெல்லாஞ் செய்யப்பட்டன வென்னுஞ் சகச சந்தோஷ முண்டாயிருப்பதே நிரங்குசத்திருப்தியாம்.

சோகநிவிருத்தி நிரங்குசத்திருப்தியென்னும் இரண்டவஸ்தையும் அபரோக்ஷஞானபலமாம்.

## சப்தாவஸ்தாஸமன்வயம்.

சுயம்பிரகாச சித்ரூபனான ஆத்மாவிற்கு நித்தியாபரோக்ஷத்துவமிருத்தலால் அதனிடத்து அஞ்ஞானாதி சபதாவஸ்தை எங்ஙனமாமெனின், (திருஷ்டாந்தம்) பத்துப புருஷரொன்றாகக்கூடி நதியைக் கடந்துபோய்த் தம்மை யெண்ணுஞ்சமயத்தில், அவருள் ஒன்பது புருஷரை யெதிரிட்டெண்ணுவா னொருபுருஷன்,

க. தன்னைத் தசம னென்றறியாததே அஞ்ஞானம்.

உ. பின்பு தசமனில்லை, அவனிருந்தால் தோன்றானெ வென்னும் இருவகைப் பிராந்தியே அஞ்ஞானகாரியமான ஆவரணம்.

௩. பின் தசமன் நதியில் இறந்தா னென்பதே விக்ஷேபம்.

௪. பின் வேறொருு ஆப்தவசனத்தால் தசமனைச் சுவர்க்கம்போ லுண்டென்றறிவதே அந்தத் தசமனில்லை யென்னும் முதல் ஆவரணத்துக்கு விரோதியான பரோக்ஷ ஞானமாம்.

௫. பின் ஒன்பது புருஷருடன் கூட்டிக் கிரமமா யெண்ணி நீயே தசமனென்று தெளிவிக்கத் தானே தன்னைச் சாக்ஷாத்காரமாக அறிவதே தசமன் றோற்றவில்லை யென்னும் இரண்டா மாவரணத்துக்கு விரோதியான அபரோக்ஷஞானமாம்.

௬. பின் தசமன் இறந்தான் என்னும் துக்கத்தை விடுவதே சோகநிவிருத்தியாம்.

௭. பின் சிசஸ்திதியில் சுகமாயிருப்பதே நிரங்குசத் திருப்தி.

இவ்வாற்றாற் பொருந்து மென்க.

## வேதவாக்கியத்திரயம்.

விதிவாக்கியம், நிஷேதவாக்கியம், சித்தார்த்தபோதக வாக்கியமெனத் திரிவித மூண்டு. அவற்றுள்,

௧. யாகாதிகளைச் செய்யவேண்டு மென்பதே விதி வாக்கியமாம்.

௨. மதுபானாதிகளைச் செய்யக்கூடா தென்பதே நிஷேதவாக்கியமாம்.

௩. விதி நிஷேத சூனியமாய்ப் பிரஹ்மாத்மஜக் கியவடிவப் பொருள்மாத்திரத்தைப் போதிப்பதே சித்தார்த்தபோதக வாக்கியமாம்.

## மகாவாக்கியம்.

அச்சித்தார்த்தபோதகவாக்கியம் இருக்கு, எஜுசு, சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களிலும் கிரமத்

தில் பிரதிபாதிக்கப்பட்ட பிரஞ்ஞானம் பிரஹ்மம், அகம் பிரஹ்மாஸ்மி, தத்துவமஸி, அயமாத்மா பிரஹ்மமென நான்கு மகாவாக்கியங்க ளுண்டு. அவற்றுள்,

௧. நித்திய சுத்த பூர்ண ஞானமே பிரஞ்ஞானம்; இதுவே பிரஹ்மமென்னும் அர்த்தமுள்ளது பிரஞ்ஞானம் பிரஹ்ம மென்னும் மகாவாக்கியம்.

௨. யானே பிரஹ்மம் என்னும் அர்த்தமுள்ளது அகம் பிரஹ்மாஸ்மி யென்னும் மகாவாக்கியம்.

௩. அதுவே (பிரஹ்மமே) நீ என்னும் அர்த்தமுள்ளது தத்துவமஸி யென்னும் மகாவாக்கியம்.

௪. இவ்வாத்மாவே பிரஹ்மமென்னும் அர்த்தமுள்ளது அயமாத்மா பிரஹ்ம மென்னும் மகாவாக்கியம்.

இந்நான்கு மகாவாக்கியங்களும் சர்வவேதாந்த முக்கியமாம். அஃதெப்படியெனின் கர்மகாண்டத்தில் ஸ்ரீ ருத்திர அத்தியாயமே முக்கியம், அதனுள் சிவபஞ்சாக்ஷரி மகாமந்திரமே முக்கியமென்பதுபோலப் பிரஹ்மகாண்டத்தில் உபநிஷத்திலுள்ள பிரஹ்மபோதக வாக்கியங்களே முக்கியம். அவற்றுள் மகாவாக்கிய ஸஹஸ்ர ரத்நாவளியே முக்கியம். அவற்றுள் மகாவாக்கிய சதுஷ்டயமே முக்கியமாயிருத்தலால் இச்சித்தார்த்தபோதகங்களான நான்கு வாக்கியங்களும் முமுக்ஷுக்களுக்குத் தம்மதிகாரத்திற் கநுரூபமாகப் படும். படவே அர்த்தவிசாரத்திருப்பவர்களாய் மனனாதிகள் செய்வர். இத்தன்மைய இந்நான்குவாக்கியங்களுள் தத்துவமஸி யென்னும் மகாவாக்கியம் எல்லாவற்றினுமுக்கியமா யிருப்பதோடு "वेदानां सामवेदोस्मि வேதங்களுள் சாமவேதம் யான்" என்னும் பிரமாணத்தால் ஈசுவரனது வேதவிபூதியுள் முக்கியமான சாமவேதசிகையே சாந்தோக்கியோபநிஷத்தா யிருப்பது. அதனுள் ஆருவது அத்தியாயம் சகலமும் தத்துவோபதேசமாகுதலால் அதனுள் சுவேதகேதுவென்னும் யோக்கியாதி

காரிக்குச் சர்வசம்சயநிவிருத்திபூர்வக ஞானதிடத்தன்மை சித்தித்தற்குத் தத்துவமஸி யென்னும் மகாவாக்கியார்த்தம் ஒன்பதுமுறை உபதேசிக்கப்பட்டிருத்தலால் இதற்கநுகூலமாய்ச் சர்வவேதங்களும் உபதேசித்தல். இதுவே முக்கியோபதேசமென்று அநுக்கிரகித்தலாகும். ஆனால் தத் துவம் அஸி யென்னும் பதமூன்றற்கும் கிரமத்தில் சிவனும் ஜீவனும் அர்த்தமாகச் சிவஜீவலிங்காங்க சங்கோபாதிபங்க சின்மாத்திர கைவல்யமென்னும் சித்தாந்தார்த்தமே நிச்சயிப்பதாகும்.

## வாக்கியார்த்த சம்பந்தத்திரயம்.

பின் பதார்த்த வாக்கியார்த்தங்களுக்குச் உ *சாமானாதிகரணியசம்பந்தம், விசேஷணாவிசேஷிய சம்பந்தம், லக்ஷிய லக்ஷணசம்பந்தமெனக் கிரமத்தில் சம்பந்தத்திரயமுண்டு.

## தத்துவம்பத வாச்சியார்த்தம்.

பதங்களுக்கு வாச்சியார்த்தம், லக்ஷியார்த்தமென அர்த்தத்துவய முண்டு. அவற்றுள் முற்கூறிய தூலாதி தனுத்திரய சமஷ்டிரூபரான விராட்புருஷன், இரணியகர்ப்பன், அந்தரியாமியென்னும் ஈச்சுரர்களையும், பிரஹ்மத்தையுங் கூட்டித் தப்தாயபிண்டம்போல ஏகாகாரமாகக் காண்பது தத்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும், முக்கியார்த்தமென்றும், அபிதாநார்த்தமென்றும், சக்கியார்த்தமென்றும் சொல்லப்படும். தனுத்திரய வியஷ்டிரூபமான விசுவ தைஜச பிராஞ்ஞ சீவனையும், பிரத்தியகாத்மாவையுங் கூட்டித் தப்தாயபிண்டம்போல ஏகாகாரமாகக் காண்பதே

---

* ஒருசிலைக்களத்திருத்தற்றன்மைச் சம்பந்தத்தினைச் சாமானாதிகரணியசம்பந்த மென்பர். விசேஷணம்=அடை. விசேஷியம்=அடையடுக்கற்பாலது. இலக்ஷியம்=குறிக்கப்படுவது. இலக்ஷணம்=குறி.

துவம்பதத்துக்கு வாச்சியார்த்தமென்றும், முக்கியார்த்த மென்றும், அபிதார்த்தமென்று சக்கியார்த்த மென்றும சொல்லப்படும்.

## தத் துவம் பத லக்ஷியார்த்தம்.

விராட் புருஷாதிகளின் வேறுபட்ட நிருபாதிகப் பிரஹ்மமே தத்பதத்துக்கு இலக்ஷியார்த்தமென்றும், சோதித (சுத்த) ததபதார்த்தமென்றும் சொல்லப்படும்.

விசுவாதிகளின் வேறுபட்ட நிருபாதிகப் பிரத்தியகாதமாவே துவம்பதத்துக்கு இலக்ஷியார்த்தமென்றும், சோதித (சுத்த) துவம் பதார்த்தமென்றும் சொல்லப்படும்.

## இலக்ஷணையின்பேதம்.

மற்றும் அப்பதங்களுக்கு வியாகரணம், உபமானம், கோசம் (நிகண்டு), ஆப்தவாக்கியம், விவகாரம் (உலகவழக்கு), வாக்கியசேஷம் (சொல்லெச்சம்), விவிருதி (அகலம்), சித்தபதசாந்நித்தியம் (பெறப்பட்டபதங்களின் அண்மை) என்னும் சாமக்கிரிகளால் கடபதத்திற்குப் பெருத்தபண்டி நீண்டகழுத்துமுதலியவடிவமுள்ள கலசமே பொருள் என்னும் ஈசுவரசங்கேதத்தினுல் இப்பதத்திற்கு இது பொருள் என்று தெரிவதே சக்கியார்த்த மெனப்படும்.

வாக்கியார்த்தத்தில் அர்த்தத்திற்காவது தாற்பரியத்திற்காவது பிரகரண லிங்கஷட்காதிகளின் அநுபபத்தியுண்டாகுமிடத்துச் சக்கியார்த்தசம்பந்தமுள்ள பொருத்தமான மற்றோர் அர்த்தமும் அவ்விடத்திற் சொல்லுவதே **சக்கியசம்பந்தமான லக்ஷணை** யென்று கொள்ளப்படும்.

அந்த லக்ஷணை ஜகத் (விட்ட) லக்ஷணை, அஜகத் (விடாத) லக்ஷணை, ஜகதஜகத் (விட்டுவிடாத) லக்ஷணை யெனத் திரிவிதமாம். அவற்றிற்கு முறையே கங்காயாம் கோஷ: (கங்கையில் இடைச்சேரியுளது), குந்தா: பிரவி

சந்தி (ஈட்டிகள் செல்லுகின்றன), ஸோயம்தேவதத்த: (அவனே இந்தத் தேவதத்தன்) என்னும் மூன்றும் திருஷ்டாந்தமாம். அவற்றுள்,

## ஜகல்லக்ஷணை.

கங்காயாம் கோஷ: என்பதில் கங்காசத்தத்திற்குப் பாகீரதி ஜலப்பிரவாகம் வாச்சியார்த்தமாம். அதன்கண் கோஷசப்தார்த்தமாகிய இடைச்சேரியிருப்பது அப்பிரசித்தமாகலின் அநுப்பன்னமாய் (பொருத்தமில்லாததாய்) வாச்சியார்த்தமான ஜலப்பிரவாகத்தினைவிட்டு அதனையடுத்து அதனோடு சம்பந்தித்துள்ள தீரத்தின் (கரையின்) கண் இடைச்சேரியிருக்கிறதென்று அதன்கண் ஆசிரயத்துவம் பொருந்துவதால் பொருத்தமுள்ளதாகக் கங்காபதத்திற்குத் தீரத்தினைக் கொள்ளுவதே ஜகல்லக்ஷணை யெனப்படும்.

## அஜகல்லக்ஷணை.

குந்தா: பிரவிசந்தி என்பதில் அசேதனங்களான குந்தாயுதங்கள் (ஈட்டிகள்) சேதனசம்பந்தமின்றிப் பிரவேசிக்கின்றன வென்பது பொருந்தாமையின் குந்தசப்தத்திற்கு வாச்சியார்த்தங்களான ஈட்டிகளை விடாது குந்ததாரிகளாகிய ஈட்டிதாங்கியோரைக் கொள்ளுதலே அஜகல்லக்ஷணை யெனப்படும்.

## ஜகதஜகல்லக்ஷணை.

(பாகத்தியாகலக்ஷணை)

ஸோயம் தேவதத்த: என்பதில் "ஸ:—அவன்" என்னும் சப்தத்திற்கு முன்னறிந்து ஸ்மரிக்கப்படும் இறந்தகாலம் காசி(தூர)தேசம் பாலியவயது என்பவற்றோடுகூடியதேவதத்தனென்பவன் வாச்சியார்த்தமாவன். "அயம்—இவன்" என்னும் சப்தத்திற்கு நிகழ்காலம் இத்தேசம் (முன்னிடம்) கிழத்தனம் என்பவற்றோடுகூடிய தேவதத்தனென்பவன் வாச்சியார்த்தமாவன்.

அவன் என்னும் சொல்லிற்கு ஸ்மரிக்கப்படும் தேவ தத்தனே சக்கியார்த்தம். இவன் என்னும் சொல்லிற்குக் கட்புலனுக்கு விஷயமாகும் தேவதத்தனே சக்கியார்த்தம்.

காலம் தேசம் வயது அறிவுஎன்னும் இவற்றால் பரஸ்பரம் வேறுபட்டிருக்கும் தேவதத்தர் இருவருக்கு ஐக்கியத்தைக் கூறுதல் அவர்களது தர்மங்கள் விருத்தமாயிருத்தலால் பொருந்தாது. பேதங்கூறின் விசேஷண விசேஷியத்தன்மை கூடாது. அத்தேவதத்தரிருவரல்லாது முன் காசியில் சிறுவயதுள்ளவனாய்க் காணப்பட்ட தேவதத்தனே இத்தேசத்தில் விருத்தனாய்க் காணப்படுதலால் வாச்சியார்த்தத்தில் விருத்தமாயுள்ள அந்தக்கால அந்தத்தேச விசேஷணங்களைவிட்டு மிக்க விரோதமில்லாத விசேஷியத்தினைவிடாது சுத்ததேவதத்தனே பிரதியபிஞ்ஞைக்கு விஷயன் என்று "ஸோயம்" சத்தங்களிலிருக்கும் தேவதத்தனது ஏகத்துவத்தை இலக்ஷயித்து இவனே அவன், அவனே இவன் என்று பரஸ்பர அபேதமான தாதாத்மியம் விளங்குமாறு போதிப்பதே ஜகத்ஜகல்லக்ஷணை யெனப்படும். இதனையே பாகத்தியாகலக்ஷணை யென்றும், அர்த்தலக்ஷணை யென்றும், கன்ட லக்ஷணை யென்றும் கூறுவர். இதுவே தத்துவமஸி என்னும் மகாவாக்கியார்த்தத்தில் உதகரிக்கத்தக்கது.

## தத்துவமஸி அர்த்தம்.

தத் துவம் அஸி என்னும் பதம் மூன்றில் தத் என்னும் பதம் தன் வாச்சியார்த்தமான சர்வஞ்ஞத்துவாதிகுண விசிஷ்டனான பரோக்ஷ ஈச்சுரனையே அறிவிக்கும். துவம் என்னும்பதம் தன் வாச்சியார்த்தமான கிஞ்சிஞ்ஞத்துவாதி ஈனகுண விசிஷ்ட அபரோக்ஷனான சிதாபாச ஜீவனையே அறிவிக்கும்.

" இங்கு நாநா வென்பது சிறிதுமில்லை ", " இங்குப் பேதம் சிறிதுமில்லை. " " ஒரே அத்விதீயப்பிரஹ்மம் "

என்றல முதலிய சுருதி பிரபலத்தன்மையால் அத்வைத மே தாற்பரியவிஷயமுள்ளனவாய்ப் பிரஹ்ம ஜீவ ஐக்கியம் கூறும். சர்வஞ்ஞத்வ கிஞ்சிஞ்ஞத்வாதிகள் விரோதமாவதெப்படியெனின், பிரஹ்மமே ஜீவனாகுமிடத்துச் சர்வஞ்ஞத்துவ மில்லாமையாகிய இங்குள்ள அநுபவமே விரோதம். அன்றியும், பரோக்ஷத்துவமுண்டாகவேண்டியதில்லையாய்த் தானென்னும் சாக்ஷாத்காரமிருப்பது ஓர் விரோதம். "அதுவே நீ, நீயே அது" என்னும் பிரமாணத்தால் துவம்பதார்த்தவபேதம் தத்பதார்த்தத்தினிடத்துக் கூறப்பட்டுச் சர்வாநுபவசித்தமான கிஞ்சிஞ்ஞத்துவம் பிரஹ்மத்தின்கண் சுருதிசித்தமாகும். இத்துணை விரோதபரம்பரைக்கவகாசமாவதோடு அவிருத்தமாகும்கிரமும்வாக்கியார்த்தமும் தெரியாது வாச்சியார்த்தங்களுக் கைக்கியம் நிகழாதாகும். சுருதிதாற்பரியமான ஐக்கியத்தை நிச்சயித்தற்குப் பாகத்தியாலக்ஷணையினை யங்கீகரிக்கின் அது சித்திக்கு மென்ப தெப்படியெனின்,

தத் துவம் பதங்களுக்கு வாச்சியார்த்தங்களாகிய பிரஹ்மஜீவரிடத்தில் கிரமமாயுள்ள சர்வஞ்ஞத்துவகிஞ்சிஞ்ஞத்துவங்களையும் பரோக்ஷத்துவ அபரோக்ஷத்துவாதிகளையும் விட்டு அவிரோதசைதன்னியமாத்திரமான பிரஹ்மத்துவ உபலக்ஷித சுத்த சிவசைதன்னியத்திற்கும் ஜீவத்துவ உபலக்ஷித கூடஸ்தபிரத்தியகாத்மசைதன்னியத்திற்கும் அவவி என்பது ஐக்கியத்தினைப் போதித்து ஸபலமாவதாயிற்று.

இவ்வாறு லக்ஷிக்கப்பட்ட ஜீவப்பிரஹ்ம ஐக்கியாநுசந்தானபலத்தால் அவித்யாகற்பிதங்களான விசேஷாபாசங்களடங்கிப்போக அகண்ட சச்சிதாநந்த சிவசொரூப மொன்றே சத்தியமென்று மகாவாக்கியார்த்த தாற்பரியம் சித்தமாகும்.

## தத்துவமஸிதிருஷ்டாந்தம்.

*தத்துவமஸி வாக்கியத்தால் பிரஹ்மப் பிரத்தியகாத்மாக்களுக்குள்ள ஏகத்துவம், கடாதிவுபாதிகளை சேதித்து ஆகாச மொன்றென்பது போலும், இராமசந்திரனை மனுஷ்யத்துவம் விடுத்து நீயே விஷ்ணு வென்பதுபோலும், கர்னனை வியாதத்தன்மைக்குக் காரணமான இராதாபுத்திரத் தன்மையை விடுத்து நீயே க்ஷத்திரியத்தன்மைக்குக் காரணமான குந்திபுத்திர னென்பதுபோலும், தசமனை மரண துக்கம் விடுத்து நீயே தசமனென்பதுபோலும் சுபாவசித்த ஐக்கியமாய் அறிவிக்கப்படுகிறது.*

## வாக்கியார்த்தப்பிரதிபத்தி நிராகரணம்.

*ஒரு பூவினுக்கே சுவர்க்க முண்டென்னும் வாக்கியம் போல அபேக்ஷை யுண்டாக்குகிற அர்த்தவாத மென்றும், பிரதிமையைத் தேவதாரூபமென்னும் வாக்கியம்போல உபாசனுபரமென்றும், மனுஷ்யனைத் தேவேந்திரனென்னும் வாக்கியம்போல ஸ்துதி பரமென்றும், ஆளை யரசனென்னும் வாக்கியம்போல உபசாரமென்றம், அக்கினி மாணவகனென்னும் வாக்கியம்போலக் குணசாதிருசியமென்றும், இது கோவின் தேக மென்னும் வாக்கியம்போலச் சாதி வியக்தி பரமென்றும், கடம் மிருத்திகைக்கு அநந்யமென்னும் வாக்கியம்போலக் காரிய காரணமென்றும் நீலோற்பலமென்னும் வாக்கியம்போலக் குணகுணியென்றும், க்ஷீரந் ததிக்குப் பேதமென்னும் வாக்கியம்போல விகாரமென்றும், வாரிகணங்களேகமென்னும் வாக்கியம் போல அம்சாமிச மென்றும், பிம்பமே பிரதிபிம்பமென்னும் வாக்கியம்போலப் பிம்பப்பிரதிபிம்பபாவமென்றம், ஔபசாரிக அபேதபரமென்பதாகவும், வேறு பதார்த்தத்துள்ள அபேதபரமென்பதாகவும், அந்தரியாமி அபேதபரமென்பதாகவும், தாத்துவிக (உண்மையான) பேததாற்பரியமுடைய தென்பதாகவும், சம்பந்தமாத்திரபோதக மென்*

பதாகவும் வாதிகள் பலர் முரணிப்பேதத்தைக் கற்பித்து வாக்கியார்த்தத்தினை ஆபாஸமாகக் கொண்டனர். "சத்தியம் அத்வைதம்" "பரமார்த்தமாக அத்வைதமாம்" "நாநாவைக் கண்டு மிருத்தியுவை அடைகிறான்" "எவன் தனக்கந்நியமாக ஒன்றை யறிகிறானோ அவன் பிரஹ்மத்தையறிந்தவனல்லன்" "அஃதொன்று; நாநா வென்பது இல்லை" "இங்குப் பேதம் சிறிது மில்லை" "உள்ளதொன்றே" "உருத்திரன் ஒருவனே உளன்" "ஒரே அத்விதீய முளது" "ஒருமையையறிபவனுக்குச் சோகமேது? மோகமேது?" "நான்காவதான சிவமாகிய அத்வைதமுளது" "இது மேலும்கீழும் எங்கும் நிறைந்துள்ளது" "இவையாவும் சொப்பனம்போற் பொய்யாம்" என்று இவ்விஷயமாயுள்ள ஆயிரக்கணக்கான மிகப்பிரபலமான சுருதிவாக்கியங்கட்கு விரோதம் வருதலாலும், உபக்கிரமஉபசங்காராதி ஷட்விதலிங்கதாற்பரியத்தால் சர்வ வேதாந்தசாஸ்திரங்களிலும் அத்வைதமே தாற்பரியவிஷயமாய்ப் பரமார்த்த சத்தியமாகுதலாலும், துவைதத்திற்கு மாயாமாத்திரத்துவமும் மித்தியாத்துவமும் நிஷேதமும் சுருதிசித்தமாக அத்வைதத்திற்கு மித்தியாத்துவமும் நிஷேதமும சொல்லப்படாமையாலும், துவைதத்திற்குச் சத்தியத்தன்மையினைக் கூறச் சுருதியில் ஆதாரமில்லாமையாலும், கர்மாதி வியவகாரப்பிரகரணத்திற் கூறப்பட்ட சத்தியத்தன்மை விரோதமில்லாததாலும் பேதவாதிகள்கொண்ட வாக்கியார்த்தப் பிரதிபத்தி (விவாதம்) நிராகரிக்கப்படுகிறது.

## தத்துவார்த்தம்.

ஆனால் சுருதிகுருசுவாநுபவயுக்தி சம்மதமாய்த் தத்பதார்த்தமான சிவலிங்கமே துவம் பதார்த்தமான ஜீவலிங்கமாயிருப்பதே தத் துவம் என்பவற்றின் உண்மைப்பொருள் என்று நி கரமாய்ப் பிரமாணிக்கப்பட்டுச் சித்தாந்தமாகும்.

## மித்தியாத்வவிரோதம்.

இது விசேஷணம்சமான துவைதத்திற்கு மித்தியாத்துவம் கூறிச் சத்தியமான விசேஷிய சின்மாத்திரத்திற்கு ஐக்கியத்தினைக் கூறுதலால் அத்வைதம் சித்தியாகுமெனல் மித்தியாத்வமென்பதற்குக்கதியில்லாமல் அத்வைதம் பொருத்தமில்லாததா மென்னெனின் ஜகம் மித்தையாக மித்தையாத்தன்மை ஜகத்தின் கண்ணிருக்கலாகாது. அதற்காசிரயமில்லாமையால் எதன்கண் ணிருக்கு மென்பதற்குச் சிவம் சத்தியமாதலால் பொருந்தாது. அன்றியும் மித்தியாத்தன்மை சத்திய மென்பதோடு சிவமொன்றும் சத்தியமாம். ஆகவே சத்தியமிரண்டாகி ஏகமென்னும் சுருதிக்கு விரோதமாம். அல்லாமலும் மித்தியாத்தன்மையே மித்தையென்பதோடு சத்தியத்தன்மை மித்தியாத்தன்மை யிரண்டினுள் ஒன்று சத்தியமாயின் மற்றொன்று நிஷேதிக்கப்படும். ஒன்று மித்தையாயின் மற்றொன்று சத்தியமாகும். இவ்வாறே சுத்திரஜதத்தினைப் பார்த்து இரஜதமாகுமோ ஆகாதோவென்று சந்தேகித்துப் பின் நிச்சயித்து அநுபவிகின்றனர். பிரபஞ்சத்திலிருக்கும் மித்தியாத்துவம் சித்திக்கப் பிரபஞ்சமும் சத்தியமாகாது: சத்தாகிய அத்வைதத்திற்கு ஹானியு முண்டாகாது. அவ்வாறுதலெப்படியெனின், தூரத்துள்ள யானையைக் கண்டறியாது அது எருமையோ? குதிரையோ? என்று சம்சயப்பட்டு எருமையல்ல வென்று நிச்சயிக்குங்கால் அந்த யானையிலிருக்கும் யானைத்தன்மை சத்தியமாகாதா? என்னை? அதுபோல மித்தியாத்தன்மை மித்தையாதலால் விரோதமில்லை. மற்றும் அது மித்தையாகாமல் ஆதாரஸ்வரூபம் எப்போதும் சத்தியமாகாது. அஃது ஏனெனின், பொய் யென்னும் வார்த்தை திடமானால் பொய் பொய்யாகவே யிருக்கும். இல்லையாயின் பொய்யினது சொரூபமென்பது திடமாயறிப்படாதாய் நாநாவிகாரமாய்த் தோற்றும்

தலைவிட்ட காளப்பமே. அப்பொய்யென்னும் ஞானமுய வனத்திலுண்டாகிய அக்கினி வனத்தை எரித்துத் தானு மடங்கியபோவதுபோலத் தானே நசித்துப்போம். ஆசிர யமாத்திரமான ஸகலாதிஷ்டானமென்றறியப்பட்ட சிவ மொருவனன்றி மற்றொன்றே சத்தியம், அதற்கு வேறொன்றிய மில்லை யென்பதே சித்தாந்தமாகும்.

## மித்தையினின்றும் சத்தியம் சித்தித்தல்.

எல்லாப் பிரபஞ்சத்திற்கும் மித்தியாத்துவத்தினைக் கூறும் வேதாந்த சாஸ்திரத்தில் சுருதிவிசாரத்தினால் சத்திய மான முத்தி எப்படிப் பொருந்துமெனின், பிராந்தியினலா கிய சொப்பனஸ்திரீபோகமுதலியவற்றால் சத்திய மான வீரியஸ்கலிதமுதலியனவும், கற்பிதமான சில வைராவாதிகளைப் பற்றுதலால் சத்தியமான சம்பத்துமுத லியன சித்தித்தலும், யதார்த்தமல்லாத கண்ணாடிப் பிரதி பிம்பத்தால் சத்தியமான முகத்தின் அழகுமுதலியவற்றை யறிதலும் சித்திப்பதுபோல் மித்தியாவடிவ ஜகத்துள் ளடங்கியதான பிரணவசொரூப சுருதியின் விசாரத்தினால் பரமார்த்தமான முத்தி சித்தித்தல் பொருந்தும்.

## நிரஞ்சனத்துவசித்தி

பிரணவவாச்சியனான சிவன் ஜகத்தின் ஜன்மாதிகளுக் குக் காரணமாகி அனைத்தையுமறியும் சுதந்தரசின்மாத்திர ஞானப் பிரகாசமாகவே ஜகதனைத்தும் அறிகின்றது. சுத்தியை யறியாதவனுற்ற பிராந்தியால் பிராதிபாஸிகரஜதம் சுத்திஞான மின்றி ஸ்படிகஞானத்தினால் அறியாததுபோலச் சிவஞான மின்றி ஜகமறியாது. மற்றும் அப்பரமசிவனே ஞானவிஷய மெனப்படுதலால் வாக்கு மனதுக்கெட்டாததன்மை பங்க மாவதாகாதோ அதற்குச் சவிசேஷத்தன்மையின் அடைவுண் டாகுமே; இவ்வாபத்தியாவதோவெனின் நிஷ்களம் நிரஞ்சனம் சிவம் சாந்தம் என்னும் சுருதிவாக்கியத்தினாலேயும் இச்சித்

தாந்தம் பொருந்தாதெனின், மதுரமான ருசி நன்றாயிருக்கிறதென்னுமிடத்து எப்படி நன்மை வேறுபட்டதன்றோ அறிவென்பது குறுகி ஒன்றையு மறியாதிருக்குங்கால் சாக்ஷியானது எப்படி நிர்விகற்பவிருத்தியில் நிர்விகாரமாயிருந்தும் விருத்திகளுக்கு உயிரில்லாதிருக்க விரிந்து ஸ்வயம் பிரகாசமாகின்றதோ, அதுபோலச் சச்சிதாநந்தைகஸ்வரூப சுபாவமான பரப்பிரஹ்மசிவசைதன்னியம் ஜலம்பற்றாத தாமரையிலையினைப்போலத் துலைவதப்பற்றின்றிளைதனாலும் பற்றப்படாததா யிருத்தலின், அச்சிவத்தின்கண் நிரஞ்சனத்துவம் நிச்சயிக்கப்பட்டதாய் எப்படி முன் சர்ப்பமென்றறியப்பட்ட வஸ்துவே இது இரஜ்ஜு வென்னும் ஆப்த வசனத்தால் அபரோக்ஷமாயிற்றோ, அதுபோல ஜகத்திற்குக் காரணமாய் மாயையோடுகூடிய பரமேசுவரன் எப்போது அறியப்பட்டதோ அப்போது, நிருபாதிக நிரஞ்சன அத்விதீய பரப்பிரஹ்மமான சிவம் நிர்க்குணலிங்க மென்னும் வேதாந்தவாக்கியத்தினின்றான சப்தாபரோக்ஷத்தினால் துக்கம் நிவிருத்தியாதலால் ஞானஞ் ... னங்களுக்குச் சமானவிஷயமுடைமையால் சித்தாந்தம் குற்றமின்றியதாகும்.

## நிர்க்குணசாதனை.

அந்தப் பிரஹ்மம் உலகநியாயத்தைச் சகாயமாகக் கொண்ட அநுமானாதிகளினால் சகுணமாக நிர்க்குணம் சித்திப்பது கூடாததா மென்பதோடு பலர்அநுபவிகளாயினும், அநுபவிகள் பரவடிவினராகலின், சாஸ்திரயோனியான பிரஹ்மம் சப்தம் ஒன்றினாலேயே அளக்கத்தக்கதாய் நிர்க்குண தாற்பரியமுள்ள சாக்ஷி, சேதா (அறிகிறவன்), கேவலம்(தனி), நிர்க்குணம் என்பனமுதலிய பிரபலசுருதிகளால் அநுக்கிரகிப்பட்டதாகவே, வாதியினாற் கற்பிக்கப்பட்ட அநுமானம் அப்பிரமாணமாகிப் பிரஹ்மாதிப் பிரஹ்மவித்யாசம்பிரதாயகர்த்தர்களுக்குப் பரசிவனினின்றும் உபதே

சிக்கப்பட்ட மதம் விடாது சம்சயமின்றியிருக்கும் நிர்க்கு ணசித்தியும் நிச்சிரேயச மென்னும் கைவல்யசித்தியுமாம்.

## ஞானத்தின் பிரதிபந்தகம்.

பரப்பிரஹ்மசைதன்யமான நிர்க்குணசிவஞானம் பிர பஞ்சம் தோற்றுதல்வாயிலாகவல்லது சித்தியாததாய்ப் பாபசேஷத்தால் துவைதப்பிராந்திசம்சயங்களிருக்கப் பிர விருத்திகர்மஜடரான சம்சாரிகளுக்குச் சற்சங்கத்தினால் முக்தியடைதற்குச் சத்கர்மநிஷ்டை சிவத்தியான மானஸ பூஜாதிகளே காரணமாம். அவையில்லாதிருத்தலே பிரஹ் மவித்தைக்குப் பிரதிபந்தகமாகும்.

---

## முக்திவிக்கினத்திரயம்.

அசம்பாவனை, சம்சயபாவனை, விபரீதபாவனை என் னும் மூன்றும் முக்திக்குப் பிரதிபந்தமாம். அவையெப்படி யெனின்,

க. நீயே பரப்பிரஹ்மமாகிய பரமசிவசைதன்னிய மென்றறிந்து சிவோஹ மென்று பாவித்து நிச்சயத்தினால் சுகியாய் மோக்ஷமடைவா யென்னும் ஆராய்ச்சியுள்ள குரு வினுபதேசத்தைக் கொண்ட சிஷ்யன் பிரஹ்மத்தின் தர் மங்களான சர்வஞ்ஞத்தன்மைமுதலியவற்றைத் தன்னிற் காணாதவனாய் யான் பிரஹ்ம மல்லன் என்று பாவிப்பதே அஞ்ஞானம் (அசம்பாவனை).

உ. ஜகதஜகல்லக்ஷணையினால் தத்துவமஸிமுதலிய வாக்கியார்த்தங்களைத் தெரிந்தும் நம்பிக்கைக் குறைவால் "யான் பிரஹ்ம மாவனோ? அல்லனோ? வென்று சந்தே கிப்பதே சம்சயபாவனை.

௩. சுருதியுக்திகளால் யான் பிரஹ்மமாவேனாயினும் எனக்கு இன்னும் ஜீவத்துவம் விடுபடவில்லையாகவின் யான் ஜீவனே யென்றறிவதே விபரீதபாவனை

## விக்கினத்திரயபரிகாரம்.

அம்முக்திவிக்கினங்களான அசம்பாவனையாதி மூன்றும் கிரமமாகச் சிரவணம், மனனம், நிதித்தியாசன மென்னும் மூன்றனாலும் கெடும். அவற்றுள்,

௧. ஆப்தவசனத்தினால் ஆசௌசத்தினைக் கேட்கவே தான் சூதகமுடையவனென்று திடசரமாய் நம்புவதுபோலப் பிரத்தியகாத்மாவும் பிரஹ்மமும் ஒன்றென்னும் உபநிஷத்து வாக்கியதாற்பரியத்தினைக் கொள்ளுவதே சிரவண மெனப்படும். இதனால் அசம்பாவனை நிராகரிக்கப்படும்.

௨. அவ்வாறு கேட்கப்பட்ட வேதாந்தார்த்தத்தினை நல்லயுக்திநல்லதர்க்கங்களால் சிந்தித்தலே மனனமெனப்படும். இதனால் சம்சயபாவனை நிவிருத்தியாகும்.

௩. அச்சிரவணமனனங்களால் திடசரமாய் நிச்சயிக்கப்பட்ட அர்த்தத்தினை நிச்சலசித்தமாயிருந்து அநுசந்தித்துப் பிரஹ்மாகார அந்தக்கரணமுடையவனாயிருப்பதே நிதித்தியாசனமெனப்படும். இதனால் விபரீதபாவனையென்னும் விக்கினம் பரிஹாரமாகும்.

## சஹகாரிகாரணம்.

இக்குச் சிரவணத்தினின்றுண்டாகிய ஞானத்தினால் ஆத்மசாக்ஷாத்கார முண்டாகுதலால் சிரவணமே முக்கியமான அங்கி யெனப்படும். இத்தன்மைய சிரவணஜந்நிய பிரஹ்மஞானம் திடதரமாய் வஸ்துசாக்ஷாத்காரமாவதற்குபயோகியாய் அதற்குச் சககாரிகளாயிருக்கும் சிரவணமனனங்கள் அங்கங்களாம். அஃதெப்படியெனின்,

க. கடாதிவஸ்துசாக்ஷா[illegible] கரணமாயினும் இருளில் நிஷ்ப்பிரயோசன[illegible] ஆலோகம் (ஒளி) சககாரிகாரணமாவதுபோல [illegible] சிரவணம் தத்துவஞானத்திற்குச் சககாரிகாரணமாம்.

உ. மனனமோ பொருளை விளக்கும் தீபம் சலித்தால் காரியம் நிகழாமையின் அச்சலனத்திற்குக் காரணமான வாயுசஞ்சாரத்தைத் தடுக்கும் திரையினைப்போலச் சககாரியாம்.

௩. நிதித்தியாசனம் அத்தீபத்தின் ஒளிமழுங்குங்கால் திரியினைத் தூண்டிவிட்டுப் பிரகாசிக்கச்செய்வதுபோலச் சககாரியாம்.

## சுருதிதாற்பரியநிர்ணயலிங்கம்.

க. உபக்கிரமஉபசங்காரம், உ. அப்பியாசம், ௩. அபூர்வதை, ௪. பலம், ௫. அர்த்தவாதம், ௬. உபபத்தியென்னும் ஆறுலிங்கங்களாலும் சிரவணத்தில் தாற்பரியம் நிச்சயிக்கப்படும். அவற்றுள்,

க. (க) சாந்தோக்கியாதி சுருதிகளில் பிரகரணாரம்பத்தில் சிருஷ்டிக்குமுன் சகத்து ஒரே அத்விதீயசத்தாகவேயிருந்ததென்று அந்தப்பிரஹ்மத்துக்குச் சுவகதாதிபேதத்திரயத்தை நீக்கி அகண்டாகாரத்தைச் சொல்லுவதே உபக்கிரமம். (உ) பிரகரணமுடிவில் நாமரூபாத்மக சகத்தை அந்தப் பிரஹ்மத்திலே விலயஞ்செய்து பிரத்தியகாத்மாவுக்கு அந்தப்பிரஹ்மத்தோடுள்ள ஏகத்துவத்தைப்போதித்து, அந்தப் பிரஹ்மம் அத்வைதமென்று சொல்வதே உபசங்காரம். உபக்கிரமம், உபசங்காரமென்னுமிரண்டுங்கூடி ஒருலிங்கமாகும்.

உ. பிரகரணத்தினிடையில் தத்துவமஸியாதி வாக்கியங்களால் பிரத்தியகாத்மாவே பிரஹ்மமென்று அடிக்கடி சொல்லுவதே அப்பியாசம்.

௩. அப்பிரத்தியகாத்மா பிரத்தியக்ஷாதி பிரமாணாதீத மென்று சொல்வதே அபூர்வதை.

௪. அப்பிரத்தியகாத்மா வொருவனை யறியவே சகலமும் அறியப்பட்டனவா மென்று சொல்லுவதே பலம்.

௫. பிரத்தியகாத்மரூப நிர்விகாரப்பிரஹ்மத்துக்கு நிலைத்துள்ளதின் கதி சிந்தனை செய்யத்தக்கதா மென்னும் நியாயமிருத்தலின் சகத்தின் சிருஷ்டியாதி அநுக்கிரகாந்தமான பஞ்சகிருத்திய கர்த்திருத்துவஞ் சொல்வதே அர்த்தவாதம்.

௬. கடத்துககு மிருத்திகையும் தந்துவுக்கு ஊர்ணநாபியும் காரணமாதல்போலச் சகத்துக்குக் காரணம் பிரஹ்மமென்று சொல்வதே உபபத்தி (திருஷ்டாந்தம்)

## மனனசாமக்கிரி.

யுக்தி தர்க்க அனுமானங்களே மனனசகாயங்கள். அவற்றுள், ஆத்மா அநேகம், வியாபகமென்று சாங்கியாதியர் மதத்துள் எல்லாவாத்மாவிற்கும் தனித்தனியாக ஒவ்வோராத்மாவிற்கும் எல்லாச்சரீரங்களிலும் ஒருங்கே சம்பந்தமுண்டாகச் சர்வாத்மரும் சம்பூரணராவர். ஆகவே இவ்வாத்மாவிற்கு இசசரீரமே போக சாதனம்; வேறுசரீரமல்ல; அந்நியருக்கு இச்சரீரம் போகசாதன மல்லவென்னும் லோகாநுபவவிரோதமாகும். அஃதெவ்வாறெனின், சரீரசம்பந்த முண்டாயின் அந்நியசரீரத்துள்ள மற்றொருவனது சுகதுக்கங்கள் இவனுக்குத்தோற்றவேண்டும்; தோற்றுவதில்லை. ஒருசரீரத்தில்மாத்திரம் அபிமானமிருக்கின்றது, மற்றச்சரீரங்களில் அபிமானமில்லையாகலின் வியாபகத்துவம் பொருந்தாது. பூரணத்துவத்திற்கேதுவாவது அந்தக்கரண மன்று. அது எல்லாச்சரீரத்திலு மில்லை; அதைவிட வேறு உபாதியிருக்கின்றதெனின், அது யாது?

மூலாஞ்ஞானமெனின், அது ஒவ்வொரு சரீரத்திலு மிருத்தலால் சுகதுக்காநுபவவேற்றுமை தோற்றாததாய் அநேகவிபுஜீவாதிகளை யங்கீகரிக்கும் சாங்கியகணாதர்முதலியோர் மதம் பொருந்தாததாம்.

ஏகஜீவவாதம் கூறும்பக்ஷத்தில் ஆத்மாவிற்குக் கர்த்திருத்துவம் கூடாது.

அன்றியும், சரீரம் கர்மசாத்தியமாய் அச்சரீரத்திற்குச் சாதகமான கர்மம் எச்சரீரத்தில் செய்யப்பட்டது? அந்தச்சரீர சாதககர்மங்கள் அவ்வச்சரீரங்கட்கு முந்திய சரீரங்களான பூதசூக்ஷ்மங்களில் செய்யப்பட்டவைகளெனின், அவற்றிற்குப் பரிணாமியுபாதானகாரணமாவன அந்தந்த மூலாவித்தைகளாம். ஆகவே ஒரு ஜீவனுக்காகப் பிரஹ்மவித்தைகளைக் கற்பித்துக் கூறுவது தோஷமாகும்.

மற்றும் அவ்வவித்தையொன்றே ஆத்மா ஒருவனுக்குப் போகசாதகமான வெகுசரீரங்களாய்ப் பரிணமித்ததெனின், அவித்தியநாசமே மோக்ஷ மென்பதனால் ஒருசரீரத்தில் பிரஹ்மஞானம் வந்து முக்தியுண்டானால் சர்வசரீரங்களுக்கும் முக்தியுண்டாகவேண்டியதாயிற்று. அவ்வாறு இதுவரையில் நடக்கவில்லையேயெனின், சாஸ்திர விரோதமாகுதலால் முன்பே இந்நம்பிக்கை போதாததாய் முக்தியென்பதே யில்லாததாகவேண்டிய தாயிற்று. அஃதில்லாதிருத்தலோடு மதப்பிரவிருத்திக் கவகாசயின்மையுமாயிற்று.

மற்றும் அந்த ஜடத்திற்குக் கர்த்திருத்துவம் பொருந்தாததாய் ஏகஜீவனுக்கு ஒருகாலத்தில் அநேக ஞானேச்சைகள் நிகழ்வதால் ஏகஜீவவாதம் பொருந்தாது. ஜீவனேயில்லை யென்பதோடு சஞ்சாரவாரி ஈசனுக்காய் அவன் பெத்தனாகவேண்டியதாயிற்று. இம்மேற்கண்ட மதமிரண்டும் பொருத்தமில்லாதன வென்பதே யுக்தி. இதில் அநுபபத்தி(பொருத்தமின்மை)கொள்ளவேண்டிய தென்னெனின், அநேக ஜீவபக்ஷத்தில் வியாபகத்துவமுதலிய தோ

க்ஷத்திற் கவகாச மில்லை. பரிச்சின்னத்துவத்தில் நித்தியு த்துவமெப்படி யெனின் பரிச்சின்னத்துவம் உபாதியினு லாகிய தென்பதனால் ஹானியில்லை. மற்றும் அவ்வாறு அங்கீகரிக்கின், ஜீவனுக்குப் பரலோக கமனாகமனாதிகள் உபபந்நமா(பொருந்தமுள்ளனவா)மென்பதுவே யுக்தி.

ஏகஜீவபக்ஷத்தில் அநாதியவித்தை நாநாத்துவமும், உபாதிநாநாத்துவத்திற்குப் பிரயோஜகமாகி உபாதியினால் பந்தமோக்ஷங்களாகுதலால் பூர்ணாத்மாவில் கர்த்திருத் துவாதிகள் தோற்றுகின்றன வென்பதே யுக்தி. ஜீவேசு வரபேதமும் ஆதிகர்த்திருத்துவமும் பொருந்தாதெனின், அவைக ளநாதி யென்பதினால் ஹானியில்லை. நித்தியமாதல் என்பதனோடு அத்தியஸ்த மென்பதிலிருந்து அது நிகழா தென்பதே யுக்தி.

இவ்வாறு சுருதிவிருத்தமான அசத்யுக்தி ஆயிரங்க ளால் அவ்வவ்விஷயங்களும் பொருத்தமுடையனவாக மனனம் கொள்ளப்படும்.

தர்க்கானுமானலக்ஷணங்களோடு ஸ்ரீஹர்ஷமிசிரர் பிர ஹ்மாநந்தர்முதலிய ஆசாரியர்களால் கண்டனாதிகிரந்தங் களில் பிரசித்தம் இந்நூல் சுகாநுபவப்பிரகரணமாத லால் நூல் விரியுமென் றஞ்சி யுக்திகடினமான தர்க்காதி கள் இதில் சொல்லப்படவில்லை. வாதவிருப்புடையோர் அத்தர்க்கங்களை சிந்தாமணிமுதலிய நூல்களிற் காண்க.

## நிதித்தியாசனயோகபஞ்சகம்.

மந்திரயோகம், ஸ்பரிசயோகம், பாவயோகம், அபா வயோகம், மகாயோகமென நிதித்தியாசனரூப யோக பஞ்சக முண்டு. அவற்றுள்,

க. பிரணவாதி மந்திராநுசந்தானத்தாற் பரமாத்மா வினிடத்தில் மனோலயமாவதே மந்திரயோகம்.

உ. அந்த மந்திரயோகத்தோடு மனதும் வாயுவு மொன்றாய், மூலாதாரத்திலிருந்து சுழிமுனைநாடிமார்க்கத

நிலேறி, சிரசின் நடுவிலுள்ள பரமாத்மதேஜசினுள் அந்த மனம் இலயமாவதே ஸ்பர்சயோகம்.

௩ சுவர்க்கமே சிரசம், திக்குகளே சுரோத்திரமும், சந்திரசூரியரே நேத்திரமும், அக்கினியே முகமும், ஆகாயமே நாபியும், பூமியே பாதமுமான ஈசுரனுடைய விராட்புருஷரூபத்தை அல்லது அபயஹஸ்த ஆபரணாதி சகிதமான ஈச்சுரனுடைய திவ்வியமூர்த்தியைத் தியானித்து, பின் அந்த அவயவங்களை ஒவ்வொன்றாய் விட்டு, கன்ற அவயவிமாத்திரமான சத்ரூபப்பிரமமத்தில் மனோலயமாவதே பாவயோகம்.

௪. சரணகோசரமாகாத பிரமாணாதீதமான நிருபாதிகப்பிரமமத்தில் மனோலயமாவதே அபாவயோகம்.

௫ உற்பத்திலயங்களிலும், அறிவேன் அறிவேனென்பதும் தனக்கொரு அன்னியமில்லாமல் ஒரேவிதமாயிருக்கும் பிரத்தியகாத்மப்பிரமமத்தில் மனோலயமாவதே மகாயோகம்.

## பிரதிபந்தத்திரயம்.

பூதப்பிரதிபந்தம், வர்த்தமானப்பிரதிபந்தம், ஆகாமியப்பிரதிபந்தமென ஆத்மசாக்ஷாத்காரத்துக்கு விரோதித்திரய முண்டு. அவற்றுள்,

௧. மோக்ஷாபேக்ஷையால் சர்வசங்கபரித்தியாகம் பண்ணி, ஸ்ரீ குருவை யடைந்து சிரவணாதிகளைச் செய்தாலும் முன் கிரகஸ்தாசிரமத்தில் அங்கீகரித்திருந்த வனிதாதி வஸ்துக்களின் ரூப யௌவன சிங்காராதி சற்குணங்களை யநுபவித்த அதுவே சம்ஸ்காரபலத்தால் வந்துவந்து சுகதுக்கத்தை அடிக்கடி கொடுத்துச் சிந்திப்பித்து, ஆத்மசாக்ஷாத்காரமாக வொட்டாது தடுப்பதே **பூதப்பிரதிபந்தம்.**

௨ சீடபுத்தி, ஜனச்சேர்க்கை, விஷயாசக்தி, குதர்க்கம், அபிமானம், சபலத்துவ (சஞ்சலத்தன்மை) முதலியன

வுண்டாய்த் தத்துவவிசாரஞ்செய்யினும் ஆத்மசாக்ஷாத்கார மாகவொட்டாது தடுப்பதே **வர்த்தமானப்பிரதிபந்தம்.**

௩. தனக்குச் சில சன்மம் வந்தாலல்லது பிராரத்த விஷயந் தீராதென்கிற புத்தி, பிரஹ்மலோகவாஞ்சை யென்னும் தோஷத்துவய முடையவனாயிருந்து, வேதாந் தார்த்த மறிந்தாலும் ஆத்மசாக்ஷாத்காரமாக வொட்டாது தடுப்பதே **ஆகாமியப்பிரதிபந்தம்.**

## பிரதிபந்தநிவர்த்தகம்.

அந்தப்பிரதிபந்தம் கெடுவதற்குக் காரணமாக ஞானம் வைராக்கியம் உபரதி யென்னும் முக்கியசாதனங்களை இடைவிடாது அப்பியாசஞ்செய்தற்கு அவற்றின் காரணம் சொரூபம் காரிய மென்னு மூன்று லக்ஷணங்களைக் கிரமத்தில் வெவ்வேறாகச் சொல்லுவாம் :—

க. வேதாந்தசிரவணஜந்நிய அத்தியாசவிவேகப் பிரயோகமுள்ள சாக்ஷித்துவதரிசனமே **ஞானலக்ஷணம்.** (க) சிரவணாதிகளே **ஞானத்தின் காரணம்.** (உ) ஆத்மா கங்காரங்களின் அத்தியாசவைக்கியத்தை வேறுசெய்வதே **ஞானத்தின் சொரூபம்.** (௩) அகங்காரத்துள்ள சாக்ஷித்துவமே **ஞானத்தின் காரியம்.**

உ. போகஅநித்தியத்வதரிசனத்தா லுண்டாகிய விரசத்தன்மையோடுகூடிய விஷயமே முக்கியமான **வைராக்கியம்** (க) வைராக்கியத்துக்கு வனிதாதிவிஷயங்களில் அநித்தியத்துவாதி தோஷதரிசனமே **காரணம்** (உ) மேல் எவ்விதத்தாலாயினும் அவற்றை விடுவதே **சொரூபம்.** (௩) அவ்விஷயங்களில் பின்செல்லாமையே **காரியம்.**

௩. யோகஜந்நியசித்தத்தின் ஸ்திரத்தன்மையோடு கூடிய பாகியப்பிரபஞ்சத்தின் லயமே **உபரதி.** (க) உபரதிக்கு இயமநியமாதி அஷ்டாங்கயோகமே **காரணம்.** (உ) மனம் தன் ஸ்தானத்தில் ஏகாக்கிரமாயிருப்பதே **சொரூபம்.** (௩) நிர்விகற்பசமாதியினால் இலௌகிகம்

வைதிக மென்னும் இருவித வியவகாரமு மொழிந்து மனம் சொரூபத்தில் மக்னமா (அழுந்தி) யிருப்பதே காரியம்.

## ஞானாதிகளின் அவதி.

க. தேகாத்மபாவந் திடமானதுபோலப் பிரஹ்மமே நானென்னுந் திடபுத்தியே ஞானாவதி.

உ. பிரஹ்மலோகாதிகள் துரும்பெனக் கருதல் வைராக்கியாவதி.

ந. சுழுத்தனைப்போலச் சகல காரியங்களையும் நினையாதிருத்தலே உபரதியவதி.

## மோக்ஷகாரணம்.

அந்த ஞானம் வைராக்கியம் உபரதி என்னும் மூன்றுஞ் சித்தித்தால் அவனுக்கு அது மகாதபசின் பலமாம். அவற்றுள், ஞானமின்றி வைராக்கியம் உபரதியிரண்டும் சம்பூரணமானாலும் அவனுக்கு முத்தி கூடாது; மகா சுகஸ்தானமான பிரஹமலோகப்பிராப்தியாய். ஞானமொழிருந்து வைராக்கியம் உபரதிக ளில்லாதவனுக்கு மரத்தினுனி முறிந்தால் அதன்மே லிருந்தவனுக்கு விழும் இச்சையில்லையாயினும் விழுதல் அபாவமாதல்போலத் தேகாந்தத்தில் முத்தி சித்திக்கும். அதுவரையில் பிராரத்துவத்தாலாகிய சுகதுக்காநுபவ முண்டென்பது சித்தம். ஆதலா பிரஹ்மஞானமே முத்திக்குக் காரணம்.

## ஞானபூமிசப்தகம்.

சுபேச்சை, சுவிசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியகாமியென ஞானபூமி எழாம். அவற்றுள்,

க. நான் மூடனா யிருக்கக் காரண மென்னை? அதனைச் சுருதி குருவினா லறியவேண்டு மென்பதே சுபேச்சை.

௨. மேல் குருசாஸ்திராதிகளாற் சிறிது தோன்றும் ஞான வைராக்கிய பலத்தாலுண்டாகும் சதாசாரப்பிரவிருத்தியே விசாரணை.

௩. மேல் சுபேச்சை விசாரணைகளின் பலத்தால் விஷயப்பற்றொழிவதே தனுமாநசி.

௪. மேல் அப்பூமிகாத்திரயாப்பியாச பலத்தால் சாக்கிரப்பிரபஞ்சமெல்லாம் சொப்பனமென்று கண்டு ஆத்மாவின் சன்மாத்திராநுசந்தானமே சத்துவாபத்தி.

௫. மேல் சகலப்பிரபஞ்சத்தோற்றமுமடங்கி, சுழுத்தியைப்போல் ஆத்மா சின்மாத்திரமாக நிற்றல் அசம்சத்தி.

௬. மேல் சகல வாசனைகளு மொழிந்து காடநித்திரையடைந்தவன்போல் ஆநந்தாத்மாவில் இலயமாவதே பதார்த்தாபாவனை.

௭. மேல் உண்டில்லையென்றோது, அகங்கிருதி தோற்றாது, கேவலம் ஞப்திரூபமான அத்வைதபதத்தில் வெறுங்கடம்போல உள்ளும் புறமுஞ் சூனியமாயிருப்பதே துரியகாமி.

## சட்சமாதி.

அவ்வுபாதிக்கநுசாரிகளான திருசியாநுவித்தம், சத்தாநுவித்தம், நிர்விகற்பமெனப் பாஹ்ய ஆப்பியந்தர பேதத்தால் ஷட்சமாதிகளுண்டு. அவற்றுள்,

௧. கடாதிவிஷயசமூகத்துள் ஒன்றினைக்குறித்து அதன் நாமரூபமான மாயாம்சங்களை நன்னடையுடன் நீக்கி அதிலுள்ள அஸ்திபாதிப்பிரிய மென்னும் சச்சிதாநந்தப் பிரஹ்மாம்சத்திரயங்களை அநுசந்தானஞ்செய்வதே பாஹ்யதிருசியாநுவித்தசவிகற்பசமாதி

௨. அகண்ட சச்சிதாநந்தாத்வித்தியசொரூபம் பிரஹ்மமென்று தியானிப்பதே பாஹ்யசத்தாநுவித்தசவிகற்பசமாதி.

ரு. இந்தச் சமாதித்துவயாப்பியாசபலத்தால் பிரஹ்மாநந்தாநுபவத்தில் மனம் மக்கினமாய் நிஸ்தரங்க (அலையின்றிய) சமுத்திரம்போல நிச்சலவடிவா யிருப்பதே பாகியநிர்விகற்பசமாதி.

சா. மனத்தின்கணுள்ள காமசங்கற்பாதிகளே திருசியம். இத்திருசியத்திற்கு நான் சாக்ஷியென்னும் அநுசந்தானமே ஆப்பியந்தரதிருசியாநுவித்தசவிகற்பசமாதி.

ரு. அசங்க சச்சிதாநந்த சுவயம்பிரகாச அத்வைத சொரூபமே நானென்று சிந்தனைசெய்வதே ஆப்பியந்தர சத்தாநுவித்தசவிகற்பசமாதி.

சா. அச்சுவாநுபூதி சுகாவேசத்தால் திருசியம் சத்தமெனு மிரண்டையும் விட்டு, நிவாததீபம்போல நிர்ச்சிந்தை வடிவாயிருத்தல் ஆப்பியந்தரநிர்விகற்பசமாதி.

இந்த ஆறுவித சமாதிகளினின்று பழகிய யோகீச்சுரன் மனம் எங்கெங்கே சஞ்சரிக்கின்றதோ அங்கங்கெல்லாம் சமாதியாம்.

## ஞானபலசதுஷ்டயம்.

துக்காபாவம், சர்வகாமாப்தி, கிருதகிருத்தியத்துவம், பிராப்தபிராப்பியத்துவமென ஞானபலசதுஷ்டய முண்டு. அவற்றுள்,

க. துக்காபாவம் இகபரலோகபேதத்தால் இரண்டு விதமாம். அவற்றுள்,

(க) தூலசரீரத்தில் வியாதி தூர்க்கந்தத்துவ குரூபத்துவாதிகளும், சூக்ஷ்மதனுவில் காமக்குரோதாதிகளும், காரணதேகத்தில் ஆதிவியாதிகளுக்கு வித்தாகிய சம்ஸ்காரங்களுமாகிய மூவகைத்தாபமும் இகலோகதுக்கமாம். மித்தியாசொரூபமாகிய மாயாகாரியமான தூலசரீராதிகளின் வேறுபட்ட அத்துவிதீயப்பிரத்தியகாத்மஞானத்தின்

பின் பரமார்த்தமான போக்கிய போக்திருக்க வில்லாமை யால் அத்துக்கத்திரயசம்பந்த மில்லாதிருப்பதே இகபோ கதுக்காபாவம்.

(௨) புண்ணிய மெப்போது வருமோ, பாவ மெப்போ து போமோ வென்று மிசசிந்தனையே பரலோகதுக்கம். ஆத்மஞானத்திற்குப் பின் தாமரையிலையிற் றண்ணீர் போல அவவிருகர்மங்களும் பற்று. அஃதெங்ஙனமெனி ன், காஷ்டத்தில் நெருப்பிருக்கும்; அந்நெருப்பில் காஷ்ட மிராது. அதுபோலக் கர்மத்துவய விவகாரத்தில் விவேகி யிருப்பன்; அவனிடத்து அக்கர்ம த்துவயவிவகார மிராது. அதனால் காட்டுத்தீ பபாறியுள்ள பாவகத்தைப் பற்றி யிருக்கக்கொளாமை சேராததுபோல ஞானாக்கினிசேரு பனை அப்புண்ணியபாவங்கள் பொருந்தா. இவ்வாற்றால் அச்சிந்தனை தோன்றா திருப்பதே பரலோகதுக்காபாவம்.

௨. சர்வைசுவரியசம்பன்னனான சார்வபௌமன் முதல் இரணியகர்ப்பனீறாக முறையே ஒன்றினொன்று நூறுமடங்கதிகமாயுள்ள ஆனந்தங்கள் யாவும் ஸ்வாதுதனான விவேகிக்குண்டாயினும, அவ்வானந்தங்களெல்லாம் பிரஹ் மாம்சங்களாய அகண்டானந்தம் சித்தித்ததனால் அதுவே சர்வகாமாப்தியாம்.

௩. அவவிவேகிக்குத் தத்துவஞான முண்டாதற்கு முன் இகலோக சம்பந்தமான இஷ்டப்பிராப்தி அனிஷ்ட நிவிருத்தியின் பொருட்டுக் கிருஷி வாணிச்சியாதிகளும், சுவர்க்காதிசித்தியின் பொருட்டு யாகோபாசனாதிகளும, மோக்ஷசாதன ஞானசித்தியின் பொருட்டுச் சிரவணாதிக ளுமாகிய மூவகைக் கர்த்தவ்விய மிருந்தது. தத்துவஞான முண்டானபின் சமுசாரபுத்தியோடு இகபோக இச்சையில் லாமையால் கிருஷிமுதலான வியாபாரமு மில்லை. சாள ரத்தின் வழியுட்புகுந்த சூரியகிரணத்தில் காணப்படும் பர மாணுக்கள், வெளியிலுள்ள பிரகாசத்திற் காணப்படாதது

போல அஞ்ஞானிக்கு விஷயமாய் கர்மமெல்லாம் ஞானியனிடத்துத் தோற்றுமையால் யாகோபாசனாதிகளும அனுஷ்டிக்கத்தக்கனவாத லில்லை. பிரஹ்மானந்தசாக்ஷாத்கார மிருத்தலான் சிரவணாதிகள் செய்யப்பட்டனவேயாம். இதுவே **சிருதகிருத்தியத்துவம்.**

௪. தனக்கு விசிஷ்ட புண்ணிய பரிபாகம். முமுக்ஷுத்துவம், குருபாதசேவை, சாஸ்திரசிரவணம், ஆத்மாநாத்மவிவேகம், அஞ்ஞானநிவிருத்தி, ஆத்மசாக்ஷாத்காரம், சமுசாரதுக்கநிவிருத்தி, நிசாநந்தப்பிராப்திமுதலிய சித்திகளே **பிராப்தப்பிராப்பியத்துவம்.**

## முத்தித்துவயம்.

சீவன்முத்தி, விதேககைவல்லியமென முத்தித்துவயமுண்டு. அவற்றுள், விவேகிக்கும் அகமாதமருக்கும் அந்நியோந்நியசம்பந்தலக்ஷணம் சமானமா யிருந்தாலும், விவேகிக்கு இதயக்கிரந்தி யெல்லாம் சிதைந்தமையால் பரசரீரத்திற்போல சுவசரீரத்திலும அபிமானமில்லை. பிராரத்தபோக அநுபவ ஒப்புமையால், சாக்ஷாத்காரமற்ற பாலராதியர்போல மந்தாநுசந்தானத்தால், போகவிரபிமானமுமாய்க் கட முற்பத்தியானதற்குமேல் குலாலன் சக்கரம் சுழலுமாப்போலப் பிராரத்த வாசனாபலத்தால் சஞ்சரிக்கிறதே **சீவன்முத்தி.**

பிரஹ்மஞானோதயமானபின் சூரியோதயத்தால் இருள்கெடுவதுபோல ஞானத்தால் அஞ்ஞானகாரியமான சரீராதிக ளழிந்து விதேககைவல்லியமாதலேயன்றி இடையில் சீவன்முத்தியுளதெனல் எங்ஙனமெனின், விவேகத்தால் இரச்சுசாப்பப்பிராந்தி கெட்டாலும் அதன் காரியமான பயநடுக்கங்க ளிருப்பதுபோல, ஞானத்தால் அஞ்ஞானமழிந்தாலும் அதன் காரியமான சரீராதிகளுக்கு ஸ்திதியிருத்தலான் பிரஹ்மவித்தியோற்பத்திகாலத்திலேய

அஞ்ஞானத்தோடு அதன் காரியமான தேகாதிகளும் சிறிதுமின்றிக் கெடுமாயின் பிரஹ்மவித்தியாசம்பிரதாயம் கெடும். அங்ஙனம் கெட்டால் ஈச்சுரனால் பிரஹ்மனும், பிரஹ்மனால் பிரசாபதியும், பிரசாபதியால் மநுவும், மநுவால் சகலரு மறிந்தாரென்று பிரஹ்மவித்தியாசம்பிரதாயத்தைக் கூறும் சாந்தோக்கிய பிருகதாரணியாதி சுருதிக்கு விரோதமாம். ஆதலால் அஞ்ஞானிக்குச் சீவன்முத்தி சித்திக்கும்பொருட்டுப் பிராரத்தகர்மவாசனையஞ்ஞானலேச மிருப்பதாக அங்கீகரிப்பதனால் தேகஸ்திதியும், சிஷ்யோபதேசாதிகளும் சித்திக்கும்.

## ஞானப்பிரபாவம்.

சீவன்முத்தனுக்குச் சஞ்சிதகர்மம் ஞானக்கினியால் அற்பபுற்போலத் தகிக்கப்படும். பிராரத்தகர்மம் புசித்துத் தொலையும். ஆகாமியகர்மம் கர்த்திருத்வப்பிராந்தியின்மையால் பலியாதென்று அநுமிக்கப்படும். ஞானக்கினியால் தகனமான சஞ்சிதகர்மமே பிராரத்தபோக மீவதனால் மேல் தேகோற்பத்தியைச் செய்யுமெனில், வறுத்த கடலைமுதலியன புசித்தற்குமாத்திரம் உபயோகமாவதல்லது அங்குரோபற்பத்திக்கு(முளையுண்டாதற்கு)க் காரணமாகாததுபோல ஞானக்கினியால் தகிக்கப்பட்ட கர்மம் பிராரத்தபோகத்துடனே தீருவதல்லது சன்மாந்தரத்துக் கேதுவாகாது. அப்பிராரத்தகர்மமானது லோகயாத்திரைகளை அதிகரியாத நம்மனோர்முதலிய நரருக்கு ஒரு சரீரத்திற்குரியதாம். அதிகாரபுருடருக்குப் பல சரீரத்திற்கேதுவாயினும் ஞானத்துக்குத் திரோதான மில்லை. எப்படியெனின் பால்ய கௌமார வார்த்திகாதி பேதமுண்டானாலும் தேக மொன்றேயாதல்போல வென்றறிக.

## ஞானியின் போகசித்தி.

சகலவிஷயத்துக்கும் மித்தையாத்துவஞ்சாதிக்கும் ஞானத்துக்கும், விஷயங்களுக்குச் சத்தியத்துவஞ்

சாதிக்கும் பிராரத்தபோகத்துக்கும் அந்நியோந்நிய விரோதமிருத்தலால் ஞானிக்கெப்படிப் போகசித்தியாமெனின், மித்தையாகிய சொப்பன இந்திரசாலாதிகளில் கிரமமாக வுண்டாகும் வனிதாதிசுவர்க்காதித் தோற்றங்களில் மைதுனாதிவிஸ்மயாதிவிசயபோகமாவதுபோல வியாவகாரிக பிராரத்தபோக விஷயங்களுக்குச் சத்தியத்துவதரிசன முண்டானாலல்லது ஆகாதென்னும் நியமமில்லை. ஆகையால் பிராரத்தபோகத்துக்கும் ஞானத்துக்கும் அந்நியோந்நியவிரோத மில்லை. அதனால் ஞானிக்கும் பிராரத்தபோக முண்டென்பது சித்தம். இவ்விடத்தில் பிராந்தி கெட்டால் அந்தக்ஷணத்திலே சுத்திகாரசிதசொரூபத்துக்குக் கேடுண்டாவதுபோல, ஞானத்தால் அஞ்ஞானமழிந்தமாத்திரத்திற் பிரபஞ்சமே தோற்றாமையால், விவேகிக்குப் பிராரத்தபோகம் எங்ஙனமாமெனின், சுத்திகாரசித மென்பது நிருபாதிகப்பிரமமாதலாற் றெளிந்தபோது இரஜதசொரூபத்துக்கு ஹானியுண்டாம். இது சோபாதிகப்பிரமமாகலின் அங்ஙனமன்று. மற்றெங்ஙனமெனின், தெளிந்த குளத்தின் தீரத்திலிருப்பவன் தான் அந்தச் சலத்தில் அதோமுகனாகித் தோன்றுவது பொய்யென்று நிச்சயித்தகாலத்தும் அவ்வதோமுகம் தோன்றுவதுபோல, அகங்காரசம்பந்தமான சீவத்துவமுதலிய யாவும் மித்தை; சத்தியமான பிரத்தியகாத்மா தானென்றறிந்தகாலத்தும் சீவத்துவாதி பிரபஞ்சத்தோற்ற மிருத்தலால் சீவன்முத்தனுக்குப் பிராரத்தபோகவிவகாரம் அங்கீகரிக்கப்படுவதாகும்.

## சீவன்முத்தனுக்குச்சற்குணசதுஷ்டயம்.

அச்சீவன்முத்தனுக்கு மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷையெனச் சற்குணசதுஷ்டய முண்டு. அவற்றுள்,

க. சற்புருஷசிநேகமே மைத்திரி.

துக்கிகளிடத்திலுண்டாகும் இரக்கமே கருணை.

௩. புண்ணியாதிகாரிகளிடத்திலுண்டாகும் சந்தோஷமே முதிதை.

௪. பாபிகளிடத்தில இராகத்துவேஷமில்லாததே உபேக்ஷை.

## ஜீவன்முத்தனுக்குப்பஞ்சப்பிரயோசனம்.

ஜீவன்முத்தனுக்கு ஞானரக்ஷை, தபசு, சர்வசம்வாதம், துக்கக்ஷயம், சுகாவிர்ப்பாவம் என்னும் பஞ்சப்பிரயோசன முண்டு. அவற்றுள்,

௧. வாசனைக்ஷயமனோநாசங்களால் புத்தி நிர்மலமா யிருப்பதே ஞானரக்ஷை.

௨. மனவிந்திரியங்களின் ஏகாக்கிரமே தபசு.

௩. தபோநிஷ்டையுடைமையால பாலனமுதல் பண்டிதன் வரையிலுள்ள யாவரும் யோகீச்சுரரென்று வந்து நமஸ்காராதிகளைச் செய்வதே சர்வசம்வாதம்.

௪. அஸ்மிதைமுதலிய பஞ்சக்கிலேச மில்லாதிருப்பதே துக்கக்ஷயம்.

௫. அச்சாதனங்களால் தனக்கொன்றும் பிரதிபந்த மில்லாதிருப்பதே சுகாவிர்ப்பாவம்.

## ஞானிசின்னங்கள்.

காமக்குரோதாதி ஆறுபகைவர்க்கங்களும் முமுக்ஷுக்களுக் கநுக்கிரகார்த்தமாய் நடனமாத்திரமாவதாய் அவற்றிற்குட்படாது பற்றின்றியவனாயிருப்ப தெப்படியெனின், முமுக்ஷுவுக்குப் பிரியமுண்டாகுதற்பொருட்டுச் சிவத்தியானமுதலியவற்றைச் செய்யவேண்டுமென்று வருவது காமம்.

அசத்விஷயத்தில் குரோதம். அபாத்திரனுக்குக் கொடுக்கலாகாதென்று பிரஹ்மவித்தையைச் சொல்லாதிருப்பது லோபம். பிறருக்கு உபகாரஞ்செய்யவேண்டுமென்பதனால் துக்கிகளிடத்துண்டாம் தயையென்பதே மோகம். அசத்விஷயங்களைக் கொள்ளாது சிஷ்டனாயிருப்பனென்பதே மதம் இந்திரியங்களை ஜயிப்பேனென்பதே மாற்சரியம். இவை நடிப்புமாத்திரமாம். இயல்பாய்ச சிந்தித்துள்ள திடதரமான சாந்தி, சாத்வீகசம்பத்து, சர்வபூதசமத்துவம், வைராக்கியம், அத்தியாத்மசிந்தை, நிச்சலசாந்தி, அகங்காரமமகாரமின்மை, நித்தியத்திருப்தி, பயமின்மை, சோகமின்மை, பரிசுத்தத்தன்மை, சிஷ்யனைத் தன்னைப்போலாக்குதல் என்னும் பன்னிரண்டு குணங்களும் ஞானியின் சின்னங்(குறி)களாகும்.

## குணமிகுதிப்பாடு.

ஞானியாகிய ஜீவன்முக்தன் அவகுணமுடையவன் போல் லீலையாக நடித்துக்காட்டினும், அவனிடத்துப்பெரும்பாலும் அஹிம்சை, பரோபகாரம், சௌசம், தபசு, சத்தியம், சாந்தி(மனவடக்கம்), தாந்தி(இந்திரியவடக்கம்), திதிக்ஷை, தயை, தாக்ஷண்யம், மிருதுதுவம், விரக்தி, புண்ணியம், விவேகம், பரிசுத்தத்தன்மை, சிரவணாதி சாதனம், தீனத்துவமின்மை, தெய்வபக்திமுதலியவைகள் அவனிடத்துக் காணப்படும் குணங்களுள் மிகுதியாகக் காணப்படுவனவாம்.

## ஞானியினால் இவ்வுலகிற்குண்டாம் பயன்.

அந்த ஞானியிருக்கும் தேசம் உபத்திரவமில்லாதிருக்கும். அச்சீவன்முத்தனால் உதாசீனன்,* பாபி, சிஷ்யன் பக்தன் என்போர்க்கு அநுக்கிரக முண்டாம். அஃதெப்படியெனின், அவனது பரிசுத்தமான சரித்திரத்தைக் கண்ட உதாசீனருக்குப் புண்ணியகிருத்தியவிருப்பமும், அவன்

தரிசனபரிசனங்களால் பாபிகளுக்குப் பாபக்ஷயமும், அவனை நம்பும சிஷ்யனுக்குத் தத்துவோபதேசத்தினுல் முக்தியும், அவனை அன்போடு வழிபடும் பத்தனுக்குப் புண்ணிய முதலிய சாதனமு முண்டாம். கர்த்திருத்வாதிகர்ம மில்லாத சீவன்முத்தனுல் வேதாந்தவாக்கிய சத்தியதாற்பரிய பிரமாண அநுகூலதர்க்க திருஷ்டாந்தயுக்திகளால் முயற்சியோடுகூடிய பிரஹ்மோபதேசாதிக ளெங்ஙனம் கூடுமெனின், மறைப்பின்றிய பிரஹ்மசொரூபமா யிருத்தலால், இராகத்துவேஷாதிகளில்லாத ஈச்சுரனுக்கு ஜனங்களுடைய புண்ணியபாபவசத்தால் அநுக்கிரகநிக்கிரக சேஷ்டை யுண்டாவதுபோலச் சாதகருடைய புண்ணியாதிப்பிரபாவத்தால் ஞானிக்கும் ஞானோபதேசாதி செய்தல் கூடும்.

## ஜீவன்முக்தப்பிராரத்தம்

சீவன்முத்தர் சொல்லப்பட்ட லக்ஷணங்களோ டிராமல் வெகுவிதமாயிருப்ப தென்னெனின், பிராரத்தகர்ம சம்ஸ்காரமானது தீவிரம், மத்தியம், மந்தம், சுப்தமெனச் சதுர்வித முண்டு. அவற்றுள்,

க. தெளிந்த ஞானியாயினும் போகத்திலேயே தற்பரனுய்ப் பசுவைப்போல ஆத்மப்பிரீதிமாத்திரமா யிருப்பதே தீவிரசம்ஸ்காரம்.

உ. போகச்சிறப்பைப் பொருந்தியவனுயினும், எப்போதும் தான் ஆத்மதற்பரனுய்ப் பாலனைப்போல விநோத மாத்திரமாயிருப்பதே மத்தியசம்ஸ்காரம்.

ங. போகதாற்பரியத்தில் உன்மத்தனைப்போல கிச்சித மில்லாதிருப்பதே மந்தசமஸ்காரம்.

ச. சர்வ வியாபாரமு மழிந்து நிருபாதிகாத்மாவினிடத்தில் தற்பரனுய்ப் பரமுத்தனைப்போலப் பரமசுகத்தில்

இருப்பதே சப்தசம்ஸ்காரம். இப்படி நாநாவிதமான பிராரத்தகர்மசம்ஸ்காரத்தால் சீவன்முத்தர் நாநாவித மான ஒழுக்கங்களோடிருக்கினும் நேராகவும் கோணலாக வும் செல்லும் நதிகள் பலவும் சமுத்திரசம்பந்தத்திலொன் றேயாவதுபோல முடிவில் பிரஹ்மசொரூபமாயிருக்கிற விதேகமுத்திசுகம் ஒரேவிதமாம்.

## பிராரத்தத்திரயம்

இச்சாப்பிராரத்தம், அநிச்சாப்பிராரத்தம், பரேச்சாப் பிராரத்தமென மூவகைப்பிராரத்தங்கள் பிரஹ்மாதிக ளாலும் நீக்கக்கூடாதனவாம். அவற்றுள்,

க. தனக்கு அபத்தியசேவனமுதலியவற்றால் துன் பம் வருமென்றறிந்தவிடத்தும் இச்சைமிகுதியால் விடாது அதனையே செய்விப்பது இச்சாப்பிராரத்தம்.

உ. தான் செய்யக்கூடாதென் றிருந்தாலும் இரா சாக்கினைபோல் பலாத்காரமாக இம்சாதிகளைச் செய்வித் தலே அநிச்சாப்பிராரத்தம்.

ந. தனக்கு இச்சையநிச்சைகளில்லாதிருந்தாலும், பரதாக்ஷண்ணியத்தால் சுகதுக்காதிகளை ஊட்டுவிப்பதே பரேச்சாப்பிராரத்தம்.

## சீவன்முத்தர்களுடைய விசித்திர சரித்திரம்.

இத்திரிவித பிராரத்தாநுசாரத்தால் சீவன்முத்த ருக்கு விசித்திரசரித்திர முண்டென்பதற்கு "कृष्णो भोगी शुकस्त्यागी नृपौ जनकराघवौ। वसिष्ठः कर्मनिरतः पंचैते ज्ञानसम्मताः ॥ दत्तात्रेयस्तथोन्मत्तः प्रह्लादो भक्तिनम्रधीः। नारदो गानलोलस्तु सनकाद्यास्तु योगिनः। हनुमानपि दूतोभूज्जीवन्मुक्ता इमे मताः ॥ கிரு ஷ்ணபகவான் போகி, சுகர் தியாகி(சந்நியாசி), ஜனகரும் இராகவரும் அரசர்கள், வசிஷ்டர் கர்மஞ்செய்பவர் இவ் வைவரும் ஞானமுள்ளவராகக் கொள்ளப்பட்டவர்கள்,

அவ்வாறே தத்தாத்திரேயா உன்மத்தர், பிரகலாதர் பக்தியினால் வணங்கிய புதசியடைவர், நாரதா கானலோலர், ஸநகாதியர் யோகிகள், அருணன் நூதரெனவிருந்த இவர்கள் ஜீவன் முக்தர்களென்று மதிக்கப்பட்டவர்களாவார்" என்னும் வாக்கியத்தினால் ஸநகர், ஜநகர், சடபரதர், யாஞ்ஞவல்கியர், சுகர், வாமதேவர், பிரகலாதர், கௌதமர், வசிஷ்டர், வான்மீகர், விசுவாமித்திரர், தூர்வாசர், வியாசர், நாரதர், பிருகு, சௌபரி, ததீசி, சுவேதகேது, தத்தாத்திரேயர், இராமகிருஷ்ணா, வாயுபுத்திரர், பரத்துவாஜர், சுக்கிரர், இராவணன், பாணன், விருஷபர், முதலியோர்களது ஒழுக்கபேதமே நிதரிசனமாம்.

## அஞ்ஞானிக்கும் ஞானிக்கும் பேதம்.

இவ்வாறு ஞானிக்குப் பிராரத்தபோகம் அங்கீகரிக்கின் அஞ்ஞானிக்கும் ஞானிக்கும் பேதமென்னையெனின், விராத்தியர் சுரோத்தியர்களுக்கு வேதாத்தியயனபரித்தியாகம் வேதாத்தியயனமுடைமை யென்பவற்றால் பேதமேயன்றி, ஆகாரம் நித்திரைமுதலியவற்றாற் பேதமில்லை. அதுபோல அஞ்ஞானிக்கும் ஞானிக்கும் இதயபந்தமுறுதல் இதயபந்தமுறாமை யென்பவற்றால் பேதமேயன்றிப் போகஸ்திதியிற் பேதமில்லை.

## தன்நாசப்பிரயத்தினமுண்டாதல்.

தத்துவஞானத்தால் பிரஹ்மத்தையடையின் அக்கணமே புலியைக் கண்டாற்போலச் சீவத்துவம் கெடுமாகலின் தன் நாசத்துக்கு எப்படிச் சீவன் பிரவர்த்திப்பனெனின், தேவத்துவவாஞ்சையால் கங்கை பிரயாகையாதிகளில் நரத்துவபரித்தியாகம் அங்கீகரிப்பதுபோல, பிரத்தியகாத்மப் பிரஹ்மரூபமாக வேண்டித் தத்துவஞானத்தால் தன்னை நாசஞ்செய்ய உடன்படுவன்.

## சீவன்முத்தர்பெருமை.

வியாசாதிகள்போலச் சாபானுக்கிரக சாமர்த்திய மெவனுக்குண்டோ அவனே தத்துவஞானியல்லாமல் வேறொருவனுகானெனின், அச்சாமர்த்தியம் தபசின் பயனேயல்லால் தத்துவஞானத்தின் பயனன்று. அன்றியும், தத்துவஞானத்துக்குத் தபசே மூலமென்றுங் கூறுகியிருத்தலால் தபோரகிதனுக்குத் தத்துவஞானமே பேறெனின், சாபாதிகளுக்குக் காரணம் காமியதபசென்றும், நிஷ்காமிய தபசினால் தத்துவஞான முண்டாமென்றும் அறிக. அவ்வியாசாதிகளுக்குத் தத்துவஞானம் சாபாதிசாமர்த்தியமிரண்டுமிருந்த தென்னெனின், அவர்களுக்கு இருவகைத்தவமுமிருத்தலால் ஞானம் சாமர்த்தியமென்னு மிரண்டு பயனுமுண்டு. ஒவ்வொன்றை யாசரித்தவனுக்கு ஒவ்வொன்றேசித்திக்கும். அதனால் விரோதமில்லை. சாபாதிசாமர்த்திய மின்றிய விதிகுனியனை தத்துவஞானியைக் கிரியாநிஷ்டரெல்லோரும்நிந்திக்கிறார்களே யெனின், கிரியாநிஷ்டர்களையும் விஷயத்திலழுந்திய மூடர் நிந்திக்கிறார்கள். அந்நிந்தையால் அவருக்கு வைஷம்மிய மில்லை. அந்த விஷயலம்பட(விஷயப்பற்றுடையோ)ரது நிந்தையால் கிரியாநிஷ்டருக்கு ஹானியில்லாதது போலத் தேகாத்மபுத்தியுள்ள கிரியாநிஷ்டர் செய்யும் நிந்தையால் தத்துவஞானிக்கு யாதொரு ஹானி(கெடுதி)யுமில்லை.

சீவன்முத்தன் இலௌகிகனுதலால பிராரத்தவசத்தால் அறிவுடைமை அறிவின்மையாகிய அவஸ்தைகளிலிருந்தாலும் வாயுவசத்தால் சிதறியும் சிதறாமலிருக்கும் மேகபடலமுள்ள ஆகாயம்போல நித்தியநிர்மலனுவான். மற்றும் அதிருஷ்டமென்னும் பரிசாரகனால் புஷ்பசந்தனாதி போகங்களைக் கிரகித்தும் தன்கணவனிடமே பற்றுள்ள ஸ்திரீயினைப்போலச் சொரூபத்தில் இரமித்திருப்பன். மூடனைப்போலக்கலாஞானத்துள் மௌனியாயிருந்தாலும்,

கற்பிதத்துவைதபரமான சுருதிவாக்கியமாகிய வைகரிவிஷயத்தில் ஆலசியனாவன். மற்றும் பிரஸ்துத மறியாத வெகு பாஷிதனைப்போல என்ன வசனித்தாலும், கூடவபிப்பிராயத்தை யடக்கிய சத்தியாத்துவைதநிஷ்ட நிகமாபிப்பிராயமாகும். மற்றும், ஆசாரியனைப்போலச் சிஷ்யருக்கு உபதேசித்தாலும், ஆத்மா நித்தியமுத்தனாதலால் போத்தியபோதகத்துவங்கள் மாயாசிருஷ்டிவடிவின வென்று செய்துள்ள நிச்சயத்தால், ஆகாயவாணிபோலக் குருத்துவாபிமான மில்லாதவனா யிருப்பன். மற்றும் உன்மத்தனைப்போல, அநுசிதத்தைப் பேசுபவனானாலும் துவைதபாவமழிந்து ஆத்மாராமனா யிருத்தலின், சுரதசமயத்து அதிகாமாசமுள்ள மிதுனவாக்கியம் போல அநபிதேய(சொல் [illegible]ரிய) விஷயமாகும். மற்றும் கவீசாக்கிரகண்யனைப்போலக கல[illegible]லெனப்பேசினாலும், பூரணைக்கிய சுபாவநிஷ்டனாவதனால், விரகிகள் மனம்போல அப்பிராப்பியாநுசந்தனமாகும். மற்றும், புத்திர வியோகாநுபவமுள்ள கிராம்மியசனங்களைப்போலச் சோகஞ்செய்தாலும் சர்வேந்திரியங்களும் பிரஹ்மாம்சங்களென்று ஆலோசனை செய்யாதே கற்பிதசாதகாவஸ்தையில் நிக்கிரகித்த சர்வேந்திரியதர்மவிஷயமான கருணாரசமாகும். மற்றும், விவிதவெகுரூபதரிசன விநோதத்துள் அட்டகாசஞ்செய்தாலும், விசித்திர புண்ணிய பாபாதி விகாரமுஞ் சத்தியமென்று பிரதிபாதிக்கிற மீமாம்சாதி தரிசனவிஷயமான பரியாசமாகும். மற்றும், விடனைப்போல ஸ்திரீலோலனாயிருந்தாலும் பூரணைக்கிய சுபாவனாவதல்லாமல் நிசாநந்தாநுபவியாவன். மற்றும் சத்துருவைப்போலக் குரோதத்தால் சந்தாபஞ் செய்தாலும் க்ஷேத்திரதகனாக்கினிபோல விசிஷ்டபல சம்பத்துக்கு ஆசிரயஞ்செய்வனென்று விசுவாசஞ் செய்யவேண்டும்.

## விதேககைவல்லியமடையுங்கிரமம்.

மேல் எக்காலத்திலும் எத்தேசத்திலும் யாதொரு சரீரமும் அ[illegible]டயாதே சச்சிதாநந்தப் பிரஹ்மசொரூபத்தி

விருப்பதே விதேககைவல்லியமாம். அந்த விதேககைவல்லிய மடையும் கிரமமாவது ஒரு முமுக்ஷுவுக்கு நித்தியகர்மானுஷ்டானத்தால் தர்மோற்பத்தியும், தர்மோற்பத்தியால் பாபக்ஷயமும், பாபக்ஷயத்தால் சித்தசுத்தியும், சித்தசுத்தியால் சமுசாரதோஷதரிசனமும், சமுசாரதோஷதரிசனத்தால் விஷயவிரக்தியும், விஷயவிரக்தியால் மோக்ஷாபேக்ஷையும், மோக்ஷாபேக்ஷையால் பாகியகர்மபரித்தியாகமும், பாகியகர்மபரித்தியாகத்தால் யோகாப்பியாசமும், யோகாப்பியாசத்தால் பிரத்தியகாத்மப்பிரீதியும், பிரத்தியகாத்மப்பிரீதியால தத்துவமசிவாக்கியவிசாரமும், தத்துவமசிவாக்கியவிசாரத்தால் அத்வைதஞானமும், அத்வைதஞானத்தால் அவித்தியாநாசமும், அவித்தியாநாசத்தால் துவைதப்பிராந்திநஷ்டமும் துவைதப்பிராந்திநஷ்டத்தால் சுகதுக்கபரித்தியாகமும், சுகதுக்கபரித்தியாகத்தால் இராகத்துவேஷஹானியும், இராகத்துவேஷஹானியால் விதிநிஷேதநிரசன(நீக்க)மும், விதிநிஷேதநிரசனத்தால் புண்ணியபாபக்ஷயமும், புண்ணியபாபக்ஷயத்தால் தேகாபாவசித்தியும், தேகாபாவசித்தியால் சர்வபாபவிமோசனமுமுண்டாம். சர்வபாபவிமோசனத்தால் சர்வோத்கிருஷ்டமான பரமஸ்தானமும், புநராவிருத்திரஹிதமும் (மீட்சியின்றியதும்), சகல சாஸ்திரமுடிவாய் நாம சாதிக் கிரியா வாசனைகள் புகாததும், மனோவாக்குகளுக்கெட்டாததுமான நித்தியாநந்தசொரூபமாயிருத்தலாகிய விதேககைவல்லியமுண்டாம்.

இதுவே சுருதி ஆசாரியப்பிரசாதசித்தி. இதுவே சகல சாஸ்திரார்த்தநிர்ணயம்.

## விவேகசிந்தாமணியில்

### வேதாந்தபரிச்சேதம்

### முடிந்தது.